# நடப்பு நிகழ்வுகள் - பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் 2020

## அட்டவணை


| தலைப்புகள் | பக்கம் |
|---|---|
| முக்கிய தினங்கள் | 3 |
| தமிழ்நாடு | 9 |
| மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் | 24 |
| தேசிய நிகழ்வுகள் | 26 |
| இந்தியா மற்றும் இதர நாடுகள் | 38 |
| சர்வதேச நிகழ்வுகள் | 39 |
| நியமனங்கள் | 41 |
| திட்டங்கள் | 43 |
| குழுக்கள் | 43 |
| பிரபலங்கள் | 44 |
| அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுற்றுச் சூழல் | 45 |
| மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள் | 48 |
| பாதகாப்பு | 50 |
| பொருளாதாரம் | 53 |
| விளையாட்டுகள் | 58 |
| விருதுகள் | 62 |
| இரங்கல் செய்திகள் | 65 |
| அட்டவணை, தரவரிசை மற்றும் அறிக்கை | 67 |
| கோவிட்-19 பற்றிய தகவல்கள் | 80 |

APPOLO STUDY CENTRE

# முக்கிய தினங்கள்

| | |
|---|---|
| பிப்ரவரி 2 | உலக ஈரநில நாள் |
| பிப்ரவரி 4 | உலக புற்றுநோய் நாள் |
| பிப்ரவரி 10 | தேசிய குடற்புழுநீக்க நாள் |
| பிப்ரவரி 13 | இந்திய தேசிய பெண்கள் தினம் |
| பிப்ரவரி 19 | மண் சுகாதார அட்டை நாள் |
| பிப்ரவரி 21 | சர்வதேச தாய் மொழி நாள் |
| பிப்ரவரி 28 | தேசிய அறிவியல் நாள் |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| மார்ச் 1 | பாகுபாடு காட்டாத நாள் (நீடித்த வளர்ச்சி இலக்கு5: பாலின சமத்துவம்) | **மையக்கருத்து:** பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக பாகுபாடு காட்டக்கூடாது. |
| மார்ச் 1 | உலக குடிமை பாதுகாப்பு நாள் | மையக்கருத்து: குடிமை பாதுகாப்பு மற்றும் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு முதலுதவி செய்பவர் |
| மார்ச் 3 | உலக வனஉயிரின நாள் | மையக்கருத்து: ‘‘பூமியில் அனைத்து உயிர்களையும் வாழச்செய்தல்’’ |
| மார்ச் 3 | உலக கேட்டல் நாள் | மையக்கருத்து: வாழ்க்கைக்காக கேட்டல். செவித்திறன் இழப்பு உங்களை கட்டுப்படுத்த அனுமதிக்காதீர்கள் |
| மார்ச் 4 | தேசிய பாதுகாப்பு நாள் | விழிப்புணர்வு இல்லாமையால் அசம்பாவிதங்கள் மற்றும் விபத்துகள் ஏற்படாமல் தடுப்பதற்காக பாதுகாப்பு வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல். |
| மார்ச் 7 | அனைவருக்கும் மருந்துகள் நாள் | ஜெனரிக் (பொதுவான) மருந்துகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் அவற்றின் பயன்பாட்டை ஊக்குவித்தல் |
| மார்ச் 8 | சர்வதேச பெண்கள் தினம் | **மையக்கருத்து:** ‘சமத்துவமான உலகமே செயல்படுத்தப்பட்ட நாள் ஆகும்.’ |
| மார்ச் 12 | உலக சிறுநீரக நாள் | மையக்கருத்து: ‘‘அனைவருக்கும் எங்கேயும் சிறுநீரக சுகாதாரம் - தடுப்பு முதல் கண்டபிடித்தல் வரை மற்றும் கவனிப்புக்கு சமமான அணுகல்’’ |

| | | |
|---|---|---|
| மார்ச் 13 | உலக தூக்க நாள் | மையக்கருத்து: சிறந்த தூக்கம், சிறந்த வாழ்க்கை, சிறந்த கோள். |
| மார்ச் 14 | உலக பை (Pi) நாள் | பை என்பது ஒரு மாறிலியைக் குறிப்பதற்காக கணக்கில் பயன்படுத்தப்படும் ஒரு குறியீடு ஆகும். இது ஒரு வட்டத்தின் சுற்றளவு மற்றும் அதன் விட்டத்திற்கும் இடையிலான விகிதம் ஆகும், அது தோராயமாக 3.14 ஆகும். |
| மார்ச் 15 | உலக நுகர்வோர் நாள் | நுகர்வோர் உரிமைகள் மற்றும் தேவைகள் குறித்து உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக. |
| மார்ச் 16 | தேசிய தடுப்பூசி நாள் | மையக் கருத்து: தடுப்பூசிகள் அனைவருக்கும் வேலை செய்யும். |
| மார்ச் 18 | ஆயுத தொழிற்சாலைகள் நாள் | நாடு முழுவதும் கண்காட்சிகளில் கைத்துப்பாக்கிகள், துப்பாக்கிகள், பீரங்கிகள், வெடிமருந்துகள் போன்றவற்றை காட்சிப்படுத்தி இந்த நாள் கொண்டாடப்படுகிறது. |
| மார்ச் 18 | உலக மறுசுழற்சி நாள் | மையக் கருத்து: ‘‘மறுசுழற்சி ஹீரோக்கள்’’ |
| மார்ச் 20 | உலக சிட்டுக் குருவி நாள் | மையக் கருத்து: ‘‘நான் சிட்டுக்குருவியை நேசிக்கிறேன்’’ |
| மார்ச் 20 | சர்வதேச மகிழ்ச்சி நாள் | மையக்கருத்து: ‘அனைவருக்கும், ஒன்றாக மகிழ்ச்சி’’ |
| மார்ச் 20 | பிரெஞ்சு மொழி நாள் | (ஐக்கிய நாடுகள்) அமைப்பில் அலுவல்ரீதியிலான ஆறு செயலாக்க மொழிகளையும் சமமாக பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக. |
| மார்ச் 21 | சர்வதேச வனங்கள் நாள் | மையக்கருத்து: வனங்கள் மற்றும் உயிர்ப் பரவல் |
| மார்ச் 21 | இனப்பாகுபாட்டை ஒழிப்பதற்கான சர்வதேச நாள் | இனப் பாகுபாட்டை ஒழிப்பதற்காக, ஆப்பிரிக்க சந்ததி மக்களுக்கான சர்வதேச பத்தாண்டுகளின் இடைக்கால ஆய்வு ஆண்டாக 2020ஆம் ஆண்டு அனுசரிக்கப்படுகிறது. |
| மார்ச் 21 | உலக டவுன் சின்ட்ரோம் நாள் | மையக் கருத்து: ‘‘நாம் முடிவு செய்வோம்’’ |
| மார்ச் 21 | உலக கவிதை நாள் | செய்யுளை (கவிதைகளை) மனப்பாடம் செய்யும் பழைய முறைக்குத் |

| | | |
|---|---|---|
| | | திரும்புவதை ஊக்குவிப்பதற்காகவும், செய்யுள் கற்பிப்பதை ஊக்குவிப்பதற்காகவும் மற்றும் நாடகம், நடனம், இசை மற்றும் ஓவியம் போன்ற பல கலைகள் மற்றும் செய்யுளுக்கு இடையேயான உரையாடலை மீட்டெடுப்பதற்காகவும். |
| மார்ச் 22 | உலக தண்ணீர் நாள் | மையக்கருத்து: ‘‘தண்ணீர் மற்றும் காலநிலை மாற்றம்’’ |
| மார்ச் 23 | உலக வானிலை நாள் | மையக்கருத்து: ‘‘தண்ணீர் மற்றும் காலநிலை மாற்றம்’’ |
| மார்ச் 23 | தியாகிகள் நாள் | மார்ச் 23, தியாகிகள் நாளாக அனுசரிக்கப்படுகிறது. பகத் சிங், சுக்தேவ் தப்பார், மற்றும் ஷிவராம் ராஜ்குரு ஆகிய தியாகிகளை கௌரவிப்பதற்காக அனுசரிக்கப்படும் இந்நாள் ஷகீத் திவாஸ் என்றும் அழைக்கப்படுகிறது. |
| மார்ச் 24 | உலக காசநோய் நாள் | மையக்கருத்து: ‘இதுவே நேரம்’ |
| மார்ச் 24 | ஒட்டுமொத்த மனித உரிமை மீறல் மற்றும் பாதிக்கப்பட்டவரின் கௌரவம் பற்றிய உண்மையைத் தெரிந்து கொள்வதற்கான உரிமைக்கான சர்வதேச நாள் | மையக்கருத்து: ‘‘மான்சிக்நார் ஆஸ்கர் அர்னுல்.்.போ ரொமெரோ’’ |
| மார்ச் 25 | அடிமைத்தனம் மற்றும் டிரான்ஸ்அட்லான்டிக் அடிமை வர்த்தகத்தால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூர்வதற்கான சர்வதேச நாள் | மையக்கருத்து: ‘‘அடிமைத்தனத்தின் இனவெறி மரபுகளை ஒன்றாக எதிர்கொள்ளுதல்’’ |
| மார்ச் 25 | தடுத்து வைக்கப்பட்டுள்ள மற்றும் காணாமல் போன பணியாளர் உறுப்பினர்களுடன் ஒற்றுமையாக இருப்பதற்கான சர்வதேச நாள் | ஐக்கிய நாடுகள் பணியாளர்கள் மற்றும் அமைதிப்படை வீரர்கள், அரசு சாரா சமுதாயம் மற்றும் பத்திரிகையில் நமது சகாக்களைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கையை தீவிரப்படுத்துதல், நீதியைக் கோருதல் மற்றும் நம்முடைய முனைப்பை வலுப்படுத்துவதற்காக. |
| மார்ச் 27 | உலக தியேட்டர் நாள் | இது ஐடிஐ மையங்கள் மற்றும் சர்வதேச தியேட்டர் சமுதாயத்தால், ஆண்டுதோறும் மார்ச் 27 அன்று கொண்டாடப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| மார்ச் மாதத்தின் கடைசி சனிக்கிழமை (மார்ச் 28) | பூமி நேரம் | இந்தியாவில் 28 மார்ச் அன்று இரவு 8.30 மணிக்கு பூமி நேரம் 2020 நடைபெற்றது. |

| தேதி | நாள் | மையக்கருத்து/ கூடுதல் தகவல் |
|---|---|---|
| **02 ஏப்ரல்** | உலக மதியிறுக்க விழிப்புணர்வு நாள் | மையக்கருத்து: “பெரியவர்களுக்கான தன்மையை நோக்கிய ஒரு மாற்றம்” |
| **02 ஏப்ரல்** | சர்வதேச குழந்தைகள் புத்தக நாள் | மையக்கருத்து: சொற்களுக்கான பசி |
| **04 ஏப்ரல்** | சுரங்க விழிப்புணர்வு மற்றும் சுரங்கச் செயல்பாட்டில் உதவிக்கான சர்வதேச நாள் | மையக்கருத்து: “முன்னேறுதல், பாதுகாப்பு, அமைதி மற்றும் வளர்ச்சி” |
| **05 ஏப்ரல்** | தேசிய கடல்சார் நாள் | |
| **05 ஏப்ரல்** | ஐக்கிய நாடுகளின் சர்வதேச மனசாட்சி நாள் | மையக்கருத்து: மனசாட்சியுடன் உலகத்தை மாற்றுதல் |
| **06 ஏப்ரல்** | வளர்ச்சி மற்றும் அமைதிக்காக சர்வதேச விளையாட்டு நாள் | |
| **07 ஏப்ரல்** | உலக சுகாதார நாள் | மையக்கருத்து: உலக சுகாதார நாள் என்பது செவிலியர்கள் மற்றும் மருத்துவச்சிகளுக்கு ஆதரவு அளித்தல் என்பதாகும். |
| **07 ஏப்ரல்** | 1994ஆம் ஆணடு ருவாண்டா இனப்படுகொலையின் சர்வதேச பிரதிபலிப்பு நாள் | - |
| **09 ஏப்ரல்** | மத்திய ரிசர்வ் காவல் படையின் வீர நாள் | - |
| **10 ஏப்ரல்** | உலக ஹோமியோபதி நாள் | மையக்கருத்து: “பொது சுகாதாரத்தில் ஹோமியோபதியின் பங்களிப்பை மேம்படுத்துதல்” |
| **11 ஏப்ரல்** | தேசிய பாதுகாப்பான தாய்மை நாள் | - |
| **12 ஏப்ரல்** | சர்வதேச மனித விண்வெளி பயண நாள் | - |
| **14 ஏப்ரல்** | அம்பேத்கர் ஜெயந்தி | 14 ஏப்ரல் 1891 அன்று பிறந்த பாபாசாகேப் டாக்டர் பீம்ராவ் அம்பேத்கார் அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக ஏப்ரல் 14ஆம் நாள் அம்பேத்கார் ஜெயந்தி (பீம் ஜெயந்தி என்றும் அழைக்கப்படுகிறது) ஒரு ஆண்ட விழாவாகக் கொண்டாடப்படுகிறது. |
| **14 ஏப்ரல்** | உலக சாகஸ் (இரத்த ஒட்டுண்ணி) நோயின் முதல் | சாகஸ் நோய் (அமெரிக்க டிரிபனோசோமியாசிஸ் என்றும் |

| | | |
|---|---|---|
| | பதிப்பு | அழைக்கப்படுகிறது) உடன் வாழும் மக்களிடையே பார்வைத்திறனையும் பொது விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும். |
| 13 ஏப்ரல் | 36வது சயாச்சின் நாள் | 1984ஆம் ஆண்டு 13அம் நாள் இந்திய ராணுவம் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பிலிருந்து சால்டோரோ ரிட்ஜ்லைனில் உள்ள பில.்.பாண்ட் லா மற்றும் இதர கணவாய்களை மீட்பதற்காக 'ஆபரேஷன் மேக்தூத்'ஐ நடத்தியது. |
| 15 ஏப்ரல் | உலக கலை நாள் | - |
| 16 ஏப்ரல் | உலக குரல் நாள் | மையக்கருத்து: உங்கள் குரலின்மீது கவனம் செலுத்துங்கள் |
| 17 ஏப்ரல் | உலக இரத்த ஒழுக்கு நாள் | மையக்கருத்து: "ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்" |
| 18 ஏப்ரல் | நினைவுச் சின்னங்கள் மற்றும் இடங்களுக்கான சர்வதேச நாள் | மையக்கருத்து: பகிரப்பட்ட கலாச்சாரங்கள், பகிரப்பட்ட பாரம்பரியம், பகிரப்பட்ட பொறுப்பு. |
| 19 ஏப்ரல் | உலக கல்லீரல் நாள் | - |
| 20 ஏப்ரல் | ஐக்கிய நாடுகள் சீன மொழி நாள் | - |
| 21 ஏப்ரல் | குடிமைப் பணிகள் நாள் | - |
| 21 ஏப்ரல் | உலக கற்பனைத்திறன் மற்றும் புதுமை நாள் | - |
| 22 ஏப்ரல் | சர்வதேச அன்னை பூமி நாள் | மையக்கருத்து: காலநிலை செயல்பாடு. |
| 23 ஏப்ரல் | உலக புத்தக நாள் | மையக்கருத்து: உலக புத்தக நாள் என்பது **ஒரு கதையைப் பகிருங்கள்** என்பதாகும். இந்த நாள் உலக புத்தகம் மற்றும் பதிப்புரிமை நாள் அல்லது சர்வதேச புத்தக நாள் என்றும் அனுசரிக்கப்படுகிறது. |
| 23 ஏப்ரல் | ஐநா அங்கிலமொழி நாள் மற்றும் ஐநா ஸ்பானிஷ் மொழி நாள் | - |
| 23 ஏப்ரல் | ஐசிடி சர்வதேச பெண்கள் நாள் 2020 | மையக்கருத்து: 'அடுத்த தலைமுறைக்கு எழுச்சியூட்டுதல்' |
| 24 ஏப்ரல் | உலக பஞ்சாயத்து ராஜ் நாள் | - |
| 24 ஏப்ரல் | உலக ஆய்வுக்கூட விலங்குகள் நாள் | - |
| 25 ஏப்ரல் | அமைதிக்கான பன்முகத் தன்மை மற்றும் இராஜதந்திரத்திற்கான சர்வதேச நாள் | - |
| 25 ஏப்ரல் | உலக மலேரியா நாள் | மையக்கருத்து: மலேரியா இல்லாத நிலை என்னிடமிருந்து |

| | | |
|---|---|---|
| | | தொடங்குகிறது |
| **25 ஏப்ரல்** | உலக கால்நடை நாள் 2020 | உலக கால்நடை நாள் 2020ன் மையக்கருத்து கால்நடைகள் மற்றும் மனித சுகாதாரத்திற்காக சுற்றுச்சூழலை பாதுகாத்தல் என்பதாகும். |
| **25 ஏப்ரல்** | சர்வதேச பிரதிநதிகள் நாள் | |
| **26 ஏப்ரல்** | உலக அறிவுசார் சொத்துரிமை நாள் | உலக அறிவுசார் சொத்துரிமை நாள் 2020ன் மையக்கருத்து, 'ஒரு பசுமையான எதிர்காலத்திற்காக புதுமையைப் புகுத்துதல்' என்பதாகும். |
| **26 ஏப்ரல்** | சர்வதேச செர்னோபில் பேரிடர் நினைவு நாள் | - |
| **28 ஏப்ரல்** | பணியிடத்தில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் என்பதற்கான உலக நாள் | 2020க்கான மையக்கருத்து: பெருந்தொற்றை நிறுத்துவோம்: பணியிடங்களில் பாதுகாப்பும் சுகாதாரமும் உயிர்களைக் காப்பாற்றும் என்பதாகும். |
| **28 ஏப்ரல்** | தொழிலாளாகள் நினைவு நாள் | 2020 மையக்கருத்து: 'பணியிடங்களில் பெருந்தொற்றைத் தடுத்திடுவோம்' |
| **29 ஏப்ரல்** | சர்வதேச நாட்டிய நாள் | - |
| **30 ஏப்ரல்** | சர்வதேச ஜாஸ் நாள் | |
| **ஏப்ரல் மாதத்தின் கடைசி வாரம்** | உலக நோய்த்தடுப்பு வாரம் | **'**அனைவருக்கும் தடுப்பூசிகள்**'** |

# தமிழ்நாடு

- **தமிழ்நாடு - மைய அரசின் "ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை" திட்டத்தை ஒரு முன்னோடித் திட்டமாக தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பிப்ரவரி 1 அன்று தொடங்கியது.**

- **தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர் - மத்திய நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களால் அவரது பட்ஜெட் உரையில் குறிப்பிடப்பட்டதுபோல, ஆன்-சைட் அருங்காட்சியகங்களாக அபிவிருத்தி செய்யப்பட உள்ள 5 தொல்பொருள் ஆய்வு இடங்களில் ஒன்றாக விளங்குகிறது.**

    - ராக்கிகரி (அரியாணா), ஹஸ்தினாபூர் (உத்தரப்பிரதேசம்), சிவ்சாகர் (அஸ்ஸாம்) மற்றும் தோலவிரா (குஜராத்) ஆகியவை தேர்வு செய்யப்பட்ட இதர தொல்பொருள் ஆய்விடங்களாகும்.
    - ஆதிச்சநல்லூர், என்ற ஒரு தொலைதூர கிராமமானது, 200 ஏக்கர் பரப்பளவில் விரிந்து காணப்படும் ஒரு மூன்று அடுக்கு கல்லறையின் பூர்வீக இடமாகும்.
    - இது தெற்காசியாவிலேயே கண்டறியப்பட்ட மிகப்பெரிய மற்றும் மிகப் பழமையானதுமான இரும்பு கற்காலத்தில் அமையப்பெற்ற கல்லறைகளில் ஒன்று ஆகும்.
    - புதுச்சேரியில் உள்ள அரிக்கமேடு, என்ற தமிழகத்தின் மிகப்பழமையான ரோமானிய தளமானது, ஆன்-சைட் அருங்காட்சியம் இல்லாததால், 1945-50ல் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட பிறகு தன்னுடைய முக்கியத்துவத்தை இழந்தது.

- **மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் - கீழடி போன்ற தளங்களில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட புதை படிமங்களில் மரபணு ஆராய்ச்சி செய்வதற்காக தமிழ்நாடு தொல்லியல் துறை மற்றும் ஹார்வார்டு பல்கலைக் கழகம் ஆகியவற்றுடன் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ள உள்ளது.**

- **மாநில பள்ளிக்கல்வித் துறை – சென்னையில் உள்ள 327 பள்ளிகள் உள்ளிட்ட 37,000 அரசுப் பள்ளிகளில், "சுற்றுச்சூழல் மற்றும் இளைஞர் குழுக்களை" அமைப்பதற்காக ரூ.38 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.**

- **15வது நிதி ஆணையம், மத்திய அரசின் வரி வருவாயில் 4.189 விழுக்காட்டை அடுத்த 6 ஆண்டுகளுக்காக தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்துள்ளது. இது 14வது நிதி ஆணையத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டதை (4.023 விழுக்காடு) விட 0.166 விழுக்காடு அதிகம் ஆகும்.**

    - இருப்பினும், இந்த அளவானது 13வது நிதி ஆணையத்தில் இருந்து மாநில அரசு பெற்ற அளவை விட மிகவும் குறைவு ஆகும் - 4.969 விழுக்காடு.
    - ஒட்டுமொத்தமாக, இந்த ஆணையம் 14 மாநிலங்களுக்கு பகிர்வுக்குப் பிந்தைய வருவாய் பற்றாக்குறை மானியமாக ரூ.74,340 கோடியை பரிந்துரைத்துள்ளது.
    - ஒட்டுமொத்த ஒதுக்கீட்டுத் தொகையில், ரூ.37,917 கோடி ஆந்திரப் பிரதேசம், கேரளா, பஞ்சாப், தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய 5 மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- இந்த ஆண்டிற்கான மாநிலத்தின் மதிப்பீடு ரூ.20,000 என்றபோதிலும், நமது மாநிலத்திற்கு பகிர்வுக்குப் பிந்தைய வருவாய் பற்றாக்குறை மானியமாக ரூ.4,025 கோடி பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
- இத்தகைய மானியத்தை மத்திய அரசிடமிருந்து நமது மாநில அரசு பெறுவது இதுவே முதல் முறை ஆகும்.

**15வது நிதி ஆணையம் - சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி (ஒவ்வொன்றிலும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகைகொண்ட மாநகரங்கள் பிரிவில்) மாநகரங்களில் காற்று மாசுபாட்டை எதிர்கொள்ளுதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மையை கையாளுதல் ஆகியவற்றுக்காக ரூ.556 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.**

- இந்த ஆணையம் மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்காக 2020-21ஆம் ஆண்டில் ரூ.5344 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.
- மொத்த ஒதுக்கீட்டில், ரூ.1,737 கோடி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்காக பிரித்துவைப்பட்டுள்ளது.
- சென்னைக்கு மிக அதிகபட்சமாக ரூ.362 கோடி உதவி வழங்கப்படுகிறது.
- மாநகரத்தில் வெள்ளம் ஏற்படாமல் தடுப்பதற்காக இந்த மாநகரத்திற்கு மேலும் ரூ.100 கோடி தனியாக வழங்கப்படுகிறது.
- பருவ காலங்களில் ஏற்படும் வெள்ளத்தை சமாளிக்க ஒருங்கிணைந்த திட்டத்தை மேற்கொள்வதற்காக 5 மில்லியன் மக்கள் தொகைக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட நகரங்களுக்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 2020-21ஆம் ஆண்டில் ரூ.500 கோடி நிதி ஒதுக்கீடு இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கும் நகர்ப்புற உள்ளாட்சிகளில் உள்ள நகரியங்களுக்கும் நிதி வழங்க இந்த ஆணையம் முடிவுசெய்துள்ளது. .
- முதன்முறையாக, இந்த நிதி ஆணையம் நகரங்களை ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட நகரங்கள் மற்றும் ஒரு மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்ட நகரங்கள் என்று வகைப்படுத்தியுள்ளது.
- மேலும், மாநிலங்கள் தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகரியங்களுக்கு அவற்றில் உள்ள மக்கள் தொகை அடிப்படையில் நிதியை ஒதுக்கீடு செய்யுமாறும் பரிந்துரைத்துள்ளது..
- அது தமிழ்நாட்டில் இரண்டு நகரியங்களை அடையாளம் கண்டுள்ளது – அவை சென்னையில் உள்ள புனித தோமையர் மலை மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள வெல்லிங்டன் ஆகியவை ஆகும். அவற்றில் மொத்தமாக 63,257 மக்கள் தொகை உள்ளது. .

**தமிழ்நாடு அரசு – அடுத்த 10 ஆண்டுகளில் ரூ.610 கோடி மதிப்பில் மத்திய அரசின் இரண்டாவது அணை மறுவாழ்வு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 36 அணைகளை சீரமைத்து வலுப்படுதத உள்ளது.**

**திரு. கே. தியாகராஜன், மக்கள்தொகை வல்லுநர் மற்றும் ஐக்கிய எழுத்தாளர்கள் கூட்டமைப்பின் நிறுவனர், ஒரு பதக்கத்துடன்கூடிய, உலகளாவிய சாதனை விருதுக்கு தேர்வு செய்யப்பட்டள்ளார்.**

- இந்த விருது ஐதராபாத்தில் அடுத்த மாதம் நடைபெறும் உலக சாதனையாளர்கள் உச்சி மாநாட்டில் அவருக்கு வழங்கப்படும்.
- திரு. தியாகராஜன். ஏழைகளின் கல்விக்காக ஆற்றிய பங்களிப்புக்காக இந்த விருது வழங்கப்படுகிறார்..

**தமிழ்நாடு அரசு – சுங்குவார்சத்திரத்திற்கு அருகிலுள்ள பரனூரில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இரண்டாவது விமான நிலையத்திற்கு விரிவான மாஸ்டர் பிளானைத் தயாரித்துக் கொடுப்பதற்காக ஒரு ஆலோசனை நிறுவனத்தை முடிவு செய்வதற்காக உலகளாவிய ஒப்பந்தத்தை வரவேற்க உத்தேசித்துள்ளது.**

- தற்போது இந்த மாநிலத்தில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் சர்வதேச விமான நிலையங்களும், தூத்துக்குடி மற்றும் சேலம் நகரங்களில் உள்நாட்டு விமான நிலையங்களும் உள்ளன. .
- 2017-18ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 20.36 மில்லியன் பயணிகள் வருகையை அடுத்து சென்னை மாநகரம் நாட்டில் உள்ள மிகவும் பரபரப்பான 4 விமான நிலைங்களில் ஒன்றாக தொடர்ந்து விளங்குகிறது.

**தஞ்சாவூரில் உள்ள 1000 ஆண்டு பழமையான ஸ்ரீபிரகதீஷ்வரர் கோவிலின் (பெரிய கோவில்) பிரம்மாண்டமான கும்பாபிஷேகம் 23 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்றது.**

- இந்த விழா நீதிமன்ற உத்தரவுப்படி தமிழ் மற்றும் சமஸ்கிருதம் அகிய இரண்டு மொழிகளிலும் நடத்தப்பட்டது.
- இந்த நிகழ்ச்சியை இளவரசர் பாபாஜி ராஜா போன்ஸ்லே சத்திரப்பட்டி தலைமையில் மராத்தா அரச குடும்பத்தினர் கண்டுகளித்தனர்.
- திருஞானசம்பந்தரின் திருமுறை ஓதுவார்களால் பாடப்பட்டது.

**L&T-MBDA ஏவுகணை அமைப்புகள் (LTMMSL) – தமிழ்நாட்டில் உள்ள கோயம்புத்தூரில் ஒரு ஏவுகணை ஒருங்கிணைப்பு வசதியை நிறுவியது.**

**தமிழ்நாடு அரசு – பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள், "மலிவுவிலை வீட்டுவசதி" திட்டத்தின்கீழ் தகுதிபெறுவதற்கான வீடுகளின் பரப்பளவை 40 சதுர மீட்டரில் இருந்து 60 சதுர மீட்டராக உயர்த்தியுள்ளது.**

**தமிழ்நாடு அரசு சமீபத்தில் ஏற்படுத்திய மாநில தங்குமிட நிதி செயல்பாட்டுக்கு வந்துள்ளது.**

- இந்த நிதியானது மாநிலத்தில் உள்ள நகர்ப்புற ஏழைகள் மறுவாழ்வுக்காக பயன்படுத்திக் கொள்ளப்படும்.
- மாநிலத்தில் உள்ள அனைத்து புதிய கட்டுமானங்களும், வர்த்தகம், குடியிருப்பு, தொழில்துறை மற்றும் நிறுவன கட்டுமானங்கள் எதுவாக இருந்தாலும், .அவற்றின் தரைப்பரப்பு அட்டவணை (FSI) 3,000 சதுர மீட்டர்களுக்கு அதிகமாக இருந்தால், ஒரு சதுர மீட்டருக்கு அவற்றின் வழிகாட்டி மதிப்புக்கு ஏற்ப 1 முதல் 3 விழுக்காடு வரை தங்குமிட கட்டணத்தைச் (shelter charges) செலுத்த வேண்டும்.
- மேலும், இந்த நிதியானது தமிழ்நாடு குடிசைப்பகுதி மேம்பாட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலமாக பொருளாதாரத்தில்

நலிவடைந்த பிரிவினருக்கான மலிவு விலை வீட்டு வசதி திட்டங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ளப்படும். .

- **தமிழ்நாடு – மத்திய அரசின் பிரதமரின் விவசாயிகள் கௌரவ நிதி (Kisan Samman Nidhi scheme) திட்டத்திலிருந்து ரூ.2,459 கோடியைப் பெற்றுள்ளது.**

  - இந்த திட்டத்தில் அதிக பயன்பெறும் மாவட்டங்கள் விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் சேலம் ஆகும்.
  - பிரதமரின் விவசாயிகள் கௌரவ நிதியானது நிலம் வைத்திருக்கும் அனைத்து விவசாய குடும்பங்களுக்கும் ஆண்டுக்கு ரூ.6000ஐ வழங்கும் திட்டமாகும்.
  - இந்தத் திட்டம் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் பிப்ரவரி 24, 2019 அன்று கோரக்பூரில் தொடங்கி வைக்கப்பட்டது.
  - இது 100 விழுக்காடு மத்திய அரசின் நிதியுதவியுடன்கூடிய மத்திய உதவித் திட்டமாகும்.
  - இந்தத் திட்டத்தின் நோக்கம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்குவதே ஆகும்.

- **ஒட்டுமொத்த காவேரி டெல்டா மண்டலம் முழுவதும் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்படும் என்று முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் ஜனவரி 9 அன்று அறிவித்தார்.**

  - இந்த பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல அறிவிப்பின்கீழ் தஞ்சாவூர், திருச்சி, திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, அரியலூர், கடலூர் மற்றும் கரூர் ஆகிய மாவட்டங்களும் அடங்கும்.

- **முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிச்சாமி – தலைவாசல் அருகேயுள்ள கறிவேப்பிலைப்பட்டியில் கட்டப்பட்ட ஒரு புதிய கிரிக்கெட் மைதானத்தை, பிப்ரவரி 9 அன்று முன்னாள் இந்திய தேசிய கிரிக்கெட் அணித் தலைவர் திரு. ராகுல் டிராவிட் முன்னிலையில் திறந்து வைத்தார்.**

- **முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிச்சாமி – கால்நடை மற்றும் விலங்கின அறிவியல் ஒருங்கிணைந்த ஆராய்ச்சி உயர் நிறுவனத்திற்கான அடிக்கல்லை பிப்ரவரி 9 அன்று நாட்டினார்.**

  - இந்த நிறுவனம் சேலத்தில் உள்ள தலைவாசலில் ரூ.1,024 கோடி மதிப்பில் கட்டப்படும்.
  - 1,100 ஏக்கர் பரப்பளவில் கட்டப்படும் இந்த நிறுவனம் செயல்பாட்டுக்கு வரும்போது, தெற்காசியாவிலேயே மிகப்பெரிய நிறுவனமாக விளங்கும்.

- **தமிழ்நாடு அரசின் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (Overseas Manpower Corporation) - ஷார்ஷாவில் உள்ள இந்திய வர்த்தகம் மற்றும் கண்காட்சி மையம் (India Trade and Exhibition Centre), உடன் இணைந்து, மாநிலத்தில் உள்ள இளைஞர்களுக்கு ஐக்கிய அரபு எமிரேட்டில் வேலைவாய்ப்பு வழங்குவதற்காக ஒரு வேலைவாய்ப்பு மையத்தை உருவாக்குவதற்கான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.**

- **தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம் (Tangedco) – 2018-19ஆம் ஆண்டில், நாடு முழுவதிலும் உள்ள மாநில அரசுகளுக்குச் சொந்தமான நிறுவனங்களில் மிக அதிக அளவு இழப்பீட்டைச் சந்தித்துள்ளது.**

  - மத்திய மின்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள தரவுகளின்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம் ரூ.9,257 கோடி அளவுக்கு இழப்பீட்டைச் சந்தித்துள்ளது. இது கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட இழப்பை விட (ரூ.7,761 கோடி) 20 விழுக்காட்டிற்கும் அதிகம் ஆகும்.
  - தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் அதிகரித்து வரும் நட்டத்திற்கான முக்கியமான காரணங்களாக ஊதியக் குழுவின் பரிந்துரைகள் அமல்படுத்தலும், சூறாவளிகள் காரணமாக கட்டமைப்புகளில் ஏற்பட்டுள்ள சேதங்களுமே குறிப்பிடப்படுகின்றன.

- **புதுச்சேரி – சர்ச்சைக்குரிய குடிமக்கள் திருத்தச் சட்டம், தேசிய குடிமக்கள் பதிவேடு மற்றும் தேசிய மக்கள்தொகை பதிவேடு ஆகிவற்றை திரும்பப் பெறுமாறு மத்திய அரசை வலியுறுத்தும் மசோதா ஒன்றை பிப்ரவரி 12 அன்று நிறைவேற்றி. அந்த வகையில் முதல் யூனியன் பிரதேசமாகத் திகழ்கிறது.**

- **மாநில துணை முதலமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், திரு. ஓ. பன்னீர்செல்வம் - மாநிலத்திற்கான தன்னுடைய 10வது பட்ஜெட்டை தாக்கல் செய்தார். இதில் கல்வி, வேளாண்மை, ஊரக வளர்ச்சி மற்றும் கட்டமைப்பு உள்ளிட்ட பல துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.**

- **தமிழ்நாட்டின் தாய்மார்கள் இறப்பு வீதம் - மாநில சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு (Health Management Information System) தரவின்படி, 2019ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் உயிர் குழந்தைப் பிறப்புகளுக்கு 57 ஆகக் குறைந்துள்ளது.**

- **குஜராத்தை அடிப்படையாகக் கொண்ட டாரண்ட் கேஸ் நிறுவனம் - சென்னை மற்றும் திருவள்ளூரில் எரிவாயு விநியோக வலையமைப்பை ஏற்படுத்துவதற்கு உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுள்ளது.**

- **தமிழ்நாடு அரசு – முன்னாள் முதலமைச்சர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளாகிய பிப்ரவரி 24ஐ, மாநில "பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதகாப்பு நாளாக" அனுசரிப்பது என்று முடிவு செய்துள்ளது.**

- **முதலமைச்சரி எடப்பாடி கே. பழனிச்சாமி – பிப்ரவரி 19 அன்று முஸ்லிம்களுக்கான 3 நலத்திட்டங்களை அறிவித்தார்.**

  - தமிழக அரசு உலமாக்களின் (முஸ்லிம் அறிஞர்கள்) மாதாந்திர ஓய்வூதியத்தை ரூ.1,500 லிருந்து ரூ.3,000 ஆக உயர்த்தியது.
  - தமிழ்நாடு வக்ப் வாரியத்திலிருந்து ஓய்வு பெற்ற ஏழை 'பெஷ் இமாம்கள்', 'மோதினார்கள்', 'அரபி ஆசிரியர்கள்' மற்றும் 'முஜவார்கள்' ஆகியோருக்கு இந்தத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.
  - 60 வயதை நிறைவு செய்தவர்கள் மற்றும் 20 ஆண்டுகள் சேவையை முடித்தவர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதி படைத்துள்ளனர்.
  - இந்தத் திட்டம் 1981ல் மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டது.

- மாநில வக்ப் வாரியத்தில் 2,814 நிறுவனங்கள் பதிவு செய்துள்ளன.
- இந்த நிறுவனங்களின் உலமாக்கள் ஒரு இரு சக்கர வாகனத்தை வாங்குவதற்கு ரூ.25,000 ரொக்க உதவி அல்லது வாகனத்தின் மொத்த விலையில் 50 விழுக்காடு, இவற்றில் எது குறைவோ அதை மானியமாக அரசு வழங்கும் என்றும் முதலமைச்சர் அறிவித்தார்.
- ஒவ்வொரு ஆண்டும் சுமார் 4,000 பேர் ஆண்டு ஹஜ் யாத்திரைக்கு சென்னை விமான நிலையம் வழியாகச் செல்கின்றனர்.
- கடந்த ஆண்டு 4,300 யாத்திரீகர்கள் ஹஜ் யாத்திரை மேற்கொண்டனர்.

**முதலமைச்சர் எடப்பாடிகே. பழனிசாமி – கீழடியில் நடைபெற்றுவரும் அகழ்வாராய்ச்சிப் பணிகளின் 6வது கட்டத்தை, பிப்ரவரி 19 அன்று சென்னையில் இருந்தவாறே காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். அதைத் தொடர்ந்து அந்த இடத்தில் பணிகள் தொடங்கின.**

- கீழடியில் நடைபெற்று வரும் அகழ்வாய்வுப் பணிகள், வைகை ஆற்றின் கரையில் பண்டைக்கால நாகரிகம் செழிப்புற்று விளங்கியதை உணர்த்துவதாக உள்ளது.
- இந்த அகழ்வாய்வுப் பணிகளின் முதல் கட்டத்திற்காக அரசு ரூ.40 இலட்சத்தை ஒதுக்கீடு செய்துள்ளது. பின்னர் தேவைக்கேற்ப கூடுதல் தொகை விடுவிக்கப்படும்.
- இந்த அகழ்வாய்வுப் பணிகள் மத்திய தொல்லியல் துறை ஆலோசனை வாரியம் அங்கீகரித்துள்ள கீழடி, கொந்தகை, மணலூர் மற்றும் அகரம் ஆகிய நான்கு ஊர்களிலும் ஒரே சமயத்தில் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது..
- கடந்த ஐந்து கட்டங்களாக நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிப் பணிகள்வாயிலாக கீழடி தளத்தில் 15,500க்கும் மேற்பட்ட கலைப்பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை 2014-2015, 2015-2016, 2016-2017 ஆண்டுகளில் தொடங்கிய முதல் மூன்று கட்ட ஆய்வுகளை நடத்தியது. அதே சமயம் அடுத்த இரண்டு ஆய்வுகளும் மாநில தொல்பொருள் துறையால் நடத்தப்பட்டன.
- இதுவரை ஐந்து கட்ட அகழ்வாராய்ச்சி பணிகள் நடத்தப்பட்டிருந்தபோதிலும், நான்காவது கட்ட அகழ்வாராய்ச்சிப் பணிகளின் முடிவுகள் மட்டுமே இதுவரையில் வெளியிடப்பட்டுள்ளன. அது, கீழடி 2,600 ஆண்டுகளுக்கு முன்பே இருந்தது என்பதை உணர்த்துவதாக உள்ளது.

**சென்னையில் உள்ள ஹுமாயூன் மகாலைப் புதுப்பிப்பதற்காக தமிழ்நாடு மற்றும் ஆஸ்திரேலியா ஒன்றாக நெருங்கி வந்துள்ளன.**

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை – தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் அபிவிருத்தி மசோதா, 2020ஐ பிப்ரவரி 20 அன்று நிறைவேற்றியது.**

- இந்த மசோதா எட்டு வகையான அபாயகரமான தொழில்கயை தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களிலும், கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் தலா 5 ஊராட்சி ஒன்றியங்களிலும் மேற்கொள்வதற்கு தடை விதித்துள்ளது. .

- பிப்ரவரி 2019 அன்று மாநில அமைச்சரவை இந்த வரைவு மசோதாவுக்கு ஒப்புதல் அளித்த பிறகு, ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் ஒப்புதல் அளித்தார்.
- இந்த மசோதா, இதை மீறுவோருக்கு, ரூ.10 இலட்சம் முதல் ரூ.50 இலட்சம் வரையிலான அபராதம் விதிக்கவும், ஆறு மாதங்கள் முதல் 5 ஆண்டுகள் வரையிலான காலத்திற்கு சிறையிலடைக்கவும் வகைசெய்கிறது.

**தமிழ்நாடு அரசு – ஜப்பானைச் சேர்ந்த மிட்சுபா சிக்கல் (Mitsuba Sical), தென் கொரியாவைச் சேர்ந்த ஹெனான் ஆட்டோமொடிவ் சிஸ்டம்ஸ் (Hanon Automotive) மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த ஜோகோ ஹெல்த் (Jogo Health) ஆகிய நிறுவனங்களுடன் இரண்டு நாட்கள் நடைபெற்ற "தூதரக சந்திப்பு" (Diplomatic Outreach) நிகழ்ச்சியில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.**

**சென்னைப் பல்கலைக் கழக பண்டைய வரலாறு மற்றும் தொல்பொருள் துறை மாணவர்கள் - குடியாத்தத்திற்கு அருகில் செந்தூர் மலை என்ற இடத்தில் நடைபெற்ற கள பயிற்சியின்போது ஒரு கற்கால சாம்பல் மேட்டைத் தோண்டியெடுத்தனர்.**

- தமிழ்நாட்டில் ஒரு கற்கால சாம்பல் மேடு தோண்டி எடுக்கப்படுவது இதுவே முதல்முறை ஆகும்.
- இருப்பினும் இத்தகைய கற்கால சாம்பல் மேடுகள் இதற்கு முன்னதாக கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசம் போன்ற இந்தியாவின் இதர தென் பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளன.
- இந்த மாணவர்கள் கற்கால, இரும்பு கால மற்றும் முந்தைய வரலாற்றுக் காலம் ஆகிய காலங்களில் பயன்படுத்தப்பட்ட பானை ஓடுகள் மற்றும் கல் ஆயுதங்களையும் கண்டறிந்துள்ளனர்.
- இந்த அகழ்வாய்வுப் பணிகள் வேலூர் மாவட்டம் குடியாத்தம் நகரத்திலிருந்து சுமார் 12 கிமீ தொலைவில் உள்ள வலசை கிராமத்தில் பிப்ரவரி 3 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- முன்னதாக 2012ஆம் ஆண்டு, இந்திய தொல்பொருள் துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் குழு ஒன்று கலாச்சார தொடர்புகள் மற்றும் முக்கியத்துவத்தைத் தெரிந்துகொள்வதற்காக இந்தப் பகுதிக்கு வந்தபோது, இந்தப் பகுதி கற்காலத்தைச் சேர்ந்த பகுதி என்பதைக் கண்டறிந்தனர்.

**முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி – பத்திரிகை உலகின் வேந்தன் என்று போற்றப்படும் பி. சிவந்தி ஆதித்தனாருக்காக தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் ரூ.3.14 கோடி செலவில் கட்டப்பட்ட மணி மண்டபத்தைத் திறந்து வைத்தார்.**

- இந்த நிகழ்ச்சியில், தாமிரபரணி, கருமேனியார் மற்றும் நம்பியார் இணைப்புத் திட்டங்களின் நான்காவது கட்டம் இந்த ஆண்டு முடிவதற்குள் கட்டி முடிக்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்தார்.

**முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி – அமெரிக்காவின் தேசிய விமானவியல் மற்றும் விண்வெளி நிர்வாக (National Aeronautics and Space Administration) என்ற அமைப்பைப் பார்வையிடுவதற்காக தேர்வு**

**செய்யப்பட்டுள்ள வி. அபிநயா என்ற மாணவிக்கு ரூ.2 இலட்சத்திற்கான நிதிஉதவியை வழங்குவதாக அறிவித்தார்.**

- வி. அபிநயா, நாமக்கல் மாவட்டம் நல்லிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த ஒன்பதாம் வகுப்பு மாணவி ஆவார்.

**தமிழ்நாடு அரசு – பிப்ரவரி 24 அன்று, இந்தப் பகுதியில் சுற்றுச் சூழல் சட்டத்தின்படி, எட்டு வகையான தொழில்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ள தடை விதித்து ஆணை பிறப்பித்துள்ளது.**

- இந்த ஆணை தமிழ்நாடு அரசு இதழின் அசாதாரண கெசட்டிலும் வெளியிடப்பட்டுள்ளது.
- காவேரி டெல்டா மாவட்டங்கள் மற்றும் அந்த டெல்டா பகுதியின் சில ஊராட்சி ஒன்றியங்களை வேளாண் பாதுகாப்பு மண்டலங்களாக மாநில அரசு சமீபத்தில் அறிவித்து சட்டங்களை இயற்றியுள்ளது.
- சுற்றுச் சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986ன் பிரிவு 5 மற்றும் பிப்ரவரி 1988ல் மைய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வன அமைச்சகம் வெளியிட்ட அறிவிக்கை ஆகியவற்றில் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி இந்த தடையாணை வெளியிடப்பட்டுள்ளது.
- சுற்றுச் சூழலைப் பாதகாக்கும் பொறுப்பு மாநில அரசிடமே உள்ளது என்பதைக் குறிப்பிடும் அரசமைப்புச் சட்டத்தின் சட்டப் பிரிவு 48-ஏஜ மாநில அரசு சுட்டிக் காட்டியுள்ளது.
- இந்தப் பகுதியில் தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த காட்டுமன்னார்கோவில், மேல்புவனகிரி, கீரபாளையம், பரங்கிப்பேட்டை மற்றும் குமராட்சி ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மனமேல்குடி, திருவரங்குளம் மற்றும் கரம்பகுடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களும் அடங்கியுள்ளன.
- தடை செய்யப்பட்ட தொழில்களுள், துத்தநாகம், தாமிரம் மற்றும் அலுமினிய ஸ்மெல்ட்டர், இரும்புத் தாது செயல்முறை ஆலை, ஒருங்கிணைந்த எ.்.கு ஆலை, கடற்பாசி இரும்பு ஆலை, எலும்பு உணவு, விலங்குகளின் கொம்புகள், குளம்புகள் மற்றும் பிற உடல் பாகங்களை பதப்படுத்துதல், தோல் பதனிடுதல், ஆய்வுகள், துளையிடுதல், எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு, கப்பல் உடைக்கும் தொழில் ஆகிய தொழில்கள் அடங்கும்.

**சங்க காலத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நாவலின் "நிலம் பூத்து மலர்ந்த நாள்" என்ற மொழிபெயர்ப்புக்காக கே.வி. ஜெயஶ்ரீ, 2019ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி பரிசை வென்றார்.**

- மூல நாவல் மனோஜ் குரூர் அவர்களால் 'நிலம் பூத்து மலர்ன்ன நாள்' **(Nilam Poothu Malarnna Naal)** என்ற தலைப்பில் மலையாளத்தில் எழுதப்பட்டது.

**மத்திய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம் - இராமநாதபுரம் மாவட்டம் கடலாடியில் அமைக்க உத்தேசித்துள்ள ஒரு புதிய சூரிய சக்தி பூங்கா திட்டத்தை கைவிடுவதாக அறிவித்துள்ளது.**

- **முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி – மேட்டூர் அணையிலிருந்து உபரியாக வெளியேறும் தண்ணீரை அவருடைய சொந்த ஊராட்சி ஒன்றியமாகிய எடப்பாடியில் உள்ள சரபங்கா வடிநிலப் பகுதி வறண்ட ஏரிகளுக்கு திருப்பி விடுவதற்கான ரூ.565 கோடி திட்டத்திற்கு மார்ச் 4 அன்று அடிக்கல் நாட்டினார்.**

    - முதலமைச்சர் இந்தத் திட்டத்தை இருப்பை கிராமத்தில் உள்ள மேட்டுப்பட்டி ஏரியில் தொடங்கி வைக்கிறார்.
    - காவேரி ஆற்றின் உபரி வெள்ள நீரை சேலம் மாவட்டம் ஓமலூர், மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி ஆகிய நான்கு வட்டங்களில் உள்ள 100 குளங்கள் மற்றும் குட்டைகளுக்கு திருப்பி விடுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
    - இந்தத் திட்டம் நங்கவல்லி, மேச்சேரி, தாரமங்கலம், ஓமலூர், கொங்கணாபுரம், எடப்பாடி மற்றும் சங்ககிரி ஆகிய வறட்சிக்கு இலக்காகும் ஊராட்சி ஒன்றியங்களிலும் மேற்கொள்ளப்படும்.
    - விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் கட்டுவதற்கான அடிக்கல்லையும் முதலமைச்சர் நாட்டுகிறார்.
    - மத்திய அரசு 11 கல்லூரிகள் கட்டுவதற்கு இசைவளித்துள்ள தொகையில் மாநில அரசு தன் பங்கிலிருந்து ரூ.1,200 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.

- முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி – மார்ச் 4, 2020 அன்று சென்னையில் தமிழ்நாடு சுகாதார அமைப்பு மறுசீரமைப்புத் திட்டத்தை (**Tamil Nadu Health System Reform Programme**) தொடங்கி வைத்தார்.
- கியூஎஸ் உலக பல்கலைக் கழகங்கள் தரவரிசைப் பட்டியலில், பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவில் அண்ணா பல்கலைக் கழகம், 373வது இடத்தைப் பெற்றுள்ளது. இது 24 இடங்கள் முன்னேற்றம் ஆகும். .
- அதே பிரிவில் ஐஐடி சென்னை, ஏழு இடங்கள் முன்னெறி 88வது இடத்தைப் பிடித்துள்ளது.
- தேசிய அளவில் பொறியியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவில் அது நான்காவது சிறந்த நிறுவனம் ஆகும். அதற்கு முன்னதாக முதல் மூன்று இடத்தைப் பிடித்த இந்திய தொழில்நுட்ப நிறுவனங்கள் ஐஐடி பாம்பே, ஐஐடி டில்லி மற்றும் ஐஐடி காரக்பூர் ஆகும்.
- மத்திய சுற்றுச் சூழல் அமைச்சகம் - தமிழ்நாட்டின் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அவுஸ்டரி ஏரி பறவைகள் சரணாலயத்தின் எல்லையைச் சுற்றியுள்ள 9.0968 சகிமீ பரப்பளவு இடையக மண்டலத்தை (**buffer zone**) ஒரு “சுற்றுச் சூழல் உணர்வு” மண்டலமாக அறிவித்துள்ளது.
- முன்னாள் அஇஅதிமுக அமைச்சர் திரு. சி. பொன்னையன் - மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- சென்னை – தமிழ்நாட்டில் ஒரு கலை மாவட்டத்தைப் பெறும் முதல் நகரமாக அகியுள்ளது.
    - பல்வேறு நாடுகளில் புகழ்பெற்ற கலைஞர்களின் திறமையைக் காட்டும் கண்ணகி நகர் கலை மாவட்டத்தை சென்னை மாநகராட்சி தொடங்கி வைத்துள்ளது.
    - கண்ணகி நகர் கலை மாவட்டம் என்பது நாட்டின் 5வது திட்டமாகும்.

- மாநில அரசு – கோவிட்-19 ஐ, தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939ன்கீழ் ஒரு அறிவிக்கப்பட்ட நோயாக அறிவித்துள்ளது.
- மத்திய அரசு – தேசிய கம்பெனிகள் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயததின் (**National Company Law Appellate Tribunal**) ஒரு மண்டல அமர்வை சென்னையில் அமைப்பதென்று அறிவித்துள்ளது.
- தமிழ்நாடு முதலமைச்சர் - மயிலாடுதுறையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் தோற்றுவிக்கப்படும் என்று மார்ச் 24 அன்று அறிவித்தார்.
  - நாகப்பட்டினம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, மயிலாடுதுறை தமிழ்நாட்டின் 38வது மாவட்டமாக தோற்றுவிக்கப்படும்.

- முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி – தகவல் மைய பூங்கா அமைக்கப்படும் என்ற அறிவிப்பை மார்ச் 24 அன்று வெளியிட்டார்.
  - இந்த பூங்கா ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் நெமிலி மற்றும் மன்னூர் கிராமங்களுக்கு இடையே 150 ஏக்கர் பரப்பளவில் ரூ.500 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.

- திருவள்ளூர் காவல் துறை – கோவிட்-19 காரணமாக வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்ட மக்கள் மற்றும் மாநில அரசுக்கு இடையே ஒரு இடைமேடையாக விளங்குவதற்காக ‘கோ-பட்டி’ (**CoBuddy**) என்ற ஒரு செயலியைத் தொடங்கி வைத்துள்ளது.

- **கோவில்பட்டி ‘கடலைமிட்டாய்‘ - புவியியல் அட்டவணை பதிவு அமைப்பினால், பெருமைக்குரிய ‘புவிசார் குறியீடு’ வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.**






**ஒரு இனிப்பான செய்தி**

வெல்லம்: தமிழ்நாடு முழுவதும், குறிப்பாக கோவில்பட்டி மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய பகுதிகளில் கிடைக்கும் பாரம்பரியம் மிக்க கரிமச் சிறப்பு கொண்ட, புதிய வெளிரிய, மென்மையான முக்கோண வடிவிலான வெல்லக்கட்டி
நிலக்கடலை: கோவில்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள பூர்வீக கருப்பு மண்ணில் வளர்க்கப்பட்டு, அருப்புக்கோட்டை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் தோல் உரிக்கப்பட்டு வறுக்கப்படுகிறது.
தண்ணீர்: இந்த இனிப்பின் சுவையை இயல்பாகவே அதிகரிக்கச் செய்யும் தாமிரபரணி தண்ணீர் இதற்குப் பயன்படுத்தப்படுகிறது.


- **நாகப்பட்டினத்தை இரண்டாகப் பிரித்து தமிழ்நாட்டின் 38வது மாவட்டமாக மயிலாடுதுறை உருவாக்கப்படுகிறது**
  - ✓ எடப்பாடி கே. பழனிசாமி தலைமையிலான தமிழக அரசு, ஒரு அலுவல்ரீதியிலான ஆணையின்மூலமாக ஏப்ரல் 7, 2020 அன்று மயிலாடுதுறையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்கப்படுவதை அறிவித்தது.

- **தமிழ்நாடு – சமீபத்தில் முடிவடைந்த 2019-20 நிதி ஆண்டில், நுண்ணீர் பாசன திட்டத்தில் அகில இந்திய அளவில் முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது.**

✓ மாநிலம் முழுவதும், பிரதமரின் விவசாய நீர்ப்பாசனத் திட்ட (**Pradhan Mantri Krishi Sinchayee Yojana**) செயலாக்கத்தின் ஒரு பகுதியாக இந்த சாதனை நிகழ்த்தப்பட்டது.

✓ பிரதமரின் விவசாய நீர்ப்பாசன திட்டம் என்பது மத்திய அரசின் ஒரு திட்டமாகும். தண்ணீரை சேமிக்கும் தொழில்நுட்பத்தின்மூலமாக 'ஒவ்வொரு துளி நீரிலும் அதிக பயிர் உற்பத்தி' என்ற கோட்பாட்டைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதே இதன் நோக்கமாகும்.

- பிரதமரின் விவசாய நீர்ப்பாசன திட்டம் - ஒவ்வொரு துளி நீரிலும் அதிக பயிர் உற்பத்த
- இந்த நோக்கத்தை அடைவதற்காக 50,000 கோடி முதலீடு செய்யப்படும்.
- 28.5 இலட்சம் எக்டேர் நிலம் நீர்ப்பாசன வசதியின்கீழ் கொண்டுவரப்படும்.
- 5.000 கோடி ரூபாய் நுண்ணீர் பாசனத்திற்காக ஒதுக்கப்படும்.
- 2014-18 முதல் 26.87 இலட்சம் எக்டேர் நுண்ணீர்பாசனத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.
- கிராமங்களில் நீர்ப்பாசனத்திற்கு விவசாயிகள் சூரிய சக்தி நீர் மோட்டார்களை அமைப்பதற்கு ஊக்குவிக்கப்படும்.




- ✓ இந்தத் திட்டத்தின் தொடக்கக் காலத்தில் (2015-16), நுண்ணீர் பாசனத்தின்கீழ் தமிழ்நாட்டில் வெறும் 32,290 எக்டேர் நிலங்கள் மட்டுமே இருந்தன. இதைவிட தெலுங்கானா (39,864 எக்டேர்), ராஜஸ்தான் (56,345 எக்டேர்), கர்நாடகா (64,220), ஆந்திரப் பிரதேசம் (94,104 எக்டேர்) மற்றும் குஜராத் (சுமார் 1.43 இலட்சம் எக்டேர்) ஆகிய மாநிலங்களில் அதிக அளவு நிலப்பரப்பு இந்த பாசனத்தின்கீழ் இருந்தது.

- ✓ இந்தத் திட்டத்தின் செயலாக்கம் - பயனாளிகள் பதிவு முதல் நிதியுதவி விடுவிக்கப்படும் கடைசி நிலை வரை – அனைத்தும் ‘ஆன்லைனிலேயே’ மேற்கொள்ளப்பட்டன. இதன்வாயிலாக நடைமுறைகள் எளிதாக்கப் பட்டதுடன், அனுமதி வழங்கும் நடைமுறை விரைவுபடுத்தப்பட்டது.

- **தேசிய ஊரக சுகாதார இயக்கம் (National Rural Health Mission) என்ற ஒரு மைய அரசு உதவியுடனான திட்டத்தின்கீழ், ‘கோவிட்-19 அவசரகால உதவி மற்றும் சுகாதார அமைப்பு தயார்நிலை பேக்கேஜ்’ (Emergency Response and Health System Preparedness Package) தமிழ்நாடு வெறும் ரூ.312.64 கோடியை மட்டுமே பெற்றுள்ளது.**
  - ✓ மைய அரசு மாநில பேரிடர் உதவி நிதி (**State Disaster Response Fund**) யின்கீழ் ஒரு வாரத்திற்கு முன்பாக ரூ.510 கோடியை ஒதுக்கியுள்ளது.

- **பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்டுள்ள முடக்கி வைத்தலில் (lockdown) இருந்து படிப்படியாக வெளியே வருவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்குவதற்காக ஏப்ரல் 16 அன்று, தமிழ்நாடு அரசு ஒரு வல்லுநர் குழுவை அமைத்துள்ளதாக அறிவித்துள்ளது.**
  - ✓ 18 உறுப்பினர் கொண்ட இந்தக் குழுவிற்கு மூத்த ஐஏஎஸ் அதிகாரியும் நிதித்துறைச் செயலாளருமாகிய **திரு.எஸ். கிருஷ்ணன்** தலைமை வகிப்பார்.

- **சென்னை மாநகராட்சி – அதனுடைய வலைத் தளத்திலிருந்த தரவிறக்கம் செய்வதற்கு ஏற்ற ஒரு ‘கொரோனா கண்காணிப்பு செயலி’யைத் தொடங்கி வைத்துள்ளது.**




  - ✓ இந்தப் புதிய செயலியானது கொரோனா வைரஸ் பொதுமக்களிடையே பரவுவதை கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - ✓ ஒரு நபருக்கு காய்ச்சல், வறட்டு இருமல், மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால், அவர் தன்னுடைய வீட்டுக் கதவை ஒரு புகைப்படம் எடுத்து அல்லது தன்னுடைய வீட்டிலிருந்து ஒரு செல்பி எடுத்து இந்தச் செயலி மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அனுப்பலாம்.

- **தமிழ்நாடு – மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலைகளைத் தொடங்க ஏப்ரல் 16 அன்று தயார் நிலையில் உள்ளது**
  - ✓ மாநிலத்தில் நடப்பில் உள்ள தொழிலாளர்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கை சுமார் 84 இலட்சம் ஆகும்.
  - ✓ **ஏப்ரல் 1 அன்று தொடங்கும் நடப்பு நிதியாண்டிற்கான கூலித் தொகையை தமிழ்நாடு அரசு, ஒரு நாளைக்கு ரூ.256 என்று நிர்ணயித்துள்ளது. இது முந்தைய ஆண்டைவிட ரூ.27 அதிகம் ஆகும்.**
  - ✓ மத்திய அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக 2020-21 ஆம் ஆண்டில் ரூ.60,000 கோடியை ஒதுக்கியுள்ளது.
  - ✓ இந்த மகாத்மா காந்தி தேசிய ’ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் நாட்டில் வேலைவாய்ப்பு வழங்கும் மிகப்பெரிய தொழில் ஆதாரம் ஆகும்.
  - ✓ இந்தத் திட்டம் ஆண்டுதோறும் 50 முதல் 60 மில்லியனுக்கும் அதிகமான குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.

- **புதுச்சேரி அரசு – கோவிட்-19ன் தடம், தடயத்தைக் கண்டறிதல் மற்றும் கட்டுப்படுத்துவதற்காக ஒரு புதிய கைபெசி செயலியை உருவாக்கியுள்ளது.**

  - ✓ ‘நாடி’ (**NAADI**) என்ற மேடை மத்திய அரசின் மின்னனு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் மேம்பட்ட கணினி அபிவிருத்தி மையத்தால் (**Centre for Development of Advanced Computing**) உருவாக்கப்பட்டது.
  - ✓ இதில் இரண்டு கைபேசி செயலிகள் அடங்கியுள்ளன - இந்திய குடிமக்களுக்காக 112++ மற்றும் சுகாதார முகமைகளுக்காக **nCoVSatark.**

- **ஆட்டோமொபைல் முன்னணி நிறுவனமாகிய ஹுண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனம், தமிழ்நாட்டில் வென்டிலேட்டர்களை உற்பத்தி செய்து விநியோகம்**

**செய்வதற்காக, ஏர் லிக்குயிட் மெடிக்கல் சிஸ்டம்ஸ் (Air Liquide Medical Systems) நிறுவனத்துடன் ஒரு கூட்டாண்மை ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.**

- **ஏப்ரல் 23, முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி – நோய்தொற்றுக்கு எதிராக நோய் எதிர்ப்புத் திறனை அதிகரிப்பதற்காக 'ஆரோக்கியம்' என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.**

  ✓ அது தொடங்கி வைக்கப்பட்ட பிறகு, முதலமைச்சர் பொதுமக்களுக்கு நிலவேம்புக் குடிநீரையும் கபசுரகுடிநீர் சூரணத்தையும் (மூலிகை கலவைத் தூள்) விநியோகித்தார்.

  ✓ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வசிக்கும் ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு கபசுர குடிநீர் பவுடர் விநியோகம் செய்யவும் மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

- **ஏப்ரல் 24, மாநில அரசு – 'பேரிடர் மேலாண்மை – தரவு பகுப்பாய்வு மையம்' அமைப்பதற்காக தொழில்நுட்ப நிறுவனமாகிய எச்சிஎல் (HCL) உடன் ஒரு கூட்டாமையை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது.**

  ✓ மாநில அரசின் பேரிடர் மேலாண்மை உதவி எண் (ஹெல்ப்லைன் 1070)ஐ எச்சிஎல் நிறுவனம் இயக்கி வருகிறது.

- **சூழ்நிலையை மதிப்பிடுவதற்காகவும் கோவிட்-19க்கு எதிராக போராடும் மாநில அரசின் முயற்சிகளுக்கு உதவுவதற்காகவும் உள்துறை அமைச்சகம், 5 புதிய அமைச்சகங்களுக்கு இடையிலான மத்திய குழு (IMCT)ஐ ஏற்படுத்தியுள்ளது.**

- **கோவிட்-19 பெருந்தொற்றுக்கு எதிரான வளங்களை அதிகரிப்பதற்காக, தமிழ்நாடு அரசு ஏப்ரல் 27 அன்று – அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த அகவிலைப்படி மற்றும் விடுப்பு ஒப்படைப்பு வசதிகளை முடக்குவதாக அறிவித்தது.**

- **நாட்டிலேயே முதன் முறையாக, கோயம்புத்தூர் அஞ்சல் துறை பிரிவு – கோவிட் 19 முத்திரை வாசகத்துடன் கூடிய அஞ்சல் உறையை வெளியிட்டுள்ளது.**

  ✓ 'கோவிட்-19 பெருந்தொற்றுக்கு எதிராக போராடுவதற்காக, பணியிடங்களில் முகக் கவசத்தைப் பயன்படுத்தவும்' (**'To fight against Covid-19 pandemic, wear face mask at workplace')** என்ற ஃபிராங்கிங் வாசகம் அன்பளிப்பு பாக்கெட்டுகளில் வைக்கப்படும் 300 தனியான அஞ்சல் உறைகளில் அச்சிடப்பட்டுள்ளது.

  ✓ ஃபிராங்கிங் (**Franking**) என்பது மொத்த அஞ்சல் அனுப்புகை ஆணைகளில் பயன்படுத்தப்படும் ஒரு அமைப்பு ஆகும்.

- **காவேரி நீர் மேலாண்மை அதிகார அமைப்பு ஜல் ஷக்தி அமைச்சகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது**

  - ✓ நீர்வளம், ஆறுகள் அபிவிருத்தி மற்றும் கங்கை புத்துணர்ச்சி ஆகிய அம்சங்கள் இந்த அமைச்சகத்தின்கீழ் வரும் ஒரு துறையாக உருவெடுத்துள்ளன.

  - ✓ 2018ஆம் ஆண்டு, மத்திய அரசு, காவேரி நீரை தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கு இடையே பகிர்ந்து கொள்வதில் பிரச்சினை இருந்துவந்ததால், அதைத் தீர்த்து வைப்பதற்காக காவேரி நீர் மேலாண்மை அதிகார அமைப்பை (**Cauvery Water Management Authority**) ஏற்படுத்தியது.

APPOLO STUDY CENTRE

# மாநிலங்களும் யூனியன் பிரதேசங்களும்

**தமிழ் நாடு – விரைவில் மகிளா சக்தி கேந்திர திட்டத்தின் கீழ் தமிழகத்தில் 14 மாவட்டங்களில் பெண்களுக்கான மையங்கள் அமைக்கப்படும்.**

- இந்த மையங்கள் கிராமப்புற மகளிர் ஒரே இடத்தில் திறன்மேம்பாடு, பணி வாய்ப்பு, கணினி அறிவு உடல் நலம் சத்துணவு என எல்லா வகையான மேம்பாடுகளையும் பெற உதவும்.

- இவை சேலம், சென்னை, கடலூர், விருதுநகர், பெரம்பலூர், விழுப்புரம், நாமக்கல், திருவண்ணாமலை, திருச்சி, திருவள்ளூர், அரியலூர், தஞ்சாவூர், தேனி மற்றும் வேலூரில் அமைய உள்ளன.

**தேசீய ஜனநாயக கூட்டணி அரசாங்கம் உள்ள மாநிலங்களில் தேசீய குடிமக்கள் பதிவேட்டை செயல்படுத்தமாட்டோம் என அறிவித்த முதல் மாநிலம் பீகார்**

- உத்தரகண்டம் மாநில முதலமைச்சர் திரிவேந்திர சிங் ராவத் தம்முடைய அரசு உத்தரகண்ட மாநில நிர்வாக கோடை கால தலைநகராய் கெயர்சைன் என மாநில சட்டசபையில் தெரிவித்தார்.

- நிதி ஆயோக்கின் சமீபத்திய அறிக்கை போஷன் அப்யான் திட்டத்தை முழுமையாக செயல்படுத்தும் மாநிலங்களில் முதலிடம் பெறுவது ஆந்திர பிரதேசம்.

- ஊட்டத்சத்து குறைவு பிரச்சினையை சரி செய்ய டிசம்பர் 18, 2017 இல் மத்திய அரசு போஷன் அப்யான் திட்டத்தை துவங்கியது. இதன் முன்னர் இத்திட்டம் தேசிய ஊட்டச்சத்து திட்டம் என அழைக்கப்பட்டது.

- மகாராஷ்டிர அரசாங்கம் அம்மாநில ஆட்டோ ரிக்ஷா (தானியங்கி ரிக்ஷரிகளில் மகிழ்வு மணி கருத்தை செயல்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது.

- சென்னை உயர்நீதிமன்ற பணிநிறைவு பெற்ற நீதியரசர் கனகராஜ் அவர்கள் ஆந்திர மாநிலத்தின் புதிய தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- ஏப்ரல் 16ம் நாள் உத்தரப் பிரதேச அரசு அம்மாநில கோவிட் - 19 மாதிரிகளின் தொகுப்பு சோதனை துவக்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

  - ✓ நாட்டிலேயே இந்த தொகுப்பு பரிசோதனை முறையை முயலும் முதல் மாநிலம் உத்திரபிரதேசம்.

- ஏப்ரல் திங்கள் 17 ஆம் நாள் ராஜஸ்தான் கோவிட் 19 விரைவு பரிசோதனை நடத்தும் முதல் மாநிலம் ஆனது.

- வாரனாசி மண்டலம் நான்கு டன் எடையுள்ள பச்சை மிளகாய், வெள்ளரிக்காய், சுரைக்காய் பச்சை காய் கறிகளை அனுப்ப இங்கிலாந்து நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய டெல்லிக்கு அனுப்பியது. இவ்வாறு செய்த முதல் மண்டலம் வாரனாசியே.

- இதற்கு முன்னர் வாரனாசி பிராந்தியம் வளைகுடா நாடுகளுக்கு மட்டுமே காய்கறிகளை அனுப்பியது.

- ஏப்ரல் திங்கள் 28ம் நாள் ஆந்திர பிரதேசம் மாநில முதலமைச்சர் **Y.S.** ஜகன் மோகன் ரெட்டி குண்டூர் மாவட்டத்தில் உள்ள தடேபள்ளியில் "ஜக்கண்ண வித்யா தீவேண" **Jaganna vidya Deeveena"** என்ற திட்டத்தை துவக்கி வைத்தார்.

  - ✓ இதனால் 14 லட்சம் கல்லூரி மாணவர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. இந்த திட்டம் மாணவர் கல்விக்கு கட்டும் கட்டணங்களை அவர்களுக்கு வழங்கும் திட்டமாகும்.

- கிரிஸில் **CRISIL** ஆராய்ச்சி அறிக்கை மீண்டும் உற்பத்தி மின்சார அமைப்பில் கர்நாடகம் முதலிடம்

- ஏப்ரல் திங்கள் 28ம் நாள் கிரினில் ஆராய்ச்சி அறிக்கைப்படி மீண்டும் மின் சக்தி உற்பத்தி செய்யும் வகையில் நிறுவப்பட்டுள்ள அமைப்பு திறனில் நிதியாண்டு 20ல் கர்நாடகம் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. தமிழ்நாடு இரண்டாமிடத்திலும், குஜராத் மூன்றாமிடத்திலுள்ளன.

- சூரியசக்தி மின்சார அமைப்பு முறையில் முதல் மூன்று மாநிலங்கள் ராஜஸ்தான், தமிழ்நாடு மற்றும் கர்நாடகம் காற்றாலை மின்சார உற்பத்தி அமைப்பு முறையில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாநில வரிசையானது குஜரத், தமிழ்நாடு, மகாராஷ்டிரா.

**இடவரிசை பட்டியல்:**

| **பெற்ற இடம்** | **மாநிலம்** | **மெகாவாட் அளவில் உற்பத்தி அமைப்பு** |
|---|---|---|
| **1.** | கர்நாடகம் | **15,232** |
| **2.** | தமிழ்நாடு | **14,347** |
| **3.** | குஜராத் | **10586** |

# தேசம்

- நிதி ஆயோக் தேசிய புள்ளி விவர பகுத்தாய்வு அமைப்பை **National Data and Analytics platform (NDAP)** 2021ல் துவங்கும் என அறிவித்துள்ளது.

- மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் 2024ம் ஆண்டில் இந்திய ரயில்வே (புகை வண்டி)யின் போக்குவரத்து நூறு சதவீதமும் (முற்றாக) மின்சாரத்தில் இயங்கு மென்றும் இம்முறையில் இயங்கும் முதல் ரயில்வே உலகிலேயே இதுவாகத் தானிருக்கும் என அறிவித்தார்.

- இந்திய பிரதம மந்திரி நரேந்திர மோடி மாநிலத்திலுள்ள போடோ பகுதி மேம்பாட்டுக்கு ரூ 1500 கோடி தொகுப்பை அறிவித்தார்.

- மத்திய அமைச்சரவை கீழ்கண்ட மசோதவை அறிமுகம் செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது.

- செய்தி தொழில் நுட்ப கல்வி நிறுவனங்கள் சட்ட சீர்திருத்த மசோதா 2020 **Indian Institutes of Information Technology Laws (Amendment) Bill 2020).**

    - ✓ இந்த மசோதா அரசு – தனியார் இணைப்பு முறை **(Public Private Partnership (PPP)** யில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனங்களாக **(Institutions of National importance).**

    - ✓ போபால், சூரத், பகல்பூர், ரெய்சூர் மற்றும் அகர்தாலாவிலுள்ள இந்திய தொழில்நுட்ப கழங்களை (**IITs)** அறிவிக்கும் திட்டம்.

- இதன் மூலம் கட்டினால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்திய தொழில் நுட்ப கழகங்களின் **(IITs)** மொத்த எண்ணிக்கை 25 ஆக உயரும்.

- மத்திய அமைச்சரவை கொள்கைநிலை ஒப்புதலை மகாராஷ்டிர வதாவனில் ”நில உரிமையாளர் மாதிரி” **(Landlord Model)** பெரிய துறைமுகத்தை அமைக்க வழங்கியுள்ளது.

- யுனெஸ்கோவின் முதன்மை நெறியாளர் ஆர்ட்ரே அசௌலே செவ்வண்ண நகர ஜெய்பூருக்கு உலக பாரம்பரிய நகர **Wold Heritage City)** சான்றிதழை 2020ம் ஆண்டு பெப்ரவரி திங்கள் 5ம் நாள் வழங்கினார்.

- மத்திய அரசு “ஏக் பாரத் ஸ்ரேஷ்ட பாரத்” திட்டத்தை நாட்டின் பல்வேறு மாநிலங்களிடையே பண்பாட்டு ஒற்றுமையை **(Cultural unity)** வளர்க்கத் துவங்கியுள்ளது.

- இத்திட்டம் பல கலாச்சார செயல்பாடுகள் மூலம் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை வளர்ப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

- ✓ இவ்வகை பண்பாட்டு செயல்பாட்டிற்காக வட தென் இந்திய மாநில இணை (ஜோடிகள்) அமைக்கப்பட்டுள்ளன.
- ✓ அவையாவன ஜம்மு காஷ்மீரம் - தமிழ்நாடு, பஞ்சாப் ஆந்திரபிரதேசம் உத்தரகாண்ட் - கர்நாடகா, ஹிமாச்சல பிரதேசம் - கேரளா டெல்லி – சிக்கிம், ராஜஸ்தான் அஸ்ஸாம்.
- ✓ இம் முயற்சியின் அடிப்படை நோக்கமானது மாநிலங்களிடையே பண்பாட்டு வேறுபாடுகளை இணைத்த மக்களிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதாகும்.

- வீட்டு வசதி நகர்ப்புற அமைச்சகம் நன்கு செயல்படும் 20 மேம்பட்ட நகரங்கனை மிக குறைவாய் செயல்படும் நகரங்களுடன் சகோதரி நகரங்களாக இணைத் சேர்க்க முடிவு செய்துள்ளது.

  - ✓ இவ்வமைச்சகத்தினால் செய்யப்பட்ட வரிசை முறையில் நான்கு செயல்படும் 20 நகரங்களாவன அகமதாபாத், வாரனாசி ராஞ்சி, உரய்பூர், நாகபுரி, போபால், சூரத், கான்பூர் விசாகப்பட்டினம், வேலூர், திருப்பூர், வதோதரா, நாஸிக், ஆக்ரா, டேராடூன், தவண்கரே, கோட்டா, பூனா, இந்தூர், மற்றும் அமராவதி

- இந்திய மத்திய பார்லிமென்டின் மக்களவை (லோக்சபா) அரசியலமைப்பு (பட்டியல் இன பழங்குடியினர்) உத்தரவு (மாற்றம்) மசோதாவை குரல் வாக்கெடுப்பு மூலம் பிப்ரவரி திங்கள் முதல் நாள் நிறைறே்றியது.

  - ✓ இந்த மசோதா பரிவாரா மற்றும் தலவாரா இனத்தவர்களை பட்டியல் பழங்குடிகள் பிரிவில் சேர்க்க வழி வகுக்கிறது.

  - ✓ காந்ாடகாவில் பெலாகவி, தார்வாட் பகுதி வாழ் சித்தி இனத்தவரும் உத்தரகன்டை பகுதி வாழ் கித்தி இனத்தவர் போல இப்பிரிவில் சேர்க்கப்படுவர்.

- இந்தியாவின் பெரிய கட்டமைப்பு நிறுவனமான (புஆசு) ஜி.எம்.ஆர் விமான (கட்டமைப்பு) ஐரோப்பாவில் ஒரு விமான நிலையத்தை கட்டி அதை செயல்படுத்தப்போகிறது. ஒரு இந்திய விமான நிலைய கட்டமைப்பு நிறுவனம் இந்த நிலையுற்றுள்ளது இதுவே முதன் முறையாகும்.

- இந்திய மத்திய அரசு பரிதாபாத்திலுள்ள தேசிய நிதி நிர்வாக கழகத்தின் பெயரை **National Institute of Financial Management (NIFM),** அருண் ஜேட்லி தேசீய நிதி நிர்வாக கழகம் **(Arun Jaitley National Institute of Financial Management (AJNIFM)** என பெயர் மாற்றம் செய்யத் தீர்மானித்துள்ளது .

- அஸ்ஸாமின் குடிமக்கள் என நிர்ணயம் செய்ய 1951 ம் ஆண்டு (கணக்கெடுப்பு) இறுதியாண்டாக கொள்ளலாம் என மத்திய உள்துறை அமைச்சகம் நியமித்த குழு கருத்துத் தெரிவித்துள்ளது.

- இந்திய மண்ணுக்குரிய பசுக்களை ஆகிய ஒரு புதிய முயற்சியாக ”சூத்தா பிக்” **(Sutra Pic)** என்பதை அரசாக்கம் வெளியிட்டுள்ளது.

- உலகளாவிய மனித இன் மொழிகள் பற்றி உலக மொழிகளுக்கான கணினியில் வழங்கபடுத்தப்பட்ட தகவலின் 22வது வெளியீட்டு பதிப்பு **(22nd edition of the world language database Ethnologue)** உலகில் 615 மிலியன் (பத்து லட்சம்) மக்கள் பேசும் இந்தி உலக மக்கள் அதிகம் பேசும் மொழிகள் வரிசை பட்டியலில் மூன்றாமிடத்தில் உள்ளதாகக் கூறுகிறது.

  - ✓ மிக அதிக மக்கள் பேசும் மொழி ஆங்கிலம் (1132 மில்லியன்) அடுத்து இரண்டாம் இடம் சீன மாண்டரின் மொழி (1117 மில்லியன்) பங்களா மக்கள் அதிகம் பேசும் மொழிகளில் ஏழாவது இடம் பெறுகிறது இதனை உலகில் 228 மில்லியன் மக்கள் பேசுகின்றனர்.
  - ✓ இனமொழி பட்டியல் இன்றும் மக்கள் பேசும் (வாழும்) மொழிகள் பற்றிய கணினியில் ஒழுங்கு செய்யப்பட்ட தகவல் ஆண்டு தோறும் தருகிறது. இது உலகில் பேசப்படும் 7111 மொழிகள் உள்ளடக்கிய பட்டியலாகும்.

- 2020 ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் (மாதம்) 14ம் நாள் முதன் முதலாய் (மும்பை – புனே இடையே நகர்கள் இணைக்கும் மின்சார பேருந்து சேவை துவங்கியது. இவ்வகையில் இதுவே முதலாவதாகும்.

- (இஸ்லாமியரின்) புனித ஹஜ் பயண 2002 ம் ஆண்டு முறை அமைப்பொழுங்கை முற்றிலும் மின்சார முறை எண் குறியீடு அமைப்பாய் மாற்றிய நாடாக இந்தியா உருவாகியுள்ளது.

- நிலத்தடி தண்ணீர் தேவை அமைப்பை மேம்படுத்த இந்திய அரசாங்கமும் உலக வங்கியும் **$**450 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளன.

- இந்திய அணு சக்தி குழு ஆராய்ச்சியாளர்கள் **(Indian Atomic Energy Commission)** கர்நாடக மாநில பெங்களூரின் அருகேயுள்ள "மாண்டியா" பகுதியில் 14.100 டன் லித்தியம் சேமிப்பு இருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.

  - ✓ லித்தியம் ஒரு அரிய உலோகம் இது முக்கியமாக மின்சாரத்தால் இயங்கும் ஊர்திகளின் மின் கலங்கள் உற்பத்தியில் பன்படுத்தப்படுகிறது.

  - ✓ லித்தியம் அதிக அளவு உற்பத்தி செய்யும் நாடு சிலி அது 8.6 மில்லியன் டன் லித்தியம் உற்பத்தி செய்கிறது

- இந்திய அரசு பாதுகாப்பு கல்வி ஆராய்ச்சி கழகத்தை **(Institute for Defence studies and Analyses)** மனோகர் பாரிகர் பாதுகாப்பு கல்வி ஆராய்ச்சி கழகம் என பெயர் மாற்றம் செய்யத் தீர்மானித்துள்ளது.

- ஒருமுறை பயன்பாட்டு நெகிழி **(Plastic)** பொருட்கள் பயன்பாடு இல்லாத முதல் விமான நிலையமாக டெல்லி பன்னாட்டு விமான மையம் ஆகியுள்ளது.

- உத்தர பிரதேசத்தின் கிழக்கே தாது வளம் மிக்க சோன் பத்ரா மாவட்டமுள்ளது. இங்கு ஏறத்தாழ 3000 டன் தங்க தாது சேமிப்புடைய இரு பகுதிகள் இருப்பதை இந்திய மண்ணியல் வளவாய்வு (அமைப்பு) **(The**

**Geological survey of India (GSI))** உறுதி செய்துள்ளது. இதன் மதிப்பு 12 லட்சம் கோடிக்கும் மேலாகும்.

- உத்தரபிரதேஷ் கானொலியில் இந்தியாவில் அறியப்பட்டுள்ள பெரிய அளவு இறந்தோர் புதைக்குமிடம் உள்ளது. இங்கு இதுவரை 126 புதைப்பிடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கரிமம் கொண்டு காலம் கண்டறியும் சோதனைகள் படி இந்த இடம் 3800 ஆண்டுகளுக்கு முற்பட்டதென தெரிகிறது.

- 2020 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 25 ம் நாள் 3 மில்லியன் டாலர் மதிப்புடைய பாதுகாப்பு பொருட்கள் வாங்கும் ஒப்பந்தத்தை இந்தியாவும் அமெரிக்காவும் முடிவு செய்தன. கையெழுத்தான இராணுவ தளவாட இரு ஒப்பந்தங்களில் கீழ்கண்டன அடங்கும்.

    - ✓ 2.6 மில்லியன் மதிப்புக்கு ஆர் 60 நோமியோ ஹெலிகாப்டர்கள் 24ஐ இந்தியா பெறுதல்.

    - ✓ 800 மில்லியன் டாலர் மதிப்புக்கு யுர் 64நு அப்பாச்சி ஹெலிகாப்டர்கள் 6 எண் இந்தியா பெறுதல்

- பிப்ரவரி திங்கள் 26 ம் நாள் மொத்த செலவினம் 1480 கோடி ரூபாயாகும் தேசீய தொழில்நுட்ப ஜவுளி திட்டம் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்தள்ளது.

- கோவிட் 19 தொற்று நாட்டில் பரவியுள்ளதை சரியாகவும், திறமையாகவும் கண்டறிய ஏப்ரல் திங்கள் 2ம் நாள் மத்திய அரசு ஆரோக்ய சேது என்ற ஒரு புதிய செயலியை துவக்கியுள்ளது.

- இது 11 மொழிகளில் பயன்படுத்தும் முறையில் உள்ளது.

- இந்திய அரசின் கோவிட் 10 என்ற ஆரோக்கிய சேது செயலி 50 மில்லியன் மக்கள் பயன்படுத்தும் செயலியாய் உள்ளது இதுவே உலகின் வேகமாக செயல்படும் செயலியாக உள்ளது.

    - ✓ இச்செயலியே வெறும் 13 நாட்களிலேயே உலகிலேயே மிக அதிகமாக பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது.

- ஏப்ரல் திங்கள் 2ம் நாள் நீதியரசர் ரானேஷ் ஆஸ்வால் ஜம்மு காஷ்மீர் உயர் நீதிமன்ற நீதிபதியாகப் பதவியேற்றார். அவர் பதவி பிரமாணம் இந்திய அரசியலமைப்பு சட்ட முறையில் அமைந்தது. ஜம்மு காஷ்மீர் வரலாற்றில் இத்தகைய பதவி பிரமாணம் நடந்தது இதுவே முதன் முறையாகும்.

- ஆரோக்ய சஞ்சீவினி காப்பீட்டு பத்திரத்தின் கீழ் கோவிட் 19 தொடர்பான மருத்துவமனை தங்கி மருத்துவம் பெறும் செலவினங்கள் அடங்கும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

    - ✓ இந்த காப்பீடு ஏப்ரல் 2020 முதலாம் நாள் அறிமுகம் செய்யப்பட்டது.

- ✓ இந்த காப்பீட்டு பத்திரம் ரூ 1 லட்சம் முதல் ரூ 5 லட்சம் விரையிலான உடல் நல செலவுகளை வழங்கும்.

- ஏப்ரல் திங்கள் 3ம் நாள் இந்திய அரசு பயனாளிகளுடைய வங்கி கணக்கிற்கு பணத்தை செலுத்தும், இதுவரை இல்லாத பெரிய திட்டத்தை துவக்கியது.

    - ✓ இந்த பணமாற்றுத் திட்டத்தில் 30,000 கோடி ரூபாய் ஜன் தன் வங்கி கணக்குடைய மகளிர் கணக்கில் செலுத்தப்படும் ரூ5000 கோடி உஜ்வால் திட்டத்தின் கீழ் **LPG** எரிவர்யு இணைப்பு பெற்ற எட்டு கோடி ஏழை மக்களின் வங்கி இணைப்பு கணக்கில் செலுத்தப்படும்.

    - ✓ இந்த ஊக்கத்திட்டம் பிரதான் மந்திரி காரிப் கல்யாண் தொகுப்பு பின் ஒரு பகுதி என முன்பே நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் சொன்னார்.

    - ✓ கொரோனா காரணமான ஊரடங்கு காலத்தில் துன்பமுறும் ஏழைகள் மற்றும் எளிதில் பாதிக்கப்படும் ஏழை மக்களுக்கு உதவுவதே இந்தத் தொகுப்பின் நோக்கமாகும்

    - ✓ பிரதான் மந்திரி ஜன் தன் பணமாற்று திட்டம் துவங்கிய முதல் நாளிலேயே நான்கு கோடி பெண்கள் வங்கி கணக்கில் தலா ரூ 500 செலுத்தப்பட்டது.

- ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் கோவிட் 19 க்கு இலவச பரிசோதனை மருத்துவம் அளிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- இந்திய தேசிய நெடுஞ்சாலை அமைப்பு அண்மையில் 3979 கிலோ மீட்டர் நீளமான தேசிய நெடுஞ்சாலை பணியை நிறைவு செய்துள்ளது. இது நிதியாண்டு 2019 – 2020 உருவான முக்கிய பாரத்மாலா பரியோஜனா" திட்டத்தின் கீழ் அடங்கும் பாரத்மாலா பரிசோதனை திட்டம் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சகம் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

    - ✓ இந்திட்டம் 2015 ல் தொடங்கப்பட்டது.
    - ✓ இது தேசீய நெடுஞ்சாலையாக 5000 கிலோ மீட்டர் அமைக்கும் பணியை தன் இலக்காக கொண்டுள்ளது.
    - ✓ இதன் முதல் நிலையில் 27500 கிலோ மீட்டர் தேசீய நெடுஞ்சாலை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.
    - ✓ இந்த முதல் நிலைத் திட்டம் துவங்கப்பட்ட நாளிலிருந்து 5 ஆண்டு காலத்தில் நிறைவுற வேண்டும் என கருதப்பட்டது.

- 2020 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12ம் நாள் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் யுக்தி என்ற புதிய இணையதள முகவரியைத் துவங்கினார்.

    - ✓ யுக்தி என்பது இளைய இந்தியா (இளவயதினர்) அறிவு, தொழில் நுட்பம், புதிய கண்டுபிடிப்பு மூலம் கோவிட்டை எதிர் கொள்ளல் என்பதின் சுருக்கமே யாகும்.

- ✓ இந்த இணையதள முகவரி மனித வள மேம்பாட்டு துறை எதிர்வரும் ஆறு மாதங்களால் தன் செயல்பாட்டை திறனுடையதாக திட்டமிட உதவும்.

- அகில இந்திய மருத்துவ கழகம் ரிஷி கேகத்திலுள்ள அது **BHEL** எனும் பாரத் ஹெவி எலக்டடிரானிக்ஸ் உடன் இணைந்து இந்தியாவிலேயே முதன் முறையாக தொலைவிலிருந்து உடல் நலம் கண்காணிக்கும் அமைப்பை ஏற்படுத்தியுள்ளது.

- மத்திய வேளாண் அமைச்சகம் "கிஸான் தத்" என்ற அலைபேசி செயலியை துவக்கியுள்ளது.

  - ✓ இது உழவர்களும் வணிகர்களும் இணைப்புடைய 5 லட்சத்திற்கும் மேலான வணிக சரக்கு வண்டி (**truck)** மற்றும் 20,000 இழுவை இயந்திரங்களுடன் **(traders)** தொடர்பு கொள்ள உதவும்.

- இந்திய அரசு தேசிய கப்பல் (ஏற்றுமதி) குழுவை மாற்றி அமைத்தள்ளது **(National shipping Board (NSB)** இப்போது இதன் தலைவராக கப்பல் (ஏற்றுமதி) துறை முன்னாள் முதன்மை நெறியாளர் மாலினி சங்கர் இருப்பார்.

- உலகில் இராணுவத்துக்கு அதிக செலவிடும் முதன்மை மூன்று நாடுகள் பட்டியலில் ஒன்றாக முதன் முறையாக இந்தியா இடம்பெற்றுள்ளது.

- இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகத்தின் (**India council of Medical Research (ICMR)** ஒப்புதலுடன் கோவிட் 10 நோயாளிகளுக்கு பிளாஸ்மா சிகிச்சையை லக்னோவிலுள்ள ஜார்ஜ் மன்னர் மருத்துவ பல்கலைக்கழகம் துவங்கியுள்ளது. இதனால் இம்முறை சிகிச்சை மேற்கொள்ளும் முதல் அரசாங்க மருத்துவ மனையாகிறது.

- ஏப்ரல் திங்கள் 28ம் நாள் இந்திய அரசு எங்கும் பரவியுள்ள கோவிட் 19 தொற்று நோயை எதிர்கொள்வதற்கு உதவியாக ஆசிய முன்னேற்ற வங்கி (**Asian Development Bank (ADB)** வழங்கும் 1.5 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் வங்கி நிர்வாகமும் இந்திய அரசும் கையொப்பமிட்டுள்ளன.

- இந்திய அரசு சர்வதேச நிதிச் சேவை மைய அமைப்பை **(International Financial Services Centre Authority)** ஏற்படுத்தியது.

  - ✓ இந்த புதிய அமைப்பின் தலைமையிடம் குஜராத் மாநில காந்தி நகரில் அமைக்கப்படும்.

  - ✓ இந்த அமைப்பு சர்வதேச நிதிச் சேவை மைய அமைப்பு நிதி சந்தைகளை **(financial markets)** ஒழுங்குபடுத்தும்

# Budget நிதி நிலை அறிக்கை
# (வரவு செலவுத் திட்டம்)

- 2020ம் ஆண்டு பிப்ரவரித் தங்கள் 1ம் நாள் மத்திய நிதியமையச்சர் நிர்மலா சீதாராமன் 2020ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை (வரவு செலவுத் திட்டம்) மக்களவையில் வழங்கினார்.

    - ✓ ஒரு நிதியமைச்சரின் மிக நீண்ட உரை இதுவே இது 2 மணி 20 நிமிடம் அல்லது 160 நிமிடமாயிருந்தது.
    - ✓ மூன்று பெரிய கருத்துக்களை இந்த நிதிநிலை அறிக்கை அடிப்படையாய் கொண்டிருந்தது. அவையாவன விரும்பும் பாரதம் (எல்லாருக்கும் மேம்பட்ட வாழ்வு) எல்லாருக்கும் பொருளாதார முன்னேற்றம் (தனியார் துறைக்கு அதிக வாய்ப்பு) பேணும் சமுதாய உருவாக்கம்.

- 2020 வரவு செலவு திட்ட முக்கிய அம்சங்கள்

**வருமான வரி (Income Tex):**

- ✓ வருமான வரி அமைப்பில் மாற்றம் இது 5 லட்சம் முதல் 15 லட்சம் வரையான வருமானத்துக்கு நான்கு அடுக்கு முறையில் அமைத்து அவற்றுக்கான வரிவிகிதமும் குறைக்கப்பட்டுள்ளது.
- ✓ ரூ 5லட்சம் முதல் - **7.5** லட்சம் வரை – **20%** சதவீத வரி **10** சதவீதமாக குறைவு.
- ✓ ரூ 5 லட்சம் முதல் ரூ **10** லட்சம் வரை – **20%** சதவீத வரி **15** சதவீதமாக குறைப்பு
- ✓ ரூ 10 லட்சம் முதல் ரூ **12.5** லட்சம் வரை – **30%** சதவீதவரி **20** சதவீதமாக குறைப்பு
- ✓ ரூ 12.5 லடசம் முதல் ரூ **15** லட்சம் வரை – **30%** சதவீத வரி **25%** ஆக குறைப்பு

**வெளிநாடு வாழ் இந்தியர் Non Resident Indians - புதிய வரையரை விளக்கம்:**

- அரசாங்கம் வெளிநாடு வாழ் இந்தியா விளக்கத்தை மாற்றியுள்ளது
- இந்தியாவில் வாழந்து கொண்டு வெளிநாடு வாழ் இந்தியர் என்ற சலுகையில் வரிகட்டாமல் இருப்போரை கைது செய்யும் முறையில் இது உள்ளது.
- முன்பு இந்தியாவை விட்டு வெளிநாட்டில் 183 நாட்கள் அல்லது ஏறத்தாழ 6 மாதம் தங்குபவர் வெளிநாடு வாழ் இந்தியர் வகையில் பிரிக்கப்பட்டார்.
- இப்போது வெளிநாடு வாழ் இந்தியா தகுதிபெற ஒருவர் வெளிநாட்டில் 245 நாட்கள் வாழ வேண்டும்.

**மத்திய அமைப்பு / திட்டங்களுக்கு ஒதுக்கீடு:**

- ஜல ஜீவன் திட்டத்தின் கீழ் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்கட்தொகை நகரத்தில் ஒவ்வொரு வீடும் குழாய் இணைப்பு தண்ணீர் 2021 மார்ச்சுக்குள் பெற மத்திய அரசு மாநிலங்களுக்கும் உள்ளூர் நிர்வாகத்தினருக்கும் உரிய ஊக்குவிப்புத் தரும்.

- இதற்காக அரசாங்கம் 11,500 கோடி ரூபாயை அடுத்த நிதியாண்டில் ஒதுக்கும் இதனால் இத்திட்டம் செயல்படுத்தபடும் இதன் நோக்கம் 2024 ம் ஆண்டுக்குள் நாட்டிலுள்ள எல்லா வீடுகளுக்கும் குடி தண்ணீர் வழங்குவதே.

- நிதி அமைச்சர் ஸ்வச் பாரத் திட்டத்திற்கு ரூ 12,300 கோடி ஒதுக்கியுள்ளதாய் அறிவித்தர். இத்திட்டம் திறந்த வெளியில் மலம் கழிப்பதை நீக்கும் அம்சத்திற்கு கவனம் செலுத்தும் நகர் கிராம புறங்களில் திறந்த வெளி மலம் கழிப்பு நீக்கத்தை பெற்றுள்ள நிலையை தொடர்ந்து காப்பாற்றுவதே இதன் குறிக்கோள்

- மேம்பட்ட நகர் திட்ட 2015ல் துவங்கப்பட்டது. இதற்காக 100 நகரங்கள் இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதன்நோக்கம் இந்த நகரங்களை முடிமக்களுக்கு இசைவாக்கி அந்நிலையைத் தொடரச் செயவதே.

- நிதியமைச்சர் 100 புதிய விமான நிலையங்கள் 20254 க்குள் உதான் திட்டத்திற்கு வலுசேர்க்க மேம்படுத்தப்படும் என அறிவித்தார். உதான் திட்டம் பிராந்தியங்கள் இடையே மேம்பட்ட தொடர்பை ஏற்படுத்துவதாகும்.

**வரி கட்டுவோருக்கான திட்டமிடப்பட்ட சாசனம்:**

- அரசாங்கம் வரி செலுத்துவோருக்கான திட்டமிடப்பட்ட சாசனம் ஒன்றை அறிமுகம் செய்யுமென அறிவிக்கப்பட்டது. இது நிதிநிலை அறிக்கை நிறைவேற்றும் தருணம் ஒரு மசோதாவாய் அமையும்.

- இந்த சாசனம் வரி செலுத்துவோரின் உரிமைகளையும் வரிவசூல் இலாகாவின் கடமைகளையும் வரையறுக்கும்.

- இந்த வகை சாசனம் பற்றி 42 நாடுகளில் ஆய்வு செய்ததில் 40 நாடுகளில் இத்தகு சாசனங்கள் உள்ளன. ஆனால் சட்டவழி முறையில் இவற்றுள் **33%** சதவீதம் நன்கு செயல்படுகிறது.

**புதிய திட்டங்கள் - கிஸான் ரயில் / மற்றும் கிஸான உதான்:**

- வேளாண் உற்பத்தி பண்ணைகள், வேளான் சந்தை மற்றும் நுகர்வோர்கள் சிறிதும் இழைசாற்ற தொடர்பு சாதனம் தேவை. அப்போது தான் வேளாண் உற்பத்தியாளர்கள் தம் விளைபொருட்களை சந்தைகட்டும் நுகர்வோர்களுக்கும் எடுத்துச் செல்ல இயலும் இதனால் அவர்கள் வருமானம் அதிகரிக்கும். இந்த நோக்கங்களை நிறைவேற்ற இந்த நிதி நிலையறிக்கை கிஸான் ரயில் மற்றும் கிஸான் உதான் சேவை திட்டங்கள் இடம் பெற்றுள்ளன.

**கிஸான் கடன் அட்டை திட்டம் இன்றைய நிலை வரை சரி செய்தல்: (KCC Scheme updation):**

- நிதியமைச்சர் பிரதன் மந்திரி கிஸான் (வருமான உதவித திட்டம்) கிஸான் கடன் அட்டை திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும் என அறிவித்தார். இந்த செயல்பாட்டால் 14 கோடி உழவர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் பெறும் கிஸான் அட்டைத் திட்டத் தொடர்பு கிட்டும்.

- கிஸான் கடன் அட்டைத் திட்டம் 1998 ம் ஆண்டு துவங்கப்பட்டது. இதுவரை இதனை ஏறத்தாழ 7 கோடி நில உடைமையாளர்கள் பெற்றுள்ளனர்.

- கிஸான் அட்டைகள் உழவர்கள் குறுகிய கால கடன் வங்கிகளிடமிருந்து பெற உதவுகின்றன. இக்கடன் தொகைகள் அவர்கள் வேளாண் தொழிலுக்கான விதைகள் உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள் போன்ற பலதிறப்பட்ட வேளாண் தேவைகளைப் பெற உதவுகின்றன.

**குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (MSME sector):**

- இத்துறையில் சிறிய சில்லரை வணிகர், வியாபாரிகள் கடைக்காரர் என்பவர் அடங்குவர். இவர்களது கணக்குகள் ஒரு கோடிக்கு மேலாய் வரவு செலவுடையதாய் இருந்தால் இதுவரை கணக்காய்வுக்கு தணிக்கைக்கு உட்பட்டிருந்தது இந்த அளவை ஐந்து மடங்காய் உயர்த்தி ரூபாய் 5 கோடி என நிர்ணயிக்க நிதிநிலை அறிக்கை திட்டமிட்டுள்ளது.

**கல்வி:**

- உயர்கல்வி நிறுவனங்கள் 100ல் தெரிவு செயப்படும் நிறுவனங்கள் ஏழை மாணவருக்குதவும் விதமாக பட்டபிடிப்பு நிலையிலான கல்வித் திட்டங்கள் இணையதள வழியில் வழங்கும்.

- ஆரம்பநிலை, துவக்க முறையாக 150 உயர்கல்வி நிறுவனங்கள் கல்வி காலத்திலே பணி பயிற்சியை உள்ளடக்கிய **(apprenticeship embedded)** பட்டம் பட்டயம் **(degree/diploma)** பாடப் பயிற்சி தொடர்களை 2021 மார்ச் திங்களுக்குள் துவங்கும்.

- பல்கலைக் கழக மான்ய குழு (**UGC**) வழிகாட்டியாய் ஏழு உயர்கல்வி நிலையங்களான **IGNOU, JSS** அகாடமி, மணிப்பால் அகாடமி, பாரதிய வித்யா பீத், ஷண்முகா அகாடமி டாக்டர் **Y.V.** பாட்டில் விதியாபீடம் இவைகள் இணையதள கல்வி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

- மேலும் அரசாங்கம் உயர் கல்வித் துறையின் அன்னிய நேரடி முதலீட்டிற்கும் (**FDI**) வெளியிலிருந்து நிதிக் கடன் பெறவும் அனுமதி வழங்கியுள்ளது.

- அரசின் பிற திட்டங்களாவன: தேசிய காவல் துறை பல்கலைக்கழகம் **(National Police University)** தேசிய தடயவியல் விஞ்ஞான பல்கலைக் கழகம் **(National Forensic Science Universtiy for forensic science, cyber-forensics,** (தடயவியல் மற்றும் தகவல் தொடர்பு இணைவழி தடயவியல்) இவை தவிர நகர்புற, கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் புதிதாய் கல்வி நிறைவு செய்த பொறியாளர்கள் ஒராண்டு வரை கல்வி நிறைவு (பட்டறிவு) பணிப் பயிற்சி பெறும் வகையில் ஒரு திட்ட அமைப்பு.

- 2019 – 20 ஆண்டில் கல்விக்கான ஒதுக்கீடு ரூ 94,853.64 கோடியாய் இருந்ததை 2020- 21 ம் நிதியாண்டில் 99.300 கோடியைய் உயர்த்தவும் இதில் ரூ 3000 கோடியை திறன் மேம்பாட்டுக்காய் செலவிடவும் நிதிநிலை அறிக்கை திட்டமிட்டுள்ளது.

- **அரசாங்க பணிகளுக்கான புதிய முகமை செயலாண்மையகம்**

  **New Agency for Governement jobs**

- அரசாங்கம் தேசீய நியமன முகமை **(National Recruitment Agency)** ஒன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளது. இது கணினி முறையிலமைந்த பொது தகுதி தேர்வை நடத்தும் **(computer – based common eligibility test)** இத்தேர்வு கெஸட் மகுதியில்லாத பணியிடங்களுக்கு செல்லுபடியாகும். இதில் பெறும் மதிப்பெண்கள் (தேர்வு பெற்ற காலத்திலிருந்து) மூன்றாண்டுகளுக்கு நியமன செயலுக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

- இந்த தேர்வுக்கான தேர்வுமையங்கள் மாவட்டம் தோறும் அமைக்கப்படும் தேர்வு எழுதுவோர் "விரும்பு மாவட்டங்களை" **(Aspirational districts)** தேர்வு செய்ய இது வழி வகுக்கும்.

- தொழில் நுட்பம் சாராத பணியிடங்களுக்கு **(SSLC)** 12ம் வகுப்பு தேறியவர் பட்டதாரி கல்வி தகுதியுடையோருக்கான தனித் தனித் தேர்வுகள் நடத்தப்படும்.

- இப்போது இந்தப் பணியிடங்களுக்கான தேர்வு பணியாளர் தேர்வுக் குழு **(Staff selection commission)** இரயில்வே பணியமர்த்து நிர்வாகக் குழு **(Railway Recruitment and)** வங்கிப் பணியாளர் தேர்வு அமைப்பு **Institute of Banking personnel selection)** மூலம் நடைபெறுகிறது.

**நலவாழ்வுத் துறை (Healthcare sector):**

- உடல் வளம் நலம் பேணும் துறை செலவினங்களுக்காக ரூ 69,233 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நிதியமைச்சர் அறிவித்தார். இதில் உடல் நல ஆரோக்கிய ஆராய்ச்சியும் ஆயுஷீம் அடங்கும்) 2019 – 20 நிதியாண்டு திருத்தப்பட்ட திட்டப்படி ஒதுக்கீடு இத்துறைக்கு ரூ **66,126** கோடி மட்டுமே இவ்வாண்டு இத்துறைக்கான ஒதுக்கீடு **42%** சதவீதம் என்ற அளவு குறைந்த அளவு அதிகரிப்பே பெற்றுள்ளது.

- உலகிலேயே மிகப் பெரிய அரசே நடத்தும் உடல்வள நல காப்பீட்டுத் திட்டம் ஆயுஷ்மான் பாரத் - பிரதான் மந்திரி ஜான ஆரோக்கிய யோஜனா வாகும். இதன் செலவினமாய் திட்டமிடப்பட்டுள்ள ரூ 6400 கோடியும் உடல் வள நலம் பேணும் துறைக்கான மொத்த செலவின ஒதுக்கீடான ரூ 69,233 கோடியில் அடங்கும்.

- ஒருமில்லியனும் அதற்கு மேலுமான மக்கட் தொகையுடைய நகரங்களில் (காற்று மாசு குறைக்க) காற்றின் நிலையை மேம்படுத்த மாநிலங்கள் உரிய திட்டங்கள் உருவாக்க ரூ 4400 கோடி நிதி ஒதுக்கீட்டை அரசாங்கம் அறிவித்துள்ளது.

**மகளிரும் குழந்தைகளும் (Women and children)**

- இந்த நிதிநிலை அறிக்கையின் மூன்று முக்கிய குறிக்கோள் அடிப்படையில் ஒன்று "பேணும் இந்தியா" (சமுதாய உருவாக்கம்) மகளிரும் குழந்தைகளும்

இந்த அடிப்படையின் கீழ்வகைப்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு அமைச்சகங்கள் தொடர்புடைய ஊட்டச்சத்து தொடர்பான திட்டங்களின் செலவினமாக (35600 கோடியை நிதியமைச்சர் இந்த ஆண்டு இந்நிலை அறிக்கையில் ஒதுக்கியுள்ளார்.

- மேலும் இந்த நிதிநிலை அறிக்கை பெண்கள் குழந்தைகள் முன்னேற்ற **Women and Children Development)** அமைச்சகத்துக்கு ரூ 30,007 கோடி ரூபாய் செலவின நிதியாக ஒதுக்கீடு செய்துள்ளார். இது நடப்பு நிதியாண்டான 2019 – 20 க்கான ஒதுக்கீடான தொகையை விட ரூ 3822 அதிகமாகும்.

**துறை ஒதுக்கீடுகள் (Department allocations)**
**விண் வெளி (Space):**

- விண்வெளித் துறை செலவினங்களுக்கு நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் செய்துள்ள ஒதுக்கீடு குறைந்த அளவே இது முந்தைய நிதியாண்டு ஒதுக்கீட்டை விட ரூ 340 கோடி அதிகமாகும்.

- விண்வெளித் துறைக்கான 2020-21ம் நிதியாண்டு செலவின ஒதுக்கீடு மொத்தமாக ரூ 13,479 கோடியாகும். 2019 – 20 ம் ஆண்டுக்கான மாற்றியமைக்கப்பட்ட திட்ட செலவு ஒதுக்கீடு ரூபாய் 13,139 ஆக இருந்தது.

**விளையாட்டுத் துறை**

- விளையாட்டுத் துறை செலவினங்களுக்கு எதிர்வரும் நிதியாண்டிற்கு (2020 – 21) அரசாங்கம் ரூபாய் 2826.92 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது. இது முந்தைய நிதியாண்டு 2019 – 20ல் மாற்றியமைக்கப்பட்ட செலவின ஒதுக்கீட்டை விட வெறும் (ரூ 50 கோடி) அதிகரிப்பு மட்டுமேயாகும்.

- அரசாங்கம் அதன் முக்கியத் திட்டமான கேலோ இந்தியா **(Khelo India**)வுக்கு ரூபாய் 890.42 கோடியை ஒதுக்கியுள்ளது. 2019 – 20 நிதியாண்டில் இத்திட்டத்திற்க மாற்றியமைக்கப்பட்ட செலவினம் ரூ 578 கோடி மட்டுமே இதனோடு ஒப்பிடும் போது இவ்வாண்டு 2020 – 21 ஒதுக்கீடு மிகக் கணிசமான அளவு உயர்வுடையதாகிறது.

## MGNREGA:

- 2019 ம் ஆண்டு ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்துக்கு ரூ 60,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் மொத்தமாய் ஆன செலவோ ரூ 71000 கோடியானது.

- இருப்பினும் 2020-21ம் ஆண்டுக்கு இத்துறை செலவுக்கு ரூ61500 கோடியை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

**உள்துறை அமைச்சகம் (Home ministry):**

- மத்திய அரசின் 2020 – 21ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் உள்துறை அமைச்சக செலவினங்களுக்கு மொத்த தொகையாக **Rs** 1,67,250 கோடியை ஒதுக்கியுள்ளது. இந்த ஒதுக்கீட்டில் கிட்டதட்ட 63% சதவீதம்

காவல்துறை மேம்பாட்டு ஆதார தேவைகளை மேம்படுத்து செலவினத்திட்டங்களுக்கும் மற்றும் காவல் அமைப்பு செயல்படவும் போகும்.

- **நிர்பயா (பெண்மை தாக்குதல்) வழக்கின் குற்றவாளிகள் நான்கு பேர் மார்ச்சு திங்கள் 20ம் நாள் கழுத்தில் கயிறு இடப்பட்டு தூக்கில் தொங்கவிடப்பட்டனர்.**

- இந்த தூக்கிலிடும் தண்டனையை நிறைவேற்றியவர் அச்செயலை (தூக்கிலிடும்) செய்தவரான பவான் ஜலாத் ஆவர்.

- ஸ்வாலம்பன் எக்ஸ்பிரஸ் என்ற திட்டத்தை 2020 ஜீ 05 ம் நாள் இந்திய சிறுதொழில் முன்னேற்ற வங்கி **The small Industries Development Bank of India (SIDBI)** துவங்கியுள்ளது.

APPOLO STUDY CENTRE

# இந்தியா மற்றும் இதர நாடுகள்

- **இந்தியாவும் மாலத்தீவுகளும் - பிப்ரவரி 02 அன்று 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.**

  - இந்த புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் நோக்கம், மாலத்தீவுகளில் உள்ள 5 அட்டு அட்டோல் (**Addu Atoll**) தீவுகளில், 24,090,000 டாலர் நிதி ஒதுக்கீட்டில் அட்டு சுற்றுலா மண்டலங்களை 'ஏற்படுத்துவதேயாகும்.
  - இது மட்டுமில்லாமல், ஹோரா.ஃபுஷியில் தண்ணீர் புட்டியில் அடைக்கும் ஆலையை அமைப்பதற்காக ஆறாவது புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட்டது.

- **இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே இரட்டை விரிவிதிப்பு முறை தவிர்ப்பு ஒப்பந்தம் - பிப்ரவரி 12 அன்று திருத்தம் செய்யப்பட்டது.**

  - இந்த இரட்டை விரிவிதிப்பு முறை தவிர்ப்பு ஒப்பந்தம் ஜனவரி 22, 2013 அன்று கையெழுத்திடப்பட்டு, அக்டோபர் 22, 2013 அன்று அமலுக்கு வந்தது.

- **100 மில்லியன் டாலர் லைன் ஆப் கிரெடிட் (Line of Credit) திட்டத்தின் கீழ் வியட்நாமிற்காக கட்டப்பட்டு வரும் முதலாவது அதிவேக ரோந்து படகு –லார்சன் மற்றும் டூப்ரோ (எல் அண்ட் டி) நிறுவனத்தால் செப்டம்பரில் வழங்கப்படும்.**

- **இந்தியா மற்றும் போர்ச்சுகல் - இந்த இரண்டு நாடுகளுக்கும் இடையே பல்வேறு துறைகளில் கூட்டுறவை மேம்படுத்துவதற்காக 7 ஒப்பந்தங்கள் சமீபத்தில் கையெழுத்திடப்பட்டன.**

  - பிரதமர் நரேந்திர மோடி மற்றும் போர்ச்சுகீசிய அதிபர் மார்செலோ ரொபேலோ டீ சௌசா ஆகியோருக்கு இடையே பேச்சு வார்த்தை முடிவுற்ற பிறகு இரு தரப்புமே இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டன.
  - இதுவே போர்ச்சுகீசிய அதிபரின் முதலாவது இந்தியப் பயணம் ஆகும்.

- **இந்தியாவும் மியன்மாரும் - பல்வேறு துறைகளில் 10 புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் பிப்ரவரி 26, 2020 அன்று பகிர்ந்து கொண்டன.்.**

  - இந்தியா, மியன்மாரின் 5வது மிகப்பெரிய வர்த்தக பங்குதாரர் ஆகும்.

- **இந்தியா – சார்க் நாடுகளிடையே சுகாதார வல்லுநர்களை நிகழ்நேரத்தில் பரிமாறிக் கொள்வதற்காக, 'தகவல் பரிமாற்ற மேடை' (Information Exchange Platform) ஐ தொடங்கி வைக்க திட்டமிட்டுள்ளது.**

# சர்வதேச நிகழ்வுகள்

- **உலக சுகாதார நிறுவனம் - 213 பேரைக் கொன்றுள்ள கொரோனா வைரஸ் பெருந்தொற்றை, உலகளாவிய அவசரநிலையாக அறிவித்துள்ளது.**

- **இங்கிலாந்து – ஜனவரி 31 (4.30 ஐஎஸ்டி-பிப்ரவரி 1) அன்று உள்ளூர் நேரப்படி பிப 11 மணிக்கு ஐரோப்பிய யூனியனில் இருந்து அதிகாரபூர்வமாக வெளியேறுகிறது.**

    - இவ்வாறாக, 28 உறுப்பு நாடுகளைக் கொண்ட அந்த ஒன்றியத்திலிருந்து வெளியேறும் முதல் நாடாக இங்கிலாந்து விளங்குகிறது. 1973க்குப் பிறகு முதன் முறையாக அது தனியாகச் செயல்படப் போகிறது.

- **மாலத்தீவுகள் - பிப்ரவரி 1 அன்று காமன்வெல்த் நாடுகள் கூட்டமைப்பில் அதிகாரபூர்வமாக மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.**
    - மாலத்தீவுகள் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டதால், இந்த கூட்டமைப்பு உறுப்பு நாடுகளின் மொத்த எண்ணிக்கை மீண்டும் 54 ஆக அதிகரித்துள்ளது.

- **ஹாங்காங் - சீனாவுக்கு வெளியே இரண்டாவதாக, தன்னுடைய முதலாவது கொரோனா வைரஸ் இறப்பை பிப்ரவரி 4 அன்று பதிவு செய்தது.**

- **அமெரிக்க அரசியல் வரலாற்றில் குற்றச்சாட்டு விசாரணையை எதிர்கொள்ளும் மூன்றாவது அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் விளங்குகிறார்.**

    - டொனால்டு டிரம்ப் அல்லாமல், மேலும் இரண்டு அமெரிக்க அதிபர்கள் அமெரிக்க மக்கள் பிரதிநிதித்துவ சபையால் குற்றச்சாட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டனர் - அவர்கள் ஆன்ட்ரூ ஜான்சன் 1868ல், பில் கிளிண்டன் 1998ல்.
    - இருப்பினும் இந்த மூன்று அதிபர்களும் செனட் சபையால் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டனர். எனவே, அவர்கள் தங்கள் பதவியிலிருந்து நீக்கப்படவில்லை.

- **ஐக்கிய அரபு எமிரேட் - அரபு உலகின் முதலாவது அணுமின் நிலையமாகிய, அபுதாபியில் உள்ள பராக்கா அணுமின் நிலையம் செயல்படுவதற்கு செயல்பாட்டு அனுமதியை வழங்கியுள்ளது.**

- **சீனா – மார்ச் 2020ல் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளது.**

- **ஐரோப்பாவில் உள்ள லக்சம்பர்க் (Luxembourg) – அனைத்து வகையான பொது போக்குவரத்தையும் 'இலவசமாக' வழங்கும் முதலாவது நாடாக ஆகியுள்ளது.**
    - எஸ்டோனியாவின் தலைநகரமாகிய தல்லின் (**Tallinn**) மற்றும் பிரெஞ்சு நகரமாகிய டன்கிர்க் (**Dunkirk**) ஆகியவை பேருந்து போக்குவரத்தை இலவசமாக ஆக்கியதுடன், அனைத்து பயணிகளுக்கும் கிடைக்கக்

கூடியதாக ஆக்கியுள்ளன. இருப்பினும், இந்தத் திட்டம் நாடு முழுவதும் அமல்படுத்தப்படவில்லை.

- அக்டோபர் 2019ல், டெல்லி மாநில அரசு இதே போன்ற ஒரு திட்டத்தை அறிவித்தது, அதன்படி பெண்கள் அனைவருக்கும் பொது போக்குவரத்து இலவசமாகும்.

- **லெபனான் - மரிஜுவானா பயிர் செய்வதை சட்டபூர்வமாக்கிய முதலாவது அரபு நாடு ஆகும். கஞ்சா பயிரிடுவதை மருத்துவ பயன்பாட்டிற்காக சட்டபூர்வமாக்கியுள்ளது.**




- **சீனா – தன்னுடைய முதலாவது செவ்வாய் கிரக ஆய்வு கலத்திற்கு 'தியான்வென்-1' (Tianwen-1) என்று பெயரிட்டுள்ளது. அது இந்த ஆண்டின் இறுதியில் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

- **ஈரான் - தன்னுடைய முதலாவது இராணுவ செயற்கைக் கோளாகிய 'நூர்' (Noor) ஐ விண்ணில் செலுத்தியது, அது பூமியில் இருந்து 425கிமீ சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.**

# நியமனங்கள்

- **முதுபெரும் விண்வெளி விஞ்ஞானியாகிய ஜி. நாராயணன் - இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள வர்த்தக அமைப்பாகிய, நியூ ஸ்பேஸ் இந்தியா லிட் (New Space India Ltd) இன் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

- **மத்திய அரசு - மூத்த ஐஏஎஸ் அதிகாரியாகிய ராஜிவ் பன்சாலை, பிப்ரவரி 13 அன்று ஏர் இந்தியாவின் சிஎம்டி (தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்) ஆக நியமித்தது.**

- **சுரேஷ் பட்டேல், ஆந்திரா வங்கியின் முன்னாள் சிஎம்டி – விஜில்ன்ஸ் ஆணையராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அதே சமயம் பஞ்சாபின் முன்னாள் சிவில் சர்வீசஸ் ஆணையராக இருந்த அமிதா பாண்டோவ் தகவல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

- **மத்திய அரசு – முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியும், குடியரசுத் தலைவரின் செயலாளருமாகிய சஞ்சய் கோத்தாரியை முதன்மை விழிப்புப் பணிகள் (chief vigilance commissioner) ஆணையராக நியமித்துள்ளது.**

- **இந்திய – அமெரிக்கராகிய ஸ்ரீ ஸ்ரீனிவாசன் - வாஷிங்டன் டி.சி-யின் செல்வாக்கு மிக்க 'மேல்முறையீட்டு நீதிமன்றத்தின்' (Appeals court) முதன்மை நீதிபதியாக பதவியேற்றுக் கொண்டார்.**
    - இந்த நியமனத்தைத் தொடர்ந்து, அமெரிக்க உச்ச நிதிமன்றத்திற்கு ஒரு நிலை கீழ்நிலையில் உள்ள ∴பெடரல் நீதிமன்றத்தை வழிநடத்தும் இந்தியாவைச் சேர்ந்த முதலாவது நபராக அவர் விளங்குகிறார்.

- வருவாய் செயலாளராகிய, **அஜய் பூஷன்** – மார்ச் 3 அன்று சுமார் ஒரு வருட காலத்திற்கு புதிய நிதிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தகவல் ஆணையம் **பிமல் ஜல்கா** – முதன்மை தகவல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- நீதியரசர் ரஞ்சன் கோகோய் - சட்டத்திற்கு அவர் ஆற்றிய அளப்பறிய பணி காரணமாக குடியரசுத் தலைவர் அவரை மாநிலங்களவை உறுப்பினராக நியமித்துள்ளார்.
- இவ்வாறாக நீதியரசர் கோகோய் பாராளுமன்ற மேலவைக்கு நியமிக்கப்படும் முதலாவது உச்ச நிதிமன்ற நீதிபதியும், முன்னாள் இந்திய தலைமை நீதிபதியுமாக விளங்குகிறார்.
- அவர், காங்கிரஸ் கட்சியிலிருந்து தேர்வு செய்யப்பட்ட முன்னாள் இந்திய தலைமை நீதிபதி ரங்கநாத்துக்கு மிஷ்ரா மற்றும் பஹருல் இஸ்லாம் ஆகியோருக்கு அடுத்தபடியாக, மாநிலங்களவையில் நுழையும் மூன்றாவது உச்ச நீதிமன்ற நிதிபதியாவார்.
- பாஜக தேசிய துணைத் தலைவர் **ஷிவ்ராஜ் சிங் சௌஹான்** - நான்காவது முறையாக மத்தியப் பிரதேசத்தில் முதலமைச்சராக பதவி ஏற்றுக் கொண்டார்.

- **ஏப்ரல் 20, 2010 அன்று முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியாகிய கபில் தேவ் திரிபாதி – குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்களின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

- **டாக்டர். சுதர்சனம் பாபு, இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னையின் 1988 பட்டதாரி – ஏப்ரல் 20 அன்று ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் 'தேசிய அறிவியல் வாரியத்தில்' (National Science Board') நியமிக்கப்பட்டுள்ளார்.**

- **ஏப்ரல் 25 அன்று, ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரியாகிய சஞ்சய் கோத்தாரி – புதிய முதன்மை விழிப்புப் பணிகள் ஆணையராக பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.**

  - ✓ முதன்மை விழிப்புப் பணிகள் ஆணையர், எதிர்கட்சித்தலைவர் மற்றும் உள்துறை அமைச்சர் ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவின் பரிந்துரையின்பேரில் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகிறார்.

  - ✓ இந்தியாவின் இரும்பு மனிதர் என்று அழைக்கப்படும் சர்தார் வல்லபாய் படேல் அவர்களின் பிறந்த தினத்தை நினைவுகூறும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தின் கடைசி வாரம் இலஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரமாக கொண்டாடப்படுகிறது.

- **டி.எஸ். திருமூர்த்தி, வெளி விவகாரத்துறை அமைச்சகத்தின் செயலாளர் - ஐக்கிய நாடுகளுக்கான நாட்டின் அடுத்த தூதுவராக அறிவிக்கப்பட்டார்.**

APPOLO STUDY CENTRE

# திட்டங்கள்

- **கர்நாடக அரசு – 'ஜனசேவகாஸ்கீம்' (Janasevakascheme) என்ற ஒரு வீட்டு வாசலில் விநியோகம் செய்யும் திட்டம் தொடங்கி வைக்கப்படுவதை அறிவித்தது.**

- **வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் - எண்ணெய் வித்துகள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக – மத்திய அரசு தில்ஹான் இயக்கத்தைத் (TILHAN MISSION) தொடங்கி வைக்க உள்ளது என்று அறிவித்தார்.**

# குழுக்கள்

- **ஒரு உயர்நிலை குழு – அஸ்ஸாம் ஒப்பந்தத்தின் ஷரத்து 6 செயலாக்கம் தொடர்பான தனது அறிக்கையை பிப்ரவரி 25 அன்று அஸ்ஸாம் முதலமைச்சர் சர்பாணந்த சொனோவாலிடம் சமர்ப்பித்தது.**

- **அமிதவ் ராய் குழு – சிறைச்சாலை சீர்திருத்தம்**

  - **மத்திய அரசு – நாட்டில் கொரோனா வைரஸ் ஏற்புத் தன்மையை ஆய்வு செய்வதற்காக ஒரு 'அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அதிகாரக் குழு' வை அமைத்துள்ளது.**

    - ✓ இந்தக் குழுவிற்கு பேராசிரியர் **வினோத் பால்,** உறுப்பினர் நிதி ஆயோக் மற்றும் பேராசிரியர் கே. விஜய் ராகவன், அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் ஆகியோர் தலைவராக இருப்பர்.

# பிரபலங்கள்

- **ஐஐடி கான்பூர் முன்னாள் மாணவராகிய அரவிந்த் கிருஷ்ணா – 108 ஆண்டுகள் பழமை வாய்ந்த அமெரிக்க நிறுவனமாகிய ஐபிஎம் (International Business Machines)இன் புதிய தலைமைச் செயல் அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

- **இந்தியாவின் கீதா சபர்வால் - ஐக்கிய நாடுகள் அமைப்பால், அதனுடைய தாய்லாந்து ஒருங்கிணைப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.**

- **எஸ்எஸ் வாசன், இந்தியாவில் பிறந்த ஒரு மருத்துவர் - கொரோனாவைரசுக்கு எதிராக போரிடக்கூடிய ஒரு தடுப்பூசியைத் தயாரிக்கும் ஆராய்ச்சியாளர் குழுவின் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

- **மும்பையைச் சேர்ந்த காம்யா கார்த்திகேயன் (12 வயது) – தென் அமெரிக்காவின் மிக உயர்ந்த சிகரமாகிய மௌண்ட் அகான்காகுவா (Mount Aconcagua)வில் ஏறிய மிகவும் இளம் வயது பெண் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.**

- **ஒரு ஜப்பானிய நபர் - கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தின்படி, 112 ஆண்டுகள், 344 நாட்கள் வாழ்ந்து உலகின் மிகவும் வயதான நபர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.**

- **இன்போசிஸ் நிறுவனர் என்.ஆர். நாராயணமூர்த்தியின் மருமகனாகிய ரிஷி சுணாக் - இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சனால், பிரெக்சிட்டுக்குப் பிந்தைய அமைச்சரவை மாற்றத்தின்போது – நிதி அமைச்சராக பதவி உயர்வு வழங்கப்பட்டார்.**

    - இந்தியராகிய, பிரித்தி பட்டேல் இங்கிலாந்தின் ஏற்கனவே, உள்துறைச் செயலாளர் என்ற பதவியை வகித்து வருகிறார்.

- **93 வயதான சி.ஐ சிவசுப்பிரமணியன் - இந்திரா காந்தி தேசிய திறந்த நிலைப் பல்கலைக் கழகத்தில் முதுநிலைப் பட்டம் பெற்ற மிகவும் வயதான மாணவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.**

- **வல்லபாய் வஸ்ரம்பாய் மர்வானியா – 'மதுபங்கஜார்' என்ற ஒரு உயிர்ப் பொருட்கள் செறிவூட்டப்பட்ட கேரட் வகையை உருவாக்கினார். இதில் அதிக அளவிலான பீட்டா கரோட்டின் மற்றும் இரும்புச் சத்து உள்ளது.**

    - ✓ மர்வானியா என்பவர், குஜராத்தின் ஜுனாகர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு விவசாய விஞ்ஞானி ஆவார்.
    - ✓ 2017ஆம் ஆண்டில், மர்வானியாவுக்கு இந்திய குடியரசுத் தலைவர், குடியரசுத் தலைவர் மாளிகையில், ஒரு தேசிய விருதை வழங்கி கௌரவித்தார்.
    - ✓ வேளாண்மைக்காக, குறிப்பாக கேரட்டுகளுக்காக அவர் ஆற்றிய அசாதாரணமான பங்களிப்புக்காக அவர் 2019ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச் சூழல்

- **இஸ்ரோ (இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்) – புவன் பஞ்சாயத்து பதிப்பு 3.0 ஐ தொடங்கி வைத்துள்ளது.**

    - இந்தத் திட்டத்தின்கீழ், கிராம ஊராட்சி உறுப்பினர்களின் தரவு தேவைகளைத் தெரிந்து கொள்வதற்காக இஸ்ரோ அவர்களுடன் இணைந்து செயல்படும்.

- **கிறிஸ்டினா கோச், பிப்ரவரி 6 அன்று பூமிக்குத் திரும்பியுள்ளார் - ஒரு பெண் விண்வெளி வீரர் 328 நாட்கள் என்ற மிக அதிக நாட்கள் விண்வெளியில் தங்கியிருந்து சாதனையை நிகழ்த்தியுள்ளார்.**

- **தக்ஷஷிலா நிறுவனம், ஒரு திங்க் தாங்க் பொதுக் கொள்கை பள்ளி – அரசுக்காக ஒரு புதிய விண்வெளி கொள்கை 2020ஐ தயாரித்துள்ளது.**

- **பங்கோலின், ஆசியாவின் மிகவும் அதிகமாக கடத்தப்படும் பாலூட்டி – சீன ஆராய்ச்சியாளர்களால் கொரோனா வைரஸ் பரப்புவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.**

- **புதிய கொரோனா வைரஸ் - கோவிட் 19 என்று உலக சுகாதார அமைப்பினால் பெயரிடப்பட்டது.**

- **விஞ்ஞானிகள் - ஒரு புதிய வகை நத்தையை சமீபத்தில் கண்டுபிடித்துள்ளனர். அதற்கு சுற்றுச்சூழல் ஆர்வலரான கிரேட்டா தன்பெர்க் பெயரை 'Craspedotropisgretathunbergae' என்று வைத்துள்ளனர்.**

- **ஃபோபோஸ் என்ற செவ்வாய் நிலவுக்கு உலகின் முதலாவது பயணம் - ஜப்பானால் 2024ல் தொடங்கி வைக்கப்படும்.**

    - இந்த பயணத்திட்டம், சிவப்பு கிரகமாகிய செவ்வாய்க்கு மனிதர்கள் சென்று வசிப்பதற்கான ஒரு முதல் படியாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

- **தேசிய விமானவியல் மற்றும் விண்வெளி நிர்வாகம் (நாசா) - சூரியன் மாபெரும் சூரிய துகள் புயல்களை உருவாக்கி வெளியிடுவதை ஆய்வு செய்வதற்காக 'சன்ரைஸ்' என்ற ஒரு புதிய பயண திட்டத்தை மார்ச் 30, 2020 அன்று மேற்கொள்ள உள்ளதாக அறிவித்துள்ளது.**

    - ✓ சூரிய வானொலி இன்டர்ஃபெரோமீட்டர் விண்வெளி சோதனை (**The Sun Radio Interferometer Space Experiment - SunRISE)** இயக்கம், சூரிய குடும்பம் எவ்வாறு வேலை செய்கிறது என்பதை புரிந்து கொள்வதற்கு விஞ்ஞானிகளுக்கு பெரிதும் உதவும் என்ற நோக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
    - ✓ இந்தத் திட்டம் ஜுலை 1, 2023 அன்று தொடங்கி வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- ✓ **<u>சன்ரைசின் நோக்கம்:</u>** சந்திரன் மற்றும் செவ்வாய் கிரகங்களுக்குச் செல்லும் விண்வெளி வீரர்களை எதிர்காலத்தில் சூரிய புயல்களிலிருந்து பாதுகாக்கும் நோக்கத்திலேயே இந்தத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

- **விஞ்ஞானிகள் - 2019-20 கோடைக்காலத்தில் அண்டார்டிகாவில் முதலாவது வெப்ப அலை நிகழ்வை பதிவு செய்துள்ளனர்.**

- **இந்திய அறிவியல் நிறுவனம் (IISc) பெங்களூரைச் சேர்ந்த மாணவர்களும் விஞ்ஞானிகளும், 'புராஜெக்ட் ப்ராணா' என்ற திட்டத்தின்கீழ் உள்நாட்டு தயாரிப்பு வென்டிலேட்டர்களை உருவாக்கியுள்ளனர்.**

- **இரயில் பெட்டி தொழிற்சாலை, கபூர்தலா – 'ஜீவன்' (JEEVAN) என்ற பெயரில் குறைந்த விலை அதிக ஆற்றல் கொண்ட வென்டிலேட்டரின் ஒரு முன்மாதிரியை உருவாக்கியுள்ளது.**

- **இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (The Indian Council of Medical Research) – 'பயோன்' (Bione) என்ற ஒரு தொடக்க நிலை நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ஒரு புதிய கோவிட்-19 வீட்டு சோதனை கருவியை (home testing kit) சமீபத்தில் அங்கீகரித்துள்ளது.**

- **தேசிய விமானவியல் மற்றும் விண்வெளி நிறுவனம் (நாசா) – 2024 வாக்கில் மனிதர்களை சந்திரனுக்கு அனுப்பும் நோக்கத்தைக் கொண்ட 'ஆர்டெமிஸ் ப்ரொக்ராம்' (Artemis Program)க்கான திட்டங்களை அறிவித்துள்ளது.**

  - ✓ இது நான்கு விண்வெளி வீரர்களை சந்திரனின் தென் துருவத்திற்கு பயணமாக அனுப்பும்.

- **ஒரு சூப்பர் இளஞ்சிவப்பு நிலவு – 2020ஆம் ஆண்டின் மிகப்பெரிய சூப்பர் நிலவு – ஏப்ரல் 7, 2020 அன்று வானத்தில் தெரிந்தது.**

- **ஏப்ரல் 7, 2020 அன்று மனித வள மேம்பாட்டு அமைச்சகம், நாட்டில் கோவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு சவாலாக, 'சமாதான்' என்ற ஒரு புதிய முயற்சியை தொடங்கி வைத்தது.**

- **கோவிட் 19 பெருந்தொற்று – இது ககன்யான் திட்டத்திற்காக நான்கு இந்திய விமானப் படை அதிகாரிகளுக்கு ரஷ்யாவில் அளிக்கப்படவிருந்த 15 மாத மேம்பட்ட பயிற்சியை தடைசெய்துள்ளது.**

  - ✓ இந்தத் திட்டம் 2022ல் தொடங்கப்படுவதாக இருந்தது.

- **இந்திய விஞ்ஞானிகள் - நாட்டில் நான்கு மாநிலங்களில் காணப்படும் - இரண்டு வவ்வால் சிற்றினங்கள் - டீரோபஸ் (இந்திய பறக்கும் நரி) மற்றும் ரொசெட்டஸ் (பழைய உலக பழங்கள் வவ்வால்), கொரோனா வைரசைப் பரப்புவதாகக் கண்டுபிடித்துள்ளனர்.**

  - ✓ வவ்வால்களில் கொரோனா வைரஸ் பற்றிய இந்தியாவின் முதலாவது ஆய்வு இதுவே ஆகும்.

- ✓ இதில் ஒரு சிற்றினமாகிய டீரோபஸ், முன்னதாக இந்தியாவில் பரவிய நிபா வைரசுடன் தொடர்புடையது.
- ✓ கொரோனா வைரஸ் நேர்மறையைக் கொண்ட மாதிரிகள் கேரளா, இமாசலப் பிரதேசம், புதுச்சேரி மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் கண்டறியப்பட்டன.

**ஏப்ரல் 18, 2020, நாசா – 'டெமோ-2' என்று பெயரிடப்பட்டுள்ள ஒரு புதிய திட்டத்தில் மே 27, 2020 அன்று விஞ்ஞானிகள் பயணத்தைத் தொடங்கி வைக்கப் போவதாக அறிவித்துள்ளது.**

- ✓ இந்த திட்டத்தின் பாப் பென்கென் (**Bob Behnken**) மற்றும் டௌக் ஹர்லி (**Doug Hurley**) ஆகிய விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப்பட உள்ளனர்.
- ✓ இந்தத் திட்டம் ஃபால்கன்-9 ராக்கெட்டைப் பயன்படுத்தி ஸ்பேஸ் எக்ஸ் ஆல் செலுத்தப்படும்.
- ✓ இது எலோன் மஸ்க் விண்வெளி குழுமத்தின் முதலாவது குழு பயணமாகும்.

**எஸ்டி பயோசென்சார் என்ற ஒரு தென் கொரிய நிறுவனம் - ஒரு இந்திய துணை நிறுவனத்தை அமைத்துள்ளது. இதன் வாயிலாக இந்தியாவில் விரைவு ஆன்டிபாடி சோதனைக் கருவிகளை உற்பத்தி செய்யும் முதலாவது அந்நிய நாட்டு நிறுவனம் என்ற பெயரைப் பெற்றுள்ளது.**

- ✓ இந்தத் துணை நிறுவனமானது விரைவு சோதனைக் கருவிகளை ஹரியானாவில் உள்ள தன்னுடைய ஆலையில் இருந்து உற்பத்தி செய்யும்.
- ✓ இந்தத் தொடக்கமானது இந்தியாவின் 'உலகத்திற்காக இந்தியாவில் உற்பத்தி செய்வோம்' என்ற முயற்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாகக் கருதப்படுகிறது. ஏனெனில், இந்த நிறுவனம் இந்தியாவிலும் உலகின் பிற பகுதிகளிலும் அதிகரித்து வரும் தேவையை நிறைவு செய்வதற்காக உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது.

# மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள்

- **வெளிவிகார அமைச்சகம் - தன்னுடைய இந்தோ பசிபிக் கொள்கையின் ஒரு பகுதியாக சென்னையில் கடல்சார் பாதுகாப்பு கூட்டுறவு பற்றி விவாதிப்பதற்காக கிழக்காசிய உச்சி மாநாட்டை ஏற்பாடு செய்ய உள்ளது.**

  - இந்தியாவின் இந்தோ-பசிபிக் கொள்கையில் 7 தூண்கள் அடங்கியுள்ளன.
  - கடல்சார் டொமைன் விழிப்புணர்வு
  - கடல்சார் சுற்றுச்சூழல்
  - மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் உதவி.
  - கடல்சார் வளங்களை நீண்ட காலத்திற்கு பயன்படுத்துதல்
  - அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
  - திறன் வளர்ப்பு
  - கடல்சார் போக்குவரத்து மற்றும்
  - வாணிகம்
  - இந்த மாநாடு இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளால் கூட்டாக ஏற்பாடு செய்யப்படுகிறது.
  - இது ஐந்தாவது கடல்சார் பாதுகாப்பு மாநாடு ஆகும்.

- **DefExpo (பாதுகாப்பு கண்காட்சி)யின் 11வது பதிப்பு – பிரதமர் நரேந்திர மோடியால் உத்தரப்பிரதேசத்தின் லக்னோவில் தொடங்கி வைக்கப்பட்டது.**
- **இந்தியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகள் - பிப்ரவரி 6, 2020 அன்று நடைபெற்ற முதலாவது இந்தியா – ஆப்பிரிக்க பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டுக் கூட்டத்தின்போது 'லக்னோ உறுதிமொழியை' ஏற்றுக்கொண்டன.**

  - இந்த கூட்டுக் கூட்டம், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் டெப்எக்ஸ்போ இந்தியா 2020ன் 11வது பதிப்பின் போதே நடத்தப்பட்டது.
  - இரண்டு தரப்புக்கும் இடையிலான முதலாவது களப் பயிற்சி 'AFINDEX' முன்னதாக மார்ச் 2019ல் நடைபெற்றது.

- **ஆப்பிரிக்க யூனியன் உச்சி மாநாடு 2020 – எத்தியோப்பியாவின் தலைநகரம் அடிஸ் அபாபாவில் நடைபெற்றது.**

  - ஆப்பிரிக்க யூனியன் உச்சி மாநாட்டின் மையக் கருத்து – துப்பாக்கிகளை அமைதிப்படுத்துதல் (**Silencing the Guns**).

- **மின்-ஆளுகை பற்றிய 23வது தேசிய மாநாடு – ஆளுகை நடவடிக்கைகளை டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக, சமீபத்தில் மும்பையில் நடைபெற்றது.**

  - யூனியன் பிரதேசங்களில் டெல்லி, சண்டிகர், டாமன் மற்றும் டையு அகியவையே மின் ஆளுகையில் முதல் 3 இடங்களைப் பிடித்த இடங்கள் ஆகும்.
  - மாநிலங்களில் ஹரியானா மற்றும் ராஜஸ்தான் முன்னிலை வகிக்கின்றன.

- அரசு நடைமுறைகளை டிஜிட்டலுக்கு மாற்றுவதற்காக மறுகட்டுமானம் செய்யும் பிரிவில், தேசிய சுகாதார அதிகார அமைப்பு மற்றும் ஆயுஷ்மான் பாரத் ஆகியவை தங்க விருதுகளைப் பெற்றன.

❖ **முதலாவது 'ஜெருசலேம் - மும்பை திருவிழா' மும்பையில் நடைபெற்றது.**

❖ **13வது ஐக்கிய நாடுகள் இடம்பெயரும் பறவை சிற்றினங்கள் பாதுகாப்பு மாநாடு - இந்தியாவில் தொடங்கியது.**

❖ **சர்வதேச நீதித்துறை மாநாடு – பிப்ரவரி 21 முதல் 23 வரை டில்லியில் நடைபெற்றது.**

- இந்த மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்.
- மையக் கருத்து – பாலினம் வெறும் வார்த்தை.

❖ **பீட்டர்ஸ்பெர்க் காலநிலை பேச்சுவார்த்தையின் 11வது அமர்வு – ஏப்ரல் 28, 2020 அன்று காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது.**

✓ இந்த பேச்சு வார்த்தையில் இந்தியா உள்ளிட்ட 30 நாடுகள் கலந்து கொண்டன.

# பாதுகாப்பு

- ‘சம்பிரித்தி’ (SAMPRITI) என்ற, இந்தியா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளுக்கு இடையேயான ஒரு கூட்டு இராணுவ பயிற்சி – மேகாலயாவில் உள்ள உம்ராய்-யில் 3 பிப்ரவரி 2020 முதல் 16 பிப்ரவரி 2020 வரை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

- இந்திய கடலோர காவல் படை – கர்நாடகாவில் மங்களுருவில் ‘சி-448’ என்ற ஒரு அதிவேக படகை தொடங்கி வைத்தது.

- மூன்றாவது ஸ்கார்ப்பீன் நீர்மூழ்கிக் கப்பல் கரஞ் - டிசம்பர் 20ல் இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கப்படும்.

    - முதலாவது ஸ்கார்ப்பீன். குல்வரி, 2018ல் இயக்கி வைக்கப்பட்டது.
    - இரண்டாவது ஸ்கார்ப்பீன், கந்தேரி செப்டம்பர் 2019ல் சேர்க்கப்பட்டது.

- மத்திய அரசின் தேசிய பேரிடர் மீட்புப் படை - இரண்டாவது பிம்ஸ்டெக் பேரிடர் மேலாண்மைப் பயிற்சி 2020ஐ (BIMSTEC DMEx-2020) ஒடிசாவின் புவனேஷ்வரில் நடத்த திட்டமிட்டு உள்ளது.

- பாதுகாப்பு பொதுத் துறை நிறுவனமாகிய, இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிட் - உள்நாட்டு இராணுவ விமானத் துறையில் மிகப்பெரிய ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, இந்திய விமானப் படைக்கு 83 தெஜாஸ் வகை ஜெட் விமானங்களை வழங்க உள்ளது.

- இந்திய மற்றும் ரஷ்ய நிறுவனங்கள் - நவீன டி-90 பீரங்கிகள் முதல் லீகசி பெச்சோரா வான் பாதுகாப்பு அமைப்புகள் வரையிலான பல்வேறு வகை சாதனங்களை உள்ளடக்கிய பல்வேறு கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதற்காக 14 புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளன.

- குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்த் - மகாராஷ்டிராவின் லோனாவாலாவில், இந்திய கடற்படையின் ஐஎன்எஸ் சிவாஜிக்கு குடியரசுத் தலைவரின் வண்ணத்தை வழங்கினார்.

- புதிய இராணுவ தலைமையகமான தல்சேனா பவனுக்கான அடிக்கல், பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களால் டெல்லி கன்டோன்ட்மென்ட்டில் நாட்டப்பட்டது.

- இந்திய விமானப்படை – முப்படைகளிலேயே மிகச் சிறந்த அணிவகுப்பாக தேர்வு செய்யப்பட்டது.
    - இந்த ஆண்டு குடியரசு தின விழா அணி வகுப்பின்போது, மத்திய ஆயுத காவல் படை மற்றும் இதர துணை படைகளில் மத்திய தொழில் பாதுகாப்புப் படையே சிறந்ததாகத் தேர்வு செய்யப்பட்டது.

- இந்தியா மற்றும் இங்கிலாந்து ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு இராணுவ பயிற்சி, அஜெய் வாரியர் 2020 – பிப்ரவரி 25, 2020 அன்று வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது.

- இந்தியா மற்றும் இங்கிலாந்து இராணுவப் படைகளுக்கு இடையே பாதுகாப்பு கூட்டுறவை மேம்படுத்துவதற்காக நடத்தப்பட்ட பயிற்சியின் 5வது பதிப்பு இதுவாகும்.

**இந்திரா தனுஷ் என்ற பயிற்சியின் 5வது பதிப்பு – 24 பிப்ரவரி 2020 அன்று இந்தியாவின் ஹின்டானில் உள்ள இந்திய விமானப் படைத் தளத்தில் தொடங்கியது.**

- இது இந்திய விமானப் படை மற்றும் இங்கிலாந்தின் விமானப்படை ஆகிய இரண்டுக்கும் இடையேயான கூட்டு விமானப் படை பயிற்சி ஆகும்.
- இந்தப் பயிற்சி பின்வரும் மையக் கருத்தை நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்டது – அடிப்படைப் பாதுகாப்பு மற்றும் படைப் பாதுகாப்பு.

**கடல் தகவல் சேவைகளுக்கான இந்திய தேசிய மையம் (The Indian National Centre for Ocean Information Services) – கடலை அடிப்படையாகக் கொண்ட 3 மேம்பட்ட எச்சரிக்கை அமைப்புகளை தொடங்கி வைத்துள்ளது.**

- பொங்கும் அலையெழுச்சி முன்னறிவிப்பு அமைப்பு (**Swell Surge Forecast System)**
- பாசி பூக்கும் தகவல் அமைப்பு மற்றும் (**Algal Bloom Information Service)** மற்றும் சிறு கலன் ஆலோசனை மற்றும் முன்னறிவிப்பு சேவைகள் அமைப்பு (**Small Vessel Advisory and Forecast Services System).**

**ஆறாவது கடலோர காவல் படை ரோந்து கப்பல், வஜ்ரா – சென்னையில் காட்டுப்புலி என்ற இடத்தில் பிப்ரவரி 27, 2020 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.**

**மத்திய கப்பல் போக்குவரத்து அமைச்சர் (தனிப் பொறுப்பு) மன்சுக் எல். மண்டவியா – ஒரு புதிய கடல் ரோந்துக் கப்பலாகிய 'ஐசிஜிஎஸ் வரத்' (ICGS Varad) ஐ இந்திய கடலோர காவல் படைக்காக சென்னையில் பிப்ரவரி 28 அன்று தொடங்கி வைத்தார்.**

- ஐசிஜிஎஸ் வரத், லார்சன் மற்றும் டுப்ரோ நிறுவனத்தால் சென்னைக்கு அருகில் காட்டுப்பள்ளி என்ற இடத்தில் கட்டப்பட்டது.
- ஐசிஜிஎஸ் வரத், ஒடிசாவில் பாரதீப் என்ற இடத்தில், வடகிழக்கு மண்டல கடலோர காவல் படையின் செயல்பாட்டுக் கட்டுப்பாட்டில், பயன்படுத்தப்படும்.

இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் - பெங்களூருவில் உள்ள எச்ஏஎல் (**HAL**) வளாகத்தில் குறைந்த எடை போர் ஹெலிகாப்டர் (**Light Combat Helicopter**) உற்பத்தி வசதியைத் தொடங்கி வைத்தார்.

இந்தியா 40 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஆயுதங்களைக் கண்டறியும் நான்கு 'ஸ்வாதி' ராடார்களை அர்மீனியாவுக்கு விநியோகம் செய்யும் ஆணையைப் பெற்றுள்ளது.

- இந்தியா – சவுதி அரேபியாவுக்கு அடுத்ததாக உலக அளவில் அதிக ஆயுதங்களை இறக்குமதி செய்யும் இரண்டாவது நாடாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
  - ஆயுதங்கள் ஏற்றுமதியில் முன்னனியில் உள்ள 25 நாடுகளின் பட்டியலில் நமது நாடு 23வது இடத்தில் உள்ளது. மியன்மார், இலங்கை மற்றும் மொரிஷியஸ் ஆகியவை இதன் மிகப்பெரிய வாடிக்கையாளர் நாடுகள் ஆகும்.

- தெஜாஸ், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட குறைந்த எடை போர் விமானம் - இறுதி செயல்பாட்டு அனுமதிக்குப் பிறகு, தன்னுடைய மதலாவது சோதனை பயணத்தை மார்ச் 17, 2020 அன்று நிறைவு செய்தது.
  - இந்த குறைந்த எடை போர் விமானம் தெஜாவின் முதலாவது பயணம் பெங்களூரில் நடைபெற்றது.

- ஆபரேஷன் நமஸ்தே (**Operation Namaste):**
  - இந்திய இராணுவம் கோவிட்-19 பெருந்தொற்றுக்கு எதிராக போராடும் அரசுக்கு உதவுவதற்காக, 'ஆபரேஷன் நமஸ்தே' என்று பெயரிடப்பட்டுள்ள கோவிட்-19 எதிர்ப்பு பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்துள்ளது.

- **அமெரிக்கா – 155 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான அடுத்த தொகுப்பு ஹார்ப்பூன் பிளாக்-2 ஏவுகணைகள் மற்றும் எம்கே-54 குறைந்த எடை வெடிக்கப்பல்களை இந்தியாவிற்கு விற்பனை செய்வதற்கு ஒத்துக்கொண்டுள்ளது.**
  - ✓ இந்த ஆயுதங்கள், இந்தியாவால் வாங்கப்பட்டுள்ள சுமார் ஒரு டஜன் பொசீடன்-81 (**Poseidon-8I**) நீண்ட தூரம் சென்று தாக்கும் கடல்சார் ரோந்து விமானங்களில் பொருத்தப்படும்.




  - ✓ ஹார்ப்பூன் என்பத எதிரியின் படகு அல்லது கப்பலைத் தாக்குவதறகு பயன்படுத்தப்படும் கப்பல் எதிர்ப்பு ஏவுகணை ஆகும்.
  - ✓ டோர்பெடோக்கள் (வெடிக்கப்பல்கள்) தண்ணீருக்குள் அல்லது தண்ணீருக்கு வெளியே இருந்து செலுத்தப்படும் நீர்மூழ்கி ஏவுகணை ஆகும்.

- **ஆஸ்திரேலியா – பிட்ச் பிளாக் 2020 என்று அழைக்கப்படும் தன்னுடைய முன்னணி பலதரப்பு விமான போர்ப் படைப் பயிற்சி, கோவிட் 19 சூழ்நிலை காரணமாக ரத்துசெய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.**

# பொருளாதாரம்

**2019-20க்கான பொருளாதார ஆய்வறிக்கை – முதன்மைப் பொருளாதார ஆலோசகர் கிருஷ்ணமூர்த்தி வி. சுப்பிரமணியன் அவர்களால் நாடாளுமன்றத்தில் ஜனவரி 31 அன்று தாக்கல் செய்யப்பட்டது.**

- மரபுரீதியாக அதற்கு அடுத்த நாள். பிப்ரவரி 1, 2020 அன்று நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பட்ஜெட் 2020ஐ தாக்கல் செய்வார்.
- கடந்த நிதி ஆண்டில் ஒட்டு மொத்தமாக எய்தப்பட்ட பொருளாதார முன்னேற்றத்தைப் பற்றியும், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி (**GDP**) வளர்ச்சியை அடைவதற்கு எதிர்நோக்கப்படும் சவால்கள் பற்றியும் பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப்பிடப்படும்.
- நாடு இதுவரை பெற்ற அனுபவத்தின் அடிப்படையில், 28 ஆண்டு கால பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக அதிக சந்தை சார்பு சீர்திருத்தங்களை இது முன்வைக்கிறது.
- பொருளாதார ஆய்வறிக்கை 2020ன் மையக் கருத்து – செல்வத்தை உருவாக்குதல், வணிக சார்பு கொள்கைகளை மேம்படுத்துதல், பொருளாதாரத்தில் நம்பிக்கையை வலுப்படுத்துதல்.

<u>பொருளாதார ஆய்வறிக்கை 2019-20ன் முக்கிய அம்சங்கள்</u>

- நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி மதிப்பீடு 6 விழுக்காட்டிலிருந்து 6.5 விழுக்காடாக அதிகரிக்கும் என்ற நிலையில் இந்த பொருளாதார ஆய்வறிக்கை 2019-20, 2020-21ல் மேம்பட்ட வளர்ச்சியை எட்ட முடியும் என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளது.
- தற்போதைய நிதி வளர்ச்சி 5 விழுக்காடு ஆகும்.
- 2020 நிதி ஆண்டிற்கான (2019-20) தொழில் துறை வளர்ச்சி 2.5 விழுக்காடாக உள்ளது.
- 2019 நிதியாண்டின் (2018-19) அந்நிய செலாவணி கையிருப்பு 461.2 பில்லியன் அமெரிக்க டாலர்கள்.
- 2020 நிதியாண்டின் ஜிஎஸ்டி வசூல் 4.1 விழுக்காடு அதிகரித்துள்ளது.
- ஏப்ரல் 2019ல் 3.2 விழுக்காடாக இருந்த பணவீக்க விகிதம், டிசம்பர் 2019ல் 2.6 விழுக்காடாக குறைந்துள்ளது.
- சமீபத்திய கணக்கெடுப்பின்படி, கிராமப்புற விவசாய குடும்பங்களின் வருவாய் ஈட்டும் ஆதாரங்களில் கால்நடைகள் வளர்ப்பு இரண்டாம் இடத்தை அடைந்துள்ளது. அது கடந்த 5 ஆண்டுகளில் 7.9 விழுக்காடு அதிகரித்துள்ளது.
- 2018ல் இஸ்ரோ 7 செயற்கைக் கோள்களை ஏவியது. அதே சமயம் ரஷ்யா, அமெரிக்கா மற்றும் சீன நாடுகள் முறையே 20, 31, மற்றும் 39 செயற்கைக் கோள்களைச் செலுத்தி இத்துறையில் முன்னிலையில் விளங்குகின்றன.
- பொருளாதார ஆய்வறிக்கை 2019-20ன்படி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதல் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று ஆகும்.

- 2018ஆம் ஆண்டு புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்ட இந்த சர்வே, முன்னணியில் உள்ள இரண்டு மாநிலங்கள் உத்தரப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா என்று குறிப்பிடுகிறது.
- செப்டம்பர் 2014ல், 46 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளுக்கு இ-சுற்றுலா விசாவை இந்தியா அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த வசதி இதற்கு முன்பாக 12 நாடுகளுக்கு மட்டுமே கிடைத்தது.
- இந்தத் திட்டம் தற்போது 169 நாடுகளுக்குக் கிடைக்கிறது. அதன்படி, நிர்ணயிக்கப்பட்ட 28 விமான நிலையங்கள் மற்றும் 5 துறைமுகங்கள் வழியாக அவர்கள் இந்தியாவிற்குள் வருகை தரலாம்.

**மத்திய அரசு – 2018-19 மற்றும் 2017-18க்கான ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பை, தேசிய புள்ளியியல் அலுவலகத்தின் திருத்தக் கொள்கைக்கு இணங்க, மாற்றியமைத்துள்ளது.**

- திருத்திய மதிப்பீடுகளின்படி, 2018-19ஆம் ஆண்டுக்கான ஜிடிபி மதிப்பு 6.8 விழுக்காட்டிலிருந்து 6.1 விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது. அதே போல 2017-18ஆம் ஆண்டிற்கான ஜிடிபி மதிப்பு 7.2 விழுக்காட்டிலிருந்து 7 விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது.

**2020-21ஆம் ஆண்டுக்கான 15வது நிதி ஆணையத்தின் இடைக்கால அறிக்கை – பிப்ரவரி 1 அன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.**

- அந்த அறிக்கை மத்திய வரிகளில், அடுத்த ஆண்டுக்கு மாநிலங்களுக்கான பங்கை கிட்டத்தட்ட மாற்றாமலே வைத்துள்ளது. ஆனால், மாநிலங்களுக்கு இடையே அந்தத் தொகை எவ்வாறு பகிரப்படுகிறது என்ற வழிமுறைகளை மாற்றியமைத்துள்ளது.
- புதிய வழிமுறைகளின்படி, மகாராஷ்டிரா, ராஜஸ்தான், அருணாசலப் பிரதேசம் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களே அதிக பலன் அடைபவையாக உள்ளன.
- கர்நாடகா, கேரளா, தெலுங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியவை மிக அதிக இழப்பீட்டை எதிர்கொண்டுள்ளன.
- 15வது நிதி ஆணையத்தின்படி, மத்திய அரசின் அடுத்த நிதி ஆண்டுக்கான மொத்த வரி வரவுகளில் 41 விழுக்காடு மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும். இது 2015-16 முதல் 2019-20 வரையிலான காலத்தில் 42 விழுக்காடாக இருந்தது.
- இந்த ஒரு விழுக்காட்டுப் புள்ளி மாற்றமானது, ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகியவை யூனியன் பிரதேசங்களாக மாற்றியமைக்கப்பட்டதால் ஏற்பட்டதாகும்.
- 14வது நிதி ஆணையம் மாநிலங்களின் பங்கை 32 விழுக்காட்டிலிருந்து 42 விழுக்காடாக அதிகரித்துள்ளது.

**நேரடி வரிகள் விவாத் சே விஸ்வாஸ் மசோதா, 2020 – மக்களவையில் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது.**

- தங்களது நிலுவை வட்டிகளை மார்ச் 31, 2020க்குள் செலுத்தும் வரி செலுத்துநர்களுக்கு, இந்தத் திட்டம் வட்டி மற்றும் அபராத வட்டியை முழுவதுமாக தள்ளுபடி செய்கிறது.
- இந்தத் திட்டமானது, நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்களால் ஜுலை 2019ல் அவருடைய முதல் பட்ஜெட் தாக்கலின்போது அறிமுகப்படுத்தப்பட்ட 'மறைமுக வரிகள். சப்கா விஷ்வாஸ்' திட்டம் போன்றதாகும்.

**இந்திய ரிசர்வ் வங்கி – ஐந்து அலுவலர்களை செயல் இயக்குநர்கள் பதவிக்கு உயர்த்தும் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.**

- பதவி உயர்த்தப்பட்ட அலுவலர்கள் இந்திராணி பானர்ஜி, மண்டல இயக்குநர், நாக்பூர், சௌரவ் சின்ஹா, முதன்மைப் பொது மேலாளர் பொறுப்பு, விவேக் தீப், முதன்மைப் பொது மேலாளர் பொறுப்பு, விவேக் தீப், முதன்மைப் பொது மேலாளர் பொறுப்பு, ஜே.கே. தாஷ், முதன்மைப் பொது மேலாளர் பொறுப்பு மற்றும் பி. விஜயகுமார், மூத்த ஆர்பிஐ குறைதீர் அலுவலர்.
- தற்பொது இந்திய ரிசர்வ் வங்கியில் 12 செயல் இயக்குநர்கள் உள்ளனர். அவர்களில 5 பேர் 2020 ஆண்டில் பணி ஓய்வு பெற உள்ளனர்.

**நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் - மேம்படுத்தப்பட்ட அணுகல் மற்றும் சேவை சிறப்பு (EASE 3.0) ஐ தொடங்கி வைத்தார்.**

- **EASE** என்பது தொழில்நுட்பம் அடிப்படையிலான சில வங்கி சீர்திருத்தங்கள் ஆகும். அவை வங்கித் துறையை தொழில்நுட்பத்துடன் முன்னேற்றும் நோக்கத்தைக் கொண்டுள்ளன.

நாடுகளை அவற்றின் பெயரளவு ஜிடிபி அடிப்படையில் தரவரிசைப்படுத்தும், சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஎம்எப்) அக்டோபார் உலக பொருளாதார அவுட்லுக்கின்படி, இந்தியா – பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்தை பின்னுக்குத் தள்ளி உலகின் ஐந்தாவது மிகப்பெரிய பொருளாதார நாடு ஆக ஆகியுள்ளது.

- அதே சமயம், இந்தியாவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி, கடன் பலவீனம் காரணமாக அடுத்த ஆண்டில் மெதுவான வளர்ச்சியைக் காணும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு – பிப்ரவரி 2020ல் 1.05 இலட்சம் கோடி ரூபாய், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி வருவாயாக வசூல் செய்யப்பட்டதை அறிவித்தது. இது இதே காலகட்டத்தில் கடந்த ஆண்டு இதே மாதத்தில் இருந்ததைவிட 8 விழுக்காடு அதிகம் ஆகும்.

ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் அட்டவணையின்படி, மின் வணிக முன்னணி நிறுவனமாகிய அலிபாபா குழுமத்தின் நிறுவனரும், சீன பில்லியனருமாகிய ஜேக் மா – ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிட் நிறுவனத்தின் தலைவராகிய முகேஷ் அம்பானியை பின்னுக்குத் தள்ளி, ஆசியாவின் மிகப்பெரிய பணக்காரர் என்ற தகுதியைப் பெற்றார்.

- அம்பானியின் நடப்பு நிகர மதிப்பு 41.8 பில்லியன் டாலராக உள்ளது. அதே சமயம் ஜேக் மாவின் நிகர மதிப்பு 44.5 பில்லியன் டாலராக

உள்ளது. உலக அளவில் ஜேக் மாவிற்கு பின்னால், 19வது மிகப்பெரிய பணக்காரராக அம்பானி உள்ளார்.


- ஈரான் சர்வதேச நாணய நிதியத்தின் கடனைக் கோருகிறது
  - நாவல் கொரோனா வைரசை எதிர்கொள்வதறகு உதவும் பொருட்டு, ஈரான் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து நிதி உதவியைக் கோரியுள்ளது. 1962ஆம் ஆண்டிற்குப் பிறகு அந்த நாடு சர்வதேச நாணயத்திடம் நிதியுதவி கோரியுள்ளத இதுவே முதன் முறை ஆகும்.

- இந்தியாவுக்கு உலக வங்கியின் 1 பில்லியன் டாலர் அவசர நிதி
  - கோவிட் 19 அவசர நடவடிக்கை மற்றும் சுகாதார அமைப்புகளுக்காக உலக வங்கி 1 பில்லியன் டாலர் நிதியை வழங்கியுள்ளது.
  - இந்தியாவில் தயார்நிலை திட்டம்.


- பிரதமரின் ஏழைகள் நலத் திட்டம் (**Pradhan Mantri Garib Kalyan Yojana)**
  - கோவிட்-19 பெருந்தொற்றின் பின்னணியில், பிரதமரின் ஏழைகள் நலத் திட்டத்தின்கீழ், நிதியமைச்சர் அவர்கள் ஏழைகளுக்கு ஒரு நிவாரணத் தொகுப்பை வழங்கியுள்ளார். இதற்காக ரூ.17 இலட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- **ஆசிய அபிவிருத்தி வங்கி - இந்தியாவில் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்காக 2.2 பில்லியன் அமெரிக்க டாலர் தொகையை உடனடி உதவியாக வழங்கத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது.**

- **சீன மத்திய வங்கி – நாட்டின் மிகப்பெரிய அடமான நிறுவனமாகிய எச்டிஎப்சி வங்கியின் 1 விழுக்காடு பங்கை வாங்கியது.**
  - ✓ எச்டிஎப்சி வங்கியின் கூற்றுப் படி, சீனாவின் மக்கள் வங்கி (**People's Bank of China )** எச்டிஎப்சி யின் பங்குகளில் சுமார் 1.75 கோடி பங்குகளை வாங்கியுள்ளது. அதன் தற்போதைய மதிப்பு சுமார் 3,000 கோடி ஆகும்.




- **உலக வங்கி – கோவிட் 19ன் தாக்கத்தால், 2020-21ல் இந்தியாவின் ஜிடிபி வளர்ச்சி 1.5 விழுக்காடு முதல் 2.8 விழுக்காடு இருக்கும் என மதிப்பிட்டுள்ளது. இந்த விவரம், சமீபத்தில் வெளியிடப்பட்ட 'தெற்காசிய பொருளாதார முனைப்பு' அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**




- இந்திய பொருளாதாரம் - ஏப்ரல் 14 அன்று வெளியிடப்பட்ட, சர்வதேச நாணய நிதியத்தின் '2020 உலக பொருளாதார அவுட்லுக்' அறிக்கையின்படி, 2020-21ல் 1.9 விழுக்காடு வளர்ச்சியடையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

- சமூக ஊடக பெருநிறுவனமாகிய, முகநூல் - ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் மும்பையை அடிப்படையாகக் கொண்ட ஜியோ மேடைகளில், 5.7 பில்லியன் டாலர் அல்லது 43,574 கோடி ரூபாயை முதலீடு செய்வதற்கு ஒத்துக் கொண்டது.

# விளையாட்டுச் செய்திகள்

- **அரியானா அரசு – ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப்ப பதக்கம் வெல்லும் வீரர்களுக்கு ரூ.6 கோடி பரிசுப் பணம் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது.**
    - ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்வோருக்கு ரூ.3 கோடி வழங்கப்படும் என்றும் அது அறிவித்துள்ளது.
    - மேலும், இந்த மாநில அரசு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்வோருக்கு ரூ.1.5 கோடி வழங்கவும் திட்டமிட்டுள்ளது.
    - ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர்கள் அனைவருக்கும் தலா ரூ. 15 இலட்சம் வழங்கவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது.

- **ஐந்து முறை கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் வெற்றி பெற்றவராகிய மரியா ஷரபோவா – 32ஆவது வயதில் தான் ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.**

- **பார்சிலோனா வெற்றியாளர் லயனெல் மெஸ்சி - ஸ்பானிஷ் கால்பந்து போட்டி வரலாற்றில் 500 வெற்றிகளைப் பெற்ற முதலாவது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.**

- **21 வயது சோபியா கெனின் - உலகின் நெ.1 ஆட்டக்காரரான கார்பைன் முகுருசாவை தோற்கடித்து ஆஸ்திரேலிய ஓபன் மகளிர் ஒற்றையர் பட்டத்தை பிப்ரவரி 1 அன்று மெல்போனில் வென்றார்.**

- **செர்பியாவின் நோவக் ஜொகோவிக் - ஆஸ்திரேலிய ஓபன் போட்டிகளில் தன்னுடைய 17வது முக்கிய வெற்றியைப் பதிவு செய்தார்.**

- **ஹர்மீட் தேசாய் - சரூர்நகர் உள் விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற யுடிடி 81வது தேசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டிகளில் தன்னுடைய முதலாவது தேசிய ஆடவர் ஒற்றையர் டேபிள் டென்னிஸ் பட்டத்தைக் கைப்பற்றினார்.**

- **ஜி. சத்தியன் - ஜப்பானின் உயர்நிலை டி-லீக் 2020-21 பருவ போட்டிகளில் கலந்து கொள்வதற்கு கையெழுத்திட்ட முதலாவது இந்திய டேபிள் டென்னிஸ் விளையாட்டு வீரர் ஆவார்.**

- **துரோணாச்சாரியா விருது பெற்ற புல்லேலா கோபிசந்த் - சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் 2019 பயிற்சியாளர்களில், ஆடவர் பிரிவில் வாழ்நாள் சாதனையாளராக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**
    - இந்த கௌரவத்திற்குத் தேர்வு செய்யப்பட்ட முதலாவது இந்திய பயிற்சியாளராக கோபிசந்த் விளங்குகிறார்.

- **ஆஸ்திரேலியா – பிப்ரவரி 8 அன்று ஐசிசி மகளிர் சாம்பியன்ஷிப் கோப்பை வழங்கப்பட்டது.**

- **வங்காளதேச சிறுவர்கள் - ஐசிசி யு-19 உலகக் கோப்பைப் போட்டிகளில் தங்களது நாட்டுக்காக முதலாவது உலகளாவிய கிரிக்கெட் பட்டத்தை வென்று வரலாற்றை ஏற்படுத்தியுள்ளனர்.**

- **பதின்பருவ பாகிஸ்தானிய வேகப்பந்து வீச்சாளராகிய நசீம் ஷா – டெஸ்ட் போட்டிகளில் மூன்றுமுறை தொடர் வெற்றி பெற்ற மிக இளம் வயது விளையாட்டு வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.**

    - பிப்ரவரி 9 அன்று வங்காளதேசத்துக்கு எதிராக ராவல்பிண்டியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் அவர் இந்த சாதனையை எட்டினார்.

- **இந்திய ஆடவர் ஹாக்கி குழுவின் மிட்ஃபீல்டர், விவேக் சாகர் பிரசாத் - சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பினால், 2019ஆம் ஆண்டின் வளர்ந்து வரும் நட்சத்திரம் என்று அறிவிக்கப்பட்டார்.**

- **ஆதித்ய மேத்தா (மும்பை, மகாராஷ்டிரா) – புனேயில் நடைபெற்ற போட்டியில், பன்முறை உலக சாம்பியனான, பங்கஜ் அத்வானியைத் தோற்கடித்து தேசிய ஸ்நூக்கர் சாம்பியன்ஷிப் பட்டம் வென்றார்.**

- **இந்திய முன்னணி வீராங்கனையாகிய லால்ரெம்சியாமி – சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பினால் அறிவிக்கப்பட்டவாறு, 2019ஆம் ஆண்டுக்கான எப்ஐஎச் மகளிர் வளர்ந்து வரும் நட்சத்திரம் என்று தேர்வு செய்யப்பட்டார்.**

- **போட்டியை நடத்தும் நாடுகள், நேபாளம் மற்றும் அமெரிக்கா – பிப்ரவரி 12 அன்று சர்வதேச ஒரு நாள் போட்டிகள் வரலாற்றிலேயே மிக குறுகிய காலத்தில் ஒரு நாள் போட்டிகளை நடத்தி முடித்து வரலாற்று சாதனை படைத்துள்ளது.**

- **நித்தின் மேனன் - ஆஸ்திரேலியாவில் நடைபெற உள்ள மகளிர் டி20 உலகக் கோப்பை போட்டிகளில் ஐசிசி நடுவர்கள் பட்டியலில் உள்ள ஒரே இந்தியர் ஆவார்.**

    - இவரை அன்றி, உலக அளவில் நடைபெறும் சர்வதேச கிரிக்கெட் போட்டியில், இந்தியாவின் ஜி.எஸ். லக்ஷ்மி, முதல் பெண் நடுவராக கலந்து கொள்கிறார்.

- **மன்பிரீத் சிங், இந்தியாவின் ஸ்கிப்பரும், சர்வதேச ஹாக்கி போட்டிகளில் மிகச் சிறந்த மிட்ஃபீல்டர்களில் ஒருவருமாகிய இவர் இந்த ஆண்டிற்கான (2019) எப்ஐஎச் மிகச் சிறந்த வீரராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

- **இந்திய கிராண்ட் மாஸ்டர் டி. குகேஷ் - டென்மார்க்கில் நடந்து முடிந்த ஹில்லெராட் 110வது ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் நிகழ்ச்சியில் தன்னுடைய முதலாவது திறந்தநிலைப் போட்டிகளை வென்றார்.**

- **ஜோஷனா சின்னப்பா – சென்னையில் தேசிய இந்திய ஸ்குவாஷ் அகாடமியில் நடைபெற்ற போட்டியில் தன்னுடைய 18வது தேசிய ஸ்குவாஷ் பட்டத்தை வென்றார்.**

- **இந்திய கிராண்ட் மாஸ்டர் கொனேரு ஹம்பி – பிப்ரவரி 16 அன்று அமெரிக்காவின் செயின்ட் லூயிசில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்று கெயர்ன்ஸ் கோப்பையை கைப்பற்றினார்.**

- **இந்தியா – 2021ஆம் ஆண்டுக்கான ஜூனியர் ஆடவர் ஹாக்கி உலகக் கோப்பை போட்டிகளை நடத்த உள்ளது.**

- **தேசிய ஊக்க மருந்து எதிர்ப்பு முகமை, ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவாக – தேசிய ஈட்டி எறியும் வீரர் அமித் தாஹியாவுக்கு நான்கு ஆண்டு காலம் தடை விதித்தது.**

- **திவ்யா கக்ரன் (68கிகி), சரிதா மோர் (59 கிகி) மற்றும் பிங்கி (55 கிகி) – பிப்ரவரி 20 அன்று புது டெல்லியின் இந்திரா காந்தி உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டிகளில், மகளிர் பிரீ ஸ்டைல் போட்டிகளில் தங்களது முதலாவது தங்கப் பதக்கங்களை தனித்தனியாக வென்றனர்.**

- **பிரதமர் நரேந்திர மோடி – ஒடிசாவின் புவனேஷ்வரில் நடைபெறும் முதலாவது கெலோ இந்தியா பல்கலைக் கழக விளையாட்டுப் போட்டிகளை காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.**

  - இதுவே கெலோ இந்தியா பல்கலைக் கழக விளையாட்டுப் போட்டிகளின் முதலாவது பதிப்பு ஆகும்.
  - கெலோ இந்தியா பள்ளி விளையாட்டுகள் 2018ஆம் ஆண்ட தொடங்கி வைக்கப்பட்டன. அன்று முதல் ஒவ்வொரு அண்டும் ஜனவரி – பிப்ரவரி மாதங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.
  - கெலோ இந்தியா என்பது அடிப்படை நிலையில் விளையாட்டுப் போட்டிகளை வளர்ப்பதற்காக நடத்தப்படும் தேசிய திட்டம் ஆகும்.

- **இந்தியாவின் 13வது கிராண்ட் மாஸ்டர் டி. குகேஷ் - 34வது கேன்ஸ் ஓபன் செஸ் போட்டிகளில் சாம்பியனாக வெற்றி பெற்றார்.**

- சௌராஷ்டிரா – தன்னுடைய முதலாவது ரஞ்சி கோப்பை பட்டத்தை வென்றார்.
- பதின்பருவ இந்திய பேட்டிங் வீரர், ஷ..்பாலி வெர்மா – ஆஸ்திரேலியாவின், சிட்னியில் நடைபெற்ற மகளிர் உலகக் கோப்பைப் போட்டியில் அவர் மேற்கொண்ட மிகச் சிறந்த தாக்குதலைத் தொடர்ந்து, ஐசிசி மகளிர் டி20 தரவரிசைப் பட்டியலில் உலகின் முதலாவது பெண் விளையாட்டு வீராங்கனையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ஆஸ்திரேலியா - இந்தியாவைத் தோற்கடித்து எதிர்பாராத ஐந்தாவது டி20 உலகக் கோப்பையைக் கைப்பற்றியது.
  - இந்தியாவைப் பொறுத்தவரை, இந்தப் போட்டிகள், உச்சிமாநாட்டு மோதலுக்கு முந்தைய ஒரு முதல் நுழைவு விளையாட்டு என்றே கருதப்படுகிறது.
- புகழ்பெற்ற எம்.சி. மேரி கோம் (51 கிகி) மற்றும் உலகின் நெ.1 அமித் பங்கள் (52 கிகி) – ஜோர்டானின் அம்மான் நகரில் நடைபெற்ற ஆசிய ஒலிம்பிக் தகுதிச் சுற்றுப் போட்டிகளில் வெண்கலப் பதக்கங்களை வென்றனர்.

- **கோவிட் 19 பெருந்தொற்று தோன்றிய இடமாகக் கருதப்படும் சீனா – நவம்பர் 2021ல் ஆசிய இளைஞர் விளையாட்டுப் போட்டிகளின் மூன்றாவது பதிப்பை நடத்த உள்ளது.**
  - ✓ மூன்றாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நவம்பர் 20-28, 2021ல், சீனாவின் கிழக்குக் கடற்கரையில் உள்ள நகரமான ஷன்டௌவில் நடைபெற உள்ளது.

- **பென் ஸ்டோக்ஸ் - விஸ்டனின் முன்னணி கிரிக்கெட் வீரர் என்ற விராட் கோலியின் மூன்றாண்டு ஆட்சியை 2019 ஆண்டில் முடித்து வைத்தார்.**

- **ஐந்துமுறை உலக செஸ் சாம்பியன் ஆகிய விஸ்வநாதன் ஆனந்த – உலக அளவிலான நிதி (World Wide Fund)- இந்தியா அமைப்பின் புதிய தூதர் ஆவார்.**

  - ✓ சுற்றுச் சூழல் கல்வி திட்டம், 1976ல் முகமையால் தொடங்கி வைக்கப்பட்டது.

- **இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனையாகிய பி.வி. சிந்து – ஏப்ரல் 22, 2020 அன்று 'நான் பூப்பந்தாட்டம் (I am badminton) என்ற ஒரு விழிப்புணர்வு பிரச்சாரத்தின் தூதுவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**
  - ✓ இந்த பிரச்சாரத்தை பேட்மின்டன் உலக கூட்டமைப்பு (**Badminton World Federation**) ஏற்பாடு செய்தது.

- **முன்னாள் கர்நாடகா கேப்டன் மற்றும் பயிற்சியாளராகிய ஜே. அருண்குமார் - அமெரிக் அடவர் கிரிக்கெட் குழுவின் தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.**

# விருதுகள்

- முதுபெரும் ஆவணப்பட தயாரிப்பாளரான எஸ். கிருஷ்ணசாமி – புனைகதை அல்லாத திரைப்படத் தயாரிப்புக்கு அவர் ஆற்றிய அளப்பரிய சேவைக்காக அவருக்கு சமீபத்தில் டாக்டர். வி. சாந்தாராம் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

- மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் ஸ்மித்தி இராணி – பிரதமரின் மாற்று வந்தனா (Pradhan Mantri MatruVandhana Yojana) விருதுகளை பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு பிப்ரவரி 3 அன்று வழங்கினார்.

◆ **பிரிவு – தொடக்கம் முதல் சிறப்பாக செயலாற்றியமை – (ஒரு கோடிக்கும் மேல் மக்கள் தொகை கொண்ட மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள்)**

- மத்தியப் பிரதேசம்
- ஆந்திரப் பிரதேசம்
- அரியானா

◆ **பிரிவு – தொடக்கம் முதல் சிறப்பாக செயலாற்றியமை – (ஒரு கோடிக்கும் குறைவாக மக்கள் தொகை கொண்ட மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள்)**

- தாத்ரா நகர் ஹவேலி
- இமாசலப் பிரதேசம்
- சண்டிகார்

◆ **ஒரு கோடிக்கும் மேல் மக்கள் தொகை கொண்ட மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள்**

- ஆந்திரப் பிரதேசம்
- மகாராஷ்டிரா
- மத்தியப் பிரதேசம்

◆ **ஒரு கோடிக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள்**

- தாத்ரா நகர் ஹவேலி
- சிக்கிம்
- மணிப்பூர்
- பிரதமரின் தாய் வந்தனா வாரம் என்பது 2017ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்ட ஒரு மகப்பேறு பலன் திட்டம் ஆகும்.
- இத்திட்டத்தின்கீழ், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ரூ.5000 ரொக்கப் பலன் வழங்கப்படுகிறது.

- **தொழுநோய்க்கான சர்வதேச காந்தி விருதுகள்**
  - இந்த விருதுகள் தனிநபர் பிரிவிலும், நிறுவனங்கள் பிரிவிலும் டாக்டர்.என்.எஸ். தர்மஷக்து அவர்களுக்கு வழங்கப்பட்டன.

- **பெர்லினில் நடைபெற்ற வண்ணமயமான விழாவில், ஃபார்முலா ஒன் டிரைவர் லூயிஸ் ஹாமில்டன் மற்றும் கால்பந்து வீரர் லியொனலெ் மெச்சி ஆகிய இருவரும் இந்த ஆண்டிற்கான பெருமைக்குரிய லாரியஸ் உலக விளையாட்டு வீரர் என்ற விருதுக்கு கூட்டாகத் தேர்வு செய்யப்பட்டு வெற்றியாளர்களாக அறிவிக்கப்பட்டனர்.**
  - லாரியஸ் ஸ்போர்ட்டிங் மொமென்ட் விருது (2000-2020) பொதுமக்கள் விசிறகள் வாக்கை சச்சின் டெண்டுல்கர் வென்றார்.

- **கிரண் மஜூம்தார் ஷா – 2019ஆம் ஆண்டுக்கான சிறந்த தொழில் முனைவோராகத் தேர்வு செய்யப்பட்டார்**

- **தொழில்முறை மாடலாகிய அட்லின் கேஸ்டிலினோ – பிரபஞ்ச லிவா திவா அழகி 2020 (LIVA Miss Diva Universe 2020) ஆக மகுடன் சூடினார்.**
  - அவர் இந்த ஆண்டுக்கான பிரபஞ்ச அழகிப் போட்டியில் இந்தியாவின்சார்பில் கலந்துகொள்வார்.

- **டாக்டர் நித்தி குமார், லக்னோவில் உள்ள சிஎஸ்ஐஆர்-சிடிஆர்ஐ மூலக்கூறு ஒட்டுண்ணி மற்றும் நோயெதிர்ப்புப் பிரிவு மூத்த விஞ்ஞானி – செர்ப் சிறந்த மகளிருக்கான விருது (SERB Women's Excellence Award) 2020 வழங்கப்பட உள்ளார்.**
  - அவருக்கு இந்த விருதை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள், பிப்ரவரி 28, 2020 அன்று விஞ்ஞான் பவனில் நடைபெறும் தேசிய அறிவியல் நாள் விழாவில் வழங்குவார்.
  - இந்த விருது 40 வயதிற்கும் குறைவான, பல்வேறு தேசிய கல்விக் கூடங்களிலிருந்து விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்ற பெண் விஞ்ஞானிக்கு வழங்கப்படுகிறது.

- **RBI ஆளுநர் ஷக்திகாந்த தாஸ் - 2020ஆம் ஆண்டுக்கான ஆசிய பசிபிக் பிராந்தியத்திற்கான மத்திய வங்கியாளராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

- குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்த் - மார்ச் 8 அன்று குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் 2019ஆம் ஆண்டுக்கான நரி சக்தி புரஸ்கார் விருதுகளை 15 பெண்களுக்கு வழங்கினார்.
  - பெண்கள், குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய மற்றும் விளிம்பு நிலையில் உள்ள பெண்களுக்கு, பெண்களின் விடுதலையை நோக்கி சிறப்பான செவைகளை வழங்குவதில் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருதுகள் புகழ்பெற்ற பெண்களுக்கு வழங்கப்படுகின்றன.

நாரி சக்தி புரஸ்கார் 2019: வெற்றியாளர்கள் பட்டியல்

| வ.எண். | பெயர் | பிரிவு | மாநிலம் |
|---|---|---|---|
| 1 | படாலா பூதேவி | தனிநபர் | ஸ்ரீகுளம், ஆந்திரப்பிரதேசம் |
| 2 | பினா தேவி | தனிநபர் | முங்கர், பீகார் |
| 3 | அரி.்.பாஜன் | தனிநபர் | ஸ்ரீநகர், ஜம்மு காஷ்மீர் |
| 4 | சாமி முர்மு | தனிநபர் | ராஜ்நகர், சரைகெலா, கர்சவான், ஜார்க்காண்ட் |
| 5 | நில்ஜா வாங்மோ | தனிநபர் | லே, லடாக் |
| 6 | ரேஷ்மி ஊர்த்வரேஷி | தனிநபர் | புனே, மகாராஷ்டிரா |
| 7 | சர்தாமி மண் கவுர் | தனிநபர் | பாட்டியாலா, பஞ்சாப் |
| 8 | கலாவதி தேவி | தனிநபர் | கான்பூர், உத்தரப்பிரதேசம் |
| 9 | தாஷி மற்றும் நுங்ஷி | தனிநபர் | டேராடூன், உத்தராகண்ட் |
| 10 | கௌஷிகி சக்ரவர்த்தி | தனிநபர் | கோல்கட்டா, மேற்குவங்காளம் |
| 11 | பாகீரதி அம்மா, கார்த்தியாயினி அம்மா | தனிநபர் | கொல்லம், ஆலப்புழா, கேரளா |
| 12 | அவனி சதுர்வேதி, பாவ்னா காந்த், மோகனா சிங் | தனிநபர் | ரேவா, மத்தியப் பிரதேசம், தர்பங்கா, பீகா, ஆக்ரா, உத்தரப் பிரதேசம், இந்திய விமானப்படை |

## ஏபல் பரிசு 2020

- ஜெருசலேம் ஹீப்ரு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த, ஹில்லல் ஃபர்ஸ்டென்பெர்க், 84 மற்றும் யேல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கிரிகரி மார்குலிஸ், 74 ஆகிய இரண்டு ஓய்வு பெற்ற பேராசிரியர்களும், நோபல் பரிசுக்கு இணையான கணக்கியல் ஏபல் பரிசை நடப்பாண்டில் பகிர்ந்து கொண்டனர்.
- நார்வீஜியன் அறிவியல் மற்றும் கடிதங்கள் அகாடமியால் வழங்கப்பட்ட இந்தப் பரிசுக்கான சான்று, இந்த இரண்டு கணிதவியல் வல்லுநர்களையும், "குழு கோட்பாடு, எண் கோட்பாடு மற்றும் காம்பினேட்டரிக்ஸ் ஆகியவற்றில் நிகழ்தகவு மற்றும் இயக்கவியலில் இருந்து முறைகளைப் பயன்படுத்துவதற்கு முன்னோடியாக இருக்கிறார்கள்" என்று பாராட்டுகிறது.

# இரங்கல் செய்திகள்

- **ராஜிந்தர் கே. பச்சூரி (79 வயது), காலநிலை மாற்றம் குறித்த சர்வதேச அரசு குழுவின் (Intergovernmental Panel on Climate Change) முன்னாள் தலைவர் - பிப்ரவரி 13 அன்று காலமானார்.**

  - டாக்டர். பச்சூரி, எரிசக்தி வள நிறுவனத்தின் (**The Energy Resources Institute**) நிறுவனராகவும் முதன்மைச் செயல் அதிகாரியாகவும் இருந்துள்ளார்.
  - 2002ஆம் ஆண்டில், உலக வானிலை அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் சுற்றுச் சூழல் திட்டத்தினால் தோற்றுவிக்கப்பட்ட காலநிலை மாற்றம் பற்றிய சர்வதேச குழுவின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.
  - அவர், சர்வதேச அரசு குழுவின் சார்பாக அமைதிக்கான நோபல் பரிசை, முன்னாள் அமெரிக்க துணை ஜனாதிபதி அல் கோர், உடன் 2007ஆம் ஆண்டு பகிர்ந்து கொண்டார்.

## பேராசிரியர் கே. அன்பழகன், முதுபெரும் அரசியல்வாதி (97 ஆண்டுகள்)

- டிசம்பர் 19, 1922: எம். கல்யாணசுந்தரம் என்பவருக்கும் ஸ்வமாம்பாள் என்பவருக்கும் திருவாரூர் அருகில் உள்ள காட்டூரில் ராமையாவாகப் பிறந்தார். அவரது தந்தை ஒரு காங்கிரஸ்வாதியாக இருந்தார். அவர் பெரியாரைப் பின்பற்றினார்.
- 1942: வீட்டில் பெரியாரின் கொள்கைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். மறைமலை அடிகளின் தனித் தமிழ் இயக்கத்தைப் பின்பற்றத் தொடங்கினார். தன் பெயரை அன்பழகன் என்று மாற்றிக் கொண்டார்.
- 1942: அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தன்னுடைய முதுகலைக் கல்வியை பயின்று கொண்டிருக்கும்போதே, மாணவர்கள் மத்தியில் உரையாற்றுவதற்காக அண்ணாதுரையை அழைத்து வந்தார். எம். கருணாநிதியுடன் இணைந்தார்.
- 1944: பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக பணியில் சேர்ந்தார்.
- 1948: புதுவாழ்வு பத்திரிகையின் ஆசிரியராக சேர்ந்தார்.
- 1949: திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறி, புதிதாகத் தொடங்கப்பட்ட தி.மு.கவில் தன்னை இணைத்துக் கொண்டார்.
- 1957: தன்னுடைய கல்லூரிப் பணியை இராஜினாமா செய்துவிட்டு, முழுநேர அரசியல் பணியை ஏற்றுக் கொண்டார். அவருடைய கல்விப் பின்னணி அவருக்கு பேராசிரியர் என்ற பட்டத்தைப் பெற்றுக் கொடுத்தது.
- முதன்முதலாக எழும்பூர் சட்டமன்றத் தொகுதியிலிருந்து சட்டமன்றத்திற்குத் தேர்வு செய்யப்பட்டார்.
- 1962: சட்டமன்றத் தேர்தலில் தோல்வியுற்றார். ஆனால், சட்ட மேலவைக்குத் தேர்வு செய்யப்பட்டார்.
- 1964: இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு, ஆறு மாதங்கள் சிறையிலிருந்தார்.
- 1967: திருச்செங்கோடு நாடாளுமன்ற தொகுதியிலிருந்து மக்களவைக்குத் தேர்வு செய்யப்பட்டார்.
- 1971: புரசைவாக்கம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து சட்ட மன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார். கருணாநிதியின் மந்திரி சபையில் சுகாதார அமைச்சராக சேர்ந்து கொண்டார்.

- 1977: தி.மு.க பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார். அவர் இறக்கும் வரையிலும் இந்தப் பதவியில் இருந்தார்.
- 1983: இலங்கை போருக்கு எதிர்ப்பு தெரிவித்து, கருணாநிதியுடன் சேர்ந்து, சட்ட மன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார்.
- 1986: இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் ஒரு பகுதியாக, அரசியலமைப்புச் சட்டத்தின் 17வது அட்டவணை நகலை எரித்தமைக்காக, சட்டமன்றத்தில் இருந்து தகுதிநீக்கம் செய்யப்பட்டார்.
- 1989: அண்ணா நகர் சட்டமன்றத் தொகுதியிலிருந்து சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு. திமுக அரசில் கல்வி அமைச்சராக ஆனார். 1996 தேர்தலில் வெற்றி பெற்றதற்குப் பின்னர் இந்தத் துறையைத் தக்க வைத்துக் கொண்டார்.
- 2006: துறைமுகம் தொகுதியிலிருந்து தேர்வு செய்யப்பட்டு, ஒன்பதாவது முறையாக சட்டமன்றத்திற்குள் நுழைந்தார். நிதி அமைச்சராக ஆனார்.
- 2017: மு.க.ஸ்டாலினை, செயல் தலைவராக ஆக்கினார்.
- 2018: திரு. மு. கருணாநிதி மறைந்த பிறகு, மு.க. ஸ்டாலினை தி.மு.க. தலைவராக ஆக்கினார்.
- சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து, மார்ச் 7, 2020 அன்று தன்னுடைய 97ஆவது வயதில், காலமானார்.

# அட்டவணை, தரவரிசை மற்றும் அறிக்கைகள்

- **இந்தியா – சமீபத்தில் வெளியிடப்பட்ட சர்வதேச அறிவுசார் சொத்துரிமை அட்டவணையில் 53 பொருளாதார நாடுகளில் இந்தியா 40வது இடத்தில் உள்ளது.**

  - இந்த அட்டவணையை அமெரிக்க வர்த்தக சபையின் உலகளாவிய கண்டுபிடிப்புக் கொள்கை மையம் (**Global Innovation Policy Centre**) வெளியிட்டுள்ளது.
  - இந்த ஆண்டு, அறிவுசார் சொத்துரிமை அட்டவணையில் இந்தியா 16.22 புள்ளிகளைப் பெற்றுள்ளது.
  - இந்தியாவின் புள்ளிகள் கடந்த ஆண்டை ஒப்பிடும்போது 7 விழுக்காடு அதிகரித்திருப்பதைக் காட்டுகிறது.
  - 2019ஆம் ஆண்டில், இந்தியா 36வது இடத்தில் இருந்தது. இது 2018ஆம் ஆண்டில் 44 வது இடத்திலிருந்து முன்னேறிய நிலையைக் காட்டுகிறது.
  - இது 2019ஆம் ஆண்டில் எந்த ஒரு நாட்டிற்கும் கிடைத்த மிகப்பெரிய இலாபம் ஆகும்.
  - 42.66 புள்ளிகளுடன் அமெரிக்கா இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. அதற்கு அடுத்ததாக இங்கிலாந்து, ஸ்வீடன், பிரான்ஸ், ஜெர்மணி மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் அடுத்த 5 இடங்களைப் பிடித்தன.

- **இந்தியா – கொரோனா வைரஸ் இறக்குமதி தொற்றிக்கொள்ளும் அதிக அபாயம் உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியா 17வது இடத்தில் இருந்தது.**
  - கொரோனா வைரஸ் தொற்று இறக்குமதி அபாயம் அதிகம் உள்ள முதல் 10 நாடகள் மற்றும் பிராந்தியங்கள் - தாய்லாந்து, ஜப்பான், தென் கொரியா, ஹாங்காங், தைவான், அமெரிக்கா, வியட்நாம், மலேசியா, சிங்கப்பூர் மற்றும் கம்போடியா.

- **தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலுங்கானா – ஆகிய மாநிலங்களே 2017ஆம் ஆண்டில் மிக அதிக மனச்சோர்வு நேர்வுகளைக் கொண்ட முதல் 3 மாநிலங்கள் ஆகும். 27 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த நேர்வுகளை ஆய்வு செய்து, லான்செட் பொது சுகாதார பத்திரிகை சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையின்மூலம் இது தெரிய வருகிறது.**

  - இந்த மூன்று மாநிலங்களும், 10,000 மக்களில் 3,760 பேருக்கு இந்த மனச் சோர்வு கோளாறு இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளன.

- **ஸ்விட்சர்லாந்து – புதிதாக வெளியிடப்பட்டுள்ள நிதி இரகசிய குறியீட்டில் (FSI-2020) உயர் இடத்தை இழந்து விட்டது - இந்த இடத்தை இந்த நாடு 2011 முதல் ஆக்கிரமித்து வந்தது.**

  - 2018க்குப் பிறகு, கேமேன் தீவுகள் இரண்டு நிலைகள் முன்னேறி முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது.
  - அமெரிக்கா தொடர்ந்து இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

- **உலக அளவில் மென்பொருள் முன்னணி நிறுவனமாகிய டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனம் - 2020ஆம் ஆண்டில், ஃபார்ச்சூன் நிறுவனத்தின் சிறந்த பெரிய நிறுவனங்களில் ஒன்றாக பணியாற்றுவதற்கு வாய்ப்பைப் பெற்றுள்ளது.**

  - அமெரிக்காவின் பெரிய நிறுவனங்களுடன், அமெரிக்காவில் வேலை செய்வதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள மிகப்பெரிய இடங்களில் டிசிஎஸ் மட்டுமே இந்தியாவில் இருந்து தேர்வு செய்யப்பட்டள்ள நிறுவனம் ஆகும்.
  - பணி செய்யும் இட கலாச்சாரத்திற்கான உலகளாவிய அதிகார அமைப்பாகிய கிரேட் பிளேசஸ் டு ஒர்க் என்ற நிறுவனத்தால் இந்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.
  - 2014 முதல், தகவல் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் ஆலோசனை துறையில், 20.000க்கும் மேற்பட்ட புதிய பணியாளர்களுக்கு வேலை வழங்கி, வேலையை உருவாக்கும் முதல் இரண்டு அமெரிக்க நிறுவனங்களில் டிசிஎஸ் இடம் பிடித்துள்ளது.

- **பொருளாதார புலனாய்வு பிரிவு (The Economic Intelligence Unit) – 2019ஆம் ஆண்டுக்கான உலகளாவிய கல்வி எதிர்கால அட்டவணையை சமீபத்தில் வெளியிட்டுள்ளது.**

  - ஒட்டு மொத்தமாக 53 புள்ளிகளைப் பெற்று இந்தப் பட்டியலில் இந்தியா 35வது இடத்தில் உள்ளது.
  - 2018ல், ஒட்டு மொத்தமாக 41.2 புள்ளிகளைப் பெற்று இந்தியா 40வது இடத்தில் இருந்தது.

- **டெல்லி, அறிவியல் மற்றும் தொழில்துறை கவுன்சில் (CSIR) – நாட்டில் உள்ள அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்களைத் தரவரிசைப்படுத்தும், தேசிய தரவரிசைப்படுத்தும் அட்டவணை 2020ன்படி, முதலிடத்தில் உள்ளது.**

  - சிஎஸ்ஐஆர்-ஐ தொடர்ந்து, பெங்களூர் இந்திய அறிவியல் நிறுவனம் (**IISc**) இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
  - மூன்றாவது இடத்தை டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் (**Tata Institute of Fundamental Research**) வென்றது.

- **புது டெல்லி - IQAir AirVisual நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ள, உலக காற்று தர அறிக்கை, 2019ன்படி, உலக அளவில் மிகவும் மாசுபட்டுள்ள தலைநகரங்களின் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.**

  - இந்த அறிக்கையின்படி, உலகின் மிகவும் மாசுபட்ட 30 நகரங்களில் 21 நகரங்கள் இந்தியாவில் உள்ளன.
  - காஜியாபத் உலக அளவில் மிகவும் அதிக மாசுபாட்டைக் கொண்டுள்ள நகரமாக உள்ளது.
  - இந்த அறிக்கையின்படி, காஜியாபாத்துக்கு அடுத்ததாக சீனாவின் ஹோட்டான் நகரமும், அதற்குப் பிறகு, பாகிஸ்தானின் குஜ்ரன்வாலா மற்றும் ஃபைசலாபாத் ஆகிய நகரங்கள் இடம்பெற்றுள்ளன.
  - டெல்லி ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது.
  - இந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ள 21 நகரங்கள் அவற்றின் தரவரிசைப்படி கொடுக்கப்பட்டுள்ளன. அவை காஜியாபாத், டெல்லி,

நொய்டா, குர்கான், கிரேட்டர் நொய்டா, பந்தவாரி, லக்னோ, புலந்த்ஷார், முசாபர்நகர், பாக்பட்டு, ஜிந்த, ஃபரிதாபாத், கோராட், பிவாடி, பட்னா, பால்வால், முசாபர்பூர், ஹிசார், குடெயில், ஜோத்பூர் மற்றும் மொராதாபாத்.

**மத்தியப் பிரதேச மாநிலம் - நில ஆவணங்கள் அடிப்படையில் பட்டியலில் முதன் முதலாக முதலிடம் பிடித்துள்ளது.**

- இந்த அட்டவணையை பொருளாதார முன்னணி நிறுவனமாகிய, பயன்பாட்டுப் பொருளாதார ஆராய்ச்சி தேசிய கவுன்சில் (**National Council of Applied Economic Research**) தயாரித்துள்ளது.
- 2019-20ஆம் ஆண்டுக்கான இந்த தரவரிசைப் பட்டியலில் ஒடிசா இரண்டாவது இடத்தையும், மகாராஷ்டிரா மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.
- இந்தப் பட்டியலில் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ள இதர மாநிலங்கள் சத்தீஷ்கர், தமிழ்நாடு, மேற்கு வங்காளம், ராஜஸ்தான், தெலங்கானா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகும்.
- இந்தப் பட்டியலின் கடைசி இடத்தில் லடாக் யூனியன் பிரதேசம் உள்ளது.

**ஜெப் பெசோஸ் - ஹுருன் உலக பணக்காரர்கள் பட்டியல் 2020, ஒன்பதாவது பதிப்பின்படி, ஒட்டு மொத்தமாக 140 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பைக் கொண்டிருக்கும் இவர் உலக அளவில் மிகப்பெரிய பணக்காரர் ஆவார்.**

**உலக அளவில் முதல் பத்து பணக்காரர்கள் பட்டியல்**

| தர வரிசை | பெயர் | சொத்துமதிப்பு (பில்லியன் அமெரிக்க டாலர்கள்) | கம்பெனி |
|---|---|---|---|
| 1 | ஜெப் பெசொஸ் | 140 | அமேசான் |
| 2 | பெர்ணார்டு அர்ணால்ட் | 107 | எல்விஎம்எச் |
| 3 | பில் கேட்ஸ் | 106 | மைக்ரோசாப்ட் |
| 4 | வாரென் பஃபெட் | 102 | பெர்க்ஷையர் ஹாத்வே |
| 5 | மார்க் ஜக்கர்பெரோ | 84 | முகநூல் |
| 6 | ஆர்மன்சியோ ஆர்டெகா | 81 | ஜாரா |
| 7 | கார்லோஸ் சம் ஹெலு மற்றும் குடும்பம் | 72 | அமெரிக்கா மூவி |
| 8 | செர்கெய் பிரின் | 68 | கூகுள் |
| 9 | லார்பி பேஜ் | 67 | கூகுள் |
| 10 | முகேஷ் அம்பானி | 67 | ரிலையன்ஸ் |

- இந்தியாவில் அதிக எண்ணிக்கை கொண்ட 50 பில்லியன் பணக்காரர்கள் மும்பையில் இருக்கிறார்கள், 30 பில்லியன் பணக்காரர்கள் டெல்லியிலும், 17 பில்லியன் பணக்காரர்கள் பெங்களூருவிலும் மற்றும் 12 பில்லியன் பணக்காரர்கள் அகமதாபாத்திலும் இருக்கிறார்கள்.
- இந்திய பில்லியனர்களில், எஸ்.பி ஹிந்துஜா குடும்பம், 27 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பைக் கொண்டு இரண்டாவது இடத்தில் உள்ளது, அதே சமயம் 17 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பைக் கொண்டு கௌதம் அதாணி மூன்றாவது இடத்தில் இருக்கிறார்.

◈ **அரவிந்த் கெஜ்ரிவால் - தலைமையிலான ஆம் ஆத்மி கட்சி – பப்ரவரி 11ல் நடைபெற்ற டெல்லி தேர்தல்களில் வரலாறு காணாத வெற்றியைப் பெற்றது. அது சட்டமன்றத்தில் மொத்தம் உள்ள 70 இடங்களில் 62 இடங்களைக் கைப்பற்றியது.**

- ஆம் ஆத்மி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால், டெல்லியின் முதலமைச்சராக 16, பிப்ரவரி 2020 அன்று ராம் லீலா மைதானத்தில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்வார்.
- இது அவரது மூன்றாவது தொடர்ச்சியான முதலமைச்சர் தேர்வு ஆகும்.

## ஊழல் உணர்வுக் குறியீட்டு அட்டவணை (CORRUPTION PERCEPTION INDEX) – ஒரு அறிக்கை

2019ஆம் ஆண்டு மதிப்பிடப்பட்ட ஊழல் அட்டவணையில்180 நாடுகளின் தரவரிசைப் பட்டியலில் இந்தியா பாதியில் உள்ளது. நடப்பு ஆண்டில் இந்த தரவரிசையானது சராசரி மதிப்பிலிருந்து இரண்டு இடங்கள் கீழே உள்ளது. இது 2018ஆம் ஆண்டின் அதே தரவரிசையே ஆகும். சர்வதேச வெளிப்படை ஆலோசனைக் குழு வெளியிட்டுள்ள அட்டவணையின்படி, இந்தியா இரண்டு இடங்கள் சரிந்திருந்துள்ளது. உலக அளவில் ஊழல் என்பது "தேர்தல் பிரச்சாரங்களில் பெரிய அளவில் பணம் சுதந்திரமாகப் பாயக்கூடிய நாடுகளில் மற்றும் அரசாங்கங்கள் செல்வந்தர்கள் அல்லது அதிகாரம் மிக்க தனிநபர்களின் குரல்களை மட்டுமே கேட்கும் நாடுகளில் ஊழல் மிகவும் பரவலாக உள்ளது" என்று இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

**அநேக நாடுகள் ஊழலை ஒழிப்பதற்கு போராடி வருகின்றன:**

இந்தியாவின் புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது, ஊழலை ஒழிப்பதில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டவில்லை என்று தெரிகிறது. ஆனால், மூன்றில் இரண்டு பங்கு நாடுகள் - சில மேம்பட்ட பொருளாதாரங்கள் உட்பட – ஊழல் எதிர்ப்பு முயற்சிகளில் 'தேக்கமடைகின்றன அல்லது பின்வாங்குகின்றன' என்று அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

**2019 ஊழல் உணர்வுக் குறியீட்டின்படி முதலிடம் பிடித்த நாடுகள்**

| வ.எண் | நாடு | புள்ளிகள் | தரவரிசை |
|---|---|---|---|
| 1 | நியூசிலாந்து | 87 | 1 |
| 2 | டென்மார்க் | 87 | 1 |
| 3 | பின்லாந்து | 86 | 3 |
| 4 | ஸ்விட்சர்லாந்து | 85 | 4 |
| 5 | சிங்கப்பூர் | 85 | 4 |

**2019 ஊழல் உணர்வுக் குறியீட்டின்படி கடைசிஇடம் பிடித்த நாடுகள்**

| வ.எண் | நாடு | புள்ளிகள் | தரவரிசை |
|---|---|---|---|
| 1 | ஆப்கானிஸ்தான் | 16 | 177 |
| 2 | யேமென் | 15 | 175 |
| 3 | சிரியா | 13 | 178 |
| 4 | தெற்கு சூடான் | 12 | 179 |
| 5 | சொமாலியா | 9 | 180 |

## உலக சுகாதார நிறுவனம் 'கோவிட்-19'ஐ ஒரு அவசநிலை பொது சுகாதாரமாக அறிவித்துள்ளது – ஒரு அறிக்கை

**சீனாவின் வூகான் மாகாணத்தில் தோன்றிய கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை, உலக சுகாதார அமைப்பு, 'உலகளாவிய சுகாதார அவசரநிலை'என்று சமீபத்தில் அறிவித்துள்ளது.**

- கோவிட்-19 என்று அறியப்படும் கொரோனா வைரஸ், கடந்த 10 ஆண்டுகளில் உலக அளவில் அறிவிக்கப்பட்ட சுகாதார அவசர நிலைகளில் ஆறாவது ஆகும்.
- டிசம்பர் 31 அன்று முதன் முதலாக இந்த நேர்வு உறுதி செய்யப்பட்ட பிறகு, உலக அளவில், 20,000க்கும் மேற்பட்ட நோய்கள் கடந்த ஒரு மாதத்திற்கும் சிறிது மேலாக கண்டறியப்பட்டுள்ளன.

**ஒரு கொரோனா வைரஸ் ஒரு உலகளாவிய பொதுசுகாதார அவசர நிலையாக இப்போதுதான் முதன்முறையாக அறிவிக்கப்படுகிறதா? கேரளாவில் தோன்றிய நிபா வைரஸ் நேர்வு குறித்து என்ன சொல்லப்படுகிறது?**

- மூன்று முக்கியமான கொரோனா வைரஸ் நேர்வுகள் - 2003ல் சார்ஸ் (**SARS**), 2012ல் மெர்ஸ் (**MERS**), 2019ல் என்கோவ் (**nCoV**) - இவை அனைத்துமே வவ்வால்கள் மூலமாகவே தோன்றியதாகவும், இடைப்பட்ட விலங்கு மூலமாக சார்ஸ் சிவெட் பூனைகள் மூலமாகவும், மெர்ஸ் ஒட்டகங்கள் மூலமாகவும் மனிதர்களுக்குப் பரவியதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.
- 2018ஆம் ஆண்டு கேரளாவில் தோன்றிய நிபா (**Nipah**) வைரஸ்கூட, வவ்வால்களில் இருந்து தோன்றியதாகக் கண்டறியப்பட்டது. இதில் சுவாசக் கோளாறுகளே முக்கியமான அறிகுறியாக இருந்தபோதிலும், அது கொரோனா வைரஸ் அல்ல.
- உண்மையில், வவ்வால்கள் எடுத்துச் செல்லும் பல்வேறு வைரஸ்கள் மனிதர்களில் நோய்களை ஏற்படுத்துகின்றன. கொரோனா வைரசும் அவற்றில் ஒன்று ஆகும்.
- கேரளாவில் தோன்றிய நிபா வைரஸ் மொத்தம் பாதித்த 19 பேர்களில் 17 பேரைக் கொன்றுள்ளது. அதனால் இறப்பு விகிதம் 89 விழுக்காடு ஆகும்.

**நோய்க்கிளர்ச்சியின் பொருளாதார தாக்கங்கள் என்ன?**

- அமெரிக்க தேசிய மருத்துவ நூலகம், வெளியிட்டுள்ள 2017ஆம் ஆண்டு ஆய்வறிக்கையின்படி, தொற்று அபாயத்தினால் ஏற்படும் இழப்புகள், வருமான இழப்பு மற்றும் சுகாதார பாதிப்பு இரண்டையும் கணக்கில் எடுத்துப் பார்க்கும்போது, ஆண்டுக்கு சுமார் 500 பில்லியன் டாலர்களான இருந்தன.
- 2003ஆம் ஆண்டு சார்ஸ் நோய்க்கிளர்ச்சி ஏற்படுத்திய உலக அளவிலான மொத்த பொருளாதார இழப்பு 40 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும்.
- இதன்மூலம் நோய்க் கிளர்ச்சிகள் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தைக் குறைக்கின்றன என்பது தெளிவாகிறது.

- நோய்க்கிளர்ச்சிகள் காரணமாக விதிக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் வர்த்தகத் தடைகள் காரணமாக ஏற்கனவே வணிகத்தில் மிகப்பெரிய இழப்பு ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

- **சார்ஸ் நோய்க்கிளர்ச்சியின்போது குறிப்பிடத்தக்க பொருளாதார இழப்பு ஏற்பட்டிருந்தபோதிலும், இன்று ஏன் மெதுவான சீனா உலகப் பொருளாதாரத்திற்கு மிகவும் மோசமாக உள்ளது எனில், இன்று சீனா உலக வளர்ச்சியில் மூன்றில் ஒரு பங்குக்கு காரணமாக விளங்குகிறது என்பதாகும். இது அமெரிக்கா. ஐரோப்பா மற்றும் ஜப்பான் நாடுகளின் ஒட்டு மொத்த பங்கைவிடவும் அதிகம் ஆகும்.**

| வ.எண். | நோய் | ஆண்டு |
|---|---|---|
| 1 | எச்1என்1 இன்ப்ளுயென்சா | 2009 |
| 2 | போலியோ | 2014 |
| 3 | எபோலா | 2014 மற்றும் 2019 |
| 4 | ஜிகா வைரஸ் | 2016 |
| 5 | நோவல் கோரோனா வைரஸ் | 2020 |

## தமிழ்நாடு அரசு - மூன்றாண்டு சாதனை – ஒரு அறிக்கை

- **திரு.எடப்பாடி கே. பழனிசாமி, முதலமைச்சராக மூன்று ஆண்டுகள் நிறைவு செய்ததைத் தொடர்ந்து –பிப்ரவரி 17 அன்று தலைமைச் செயலகத்தில் தகவல் மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்ககத்தின்மூலம் பல்வேறு வெளியீடுகளை வெளியிட்டார்.**

- Tamil Nadu ranks first in the good governance index
- Hon'ble Chief Minister's foreign visit has attracted investments worth Rs.8,835 crore
- Cauvery Delta Region declared as protected Special Agriculture Zone
- New Government Medical Colleges in 11 Districts
- 5 New districts created for administrative convenience
- Rs.1,000 with Pongal gift hamper to 2.05 crore families

### PUBLIC WORKS DEPARTMENT

- Nadanthai Vazhi Kaveri Scheme to restore the pristine glory of Cauvery river and its tributaries at an estimate of Rs.11,250 crore
- **Athikadavu Avinasi Scheme for Irrigation, Ground Water Recharge and Drinking Water Supply Scheme at a cost of Rs.1,652 crore**
- Tamil Nadu Water Resource Conservation and augmentation mission as people's movement
- **4,865 Kudimaramathu works at a cost of Rs.930.25 crore**
- Construction of barrage across Kollidam river in Adhanur-Kumaramangalam at a cost of Rs.494.60 crore
- **Dams renovation and improvement project at a cost of Rs.803.49 crore**
- Groynes and Rubble Mound Sea Wall (RMS) at a cost of Rs.168.57 crore
- **Mettur Dam - Sarabanga Lift Irrigation scheme at a cost of Rs.565 crore**
- Tamil Nadu Irrigated Agriculture Modernisation Project at a cost of Rs.2,962 crore

### HIGHWAYS AND MINOR PORTS DEPARTMENT

- **Improvement of 21,109 k.m. length of highways at a cost of Rs.22,096 crore. 8,524 k.m. length of roads renewed. Works of 447 small bridges, 247 bridges completed**
- Administrative sanction given for road works between Ennore Port and Mamallapuram Pooncheri Junction at a cost of Rs.12,301 crore
- **Chennai - Kanniyakumari industrial corridor project at a cost of Rs.6,448 crore**

### SPECIAL PROGRAMME IMPLEMENTATION

- From 2018-19 onwards, laptops provided to students in 11th standard itself
- **17.72 lakh cost free laptops to students at a cost of Rs.2,183.55 crore**

### AWARDS AND RECOGNITION RECEIVED BY THE GOVERNMENT OF TAMIL NADU

- India Today Magazine adjudged Tamil Nadu as the overall best performing State for the second time
- Tamil Nadu bagged the Prestigeous Krishi Karman award for 5 times
- Best State Award for organ transplantation consecutively for the 5th year
- 12 National Awards for e-Governance, capacity building, child care, grama sabha, etc
- "Public Affairs Centre", Bengaluru has ranked Tamil Nadu second in good governance
- Frost & Sullivan adjudged Tamil Nadu in second position for the overall best performing State for the second consecutive time
- Central Government's Award for reducing the death ratio of lactating mothers
- Central Government's Award for the best performance in "Beti Bachao Beti Padhao" Scheme
- Best State Award for Clean India Scheme
- Award for End to End computerization of Public Distribution System
- Nine National Awards for exemplary work of Rural Development Department
- Four National Awards for Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme
- National Award to Tamil Nadu State Apex Co-operative Bank for providing loans to a large number of differently abled persons
- National Award for forerunner state in online learning
- National Award for best service to senior citizens
- Food Safety and Standards Authority of India Award
- Award to Chennai Government General Hospital for organ donation
- Award to renewable energy department
- Central Government's Award for road safety
- Nine National Awards for best performance of Transport Corporations
- Tamil Nadu State forerunner in enrolment in higher education
- National Kamadhenu Award to Bargur Cattle Research Station
- Post graduate Award to Tamil Nadu Veterinary and Animal Sciences University
- Tamil Nadu Fisheries University accredited with First Rank among the fisheries universities in India
- Central Government's Award for Sathyamangalam Tiger Reserve
- Central Government's National Water Resource Award for the year 2018
- Central Government's Clean City Swatch Sarvaksan Award for the year 2018
- Clean Holy Place Award for Arulmigu Meenakshi Sundareswarar Temple, Madurai
- UNESCO Award to Srirangam Arulmigu Aranganatha Swamy Temple for restoration work without altering architecture

### FINANCE DEPARTMENT

- New Health Insurance Scheme for pensioners at a cost of Rs.331.36 crore. 94,981 persons have benefitted. This scheme extended for another four years

### LAW DEPARTMENT

- **New Government Law Colleges in Villupuram, Dharmapuri, Ramanathapuram, Salem, Namakkal and Theni Districts**
- New buildings and infrastructure facilities for Law Colleges at a cost of Rs.458.67 crore

### CO-OPERATION AND FOOD DEPARTMENT

- **Crop loans to 34,07,954 farmers at a cost of Rs.22,031.69 crore**
- Interest incentive of Rs.303.71 crore for repayment of crop loans within due date

### COMMERCIAL TAXES AND REGISTRATION DEPARTMENT

- **STAR 2.0 project launched for ensuring Simplified and Transparent Administration of Registration**
- 65,02,906 documents registered during the past three years

### HOME, PROHIBITION AND EXCISE DEPARTMENT

- **28,312 Uniformed service personnel appointed**
- "Kavalan" App for the protection of women
- **3,28,688 CCTV cameras installed across the State for monitoring**
- New Court buildings and quarters for Judges at a cost of Rs.838 crore
- **The Fire and Rescue Services Department received 68,710 calls relating to fire accidents and rescued 213 lives and saved properties worth Rs.916.69 crore. This Department received 73,414 calls relating to various rescue services and rescued 12,502 lives**

### HOUSING AND URBAN DEVELOPMENT DEPARTMENT

- 4,44,203 tenements / houses at a cost of Rs.22,367 crore under Housing for All Schemes
- **1,25,390 tenements / houses to the urban slum families**
- 9,535 tenements / houses in 33 schemes at a cost of Rs.2,117.55 crore
- **22,669 layouts and 17,00,906 plots regularized under regularization of unapproved layouts / plots scheme**
- Chennai Unified Metropolitan Transport Authority (CUMTA) Act and its Rules 2019 notified


### INDUSTRIES DEPARTMENT

- **An investment of Rs.3,00,501 crore has been attracted creating job opportunities for 10.5 lakh persons through Global Investors Meet**
- Through Hon'ble Chief Minister's foreign visits a total of 41 MoUs were signed for an investment of Rs.8,835 crore which will create job opportunities for 35,520
- **Total of 22 MoUs were signed for an investment of Rs.10,301 crore which will create job opportunities for 48,317 persons after Global Investors Meet 2019**
- Tamil Nadu Aerospace and Defence Industrial Policy 2019 released
- **Rs.5,324.50 crore financial incentives to 25 large industries**
- Tamil Nadu E-Vehicle Policy 2019 released

- இந்திய பறவைகளின் நிலை 2020 அறிக்கை – குஜராத்தின் காந்திநகரில், பிப்ரவரி 17, 2020 அன்று நடைபெற்ற வன விலங்குகளில் இடம் பெயரும் சிற்றினங்களைப் பாதுகாத்தல் என்பது குறித்த 13வது சிஓபி மாநாட்டில் சமீபத்தில் வெளியிடப்பட்டது.

- 15,000க்கும் மேற்பட்ட பறவை கண்காணிப்பாளர்களால் ‘e-bird’ தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட 10 மில்லியன் கவனிப்புகளுக்கும் மேற்பட்ட ஒரு மாபெரும் தரவுத் தளத்தின் உதவியால் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் உள்ள பறவைகள் பற்றிய உண்மையான தரவுகளைச் சேகரிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக மே 2018ஆம் ஆண்டு இந்தத் திட்டம் தொடங்கியது.
- இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, 867 பறவைகள் கண்காணிக்கப்பட்டன. இதன்மூலம் கிட்டத்தட்ட அனைத்து சிற்றினங்களுமே குறைந்து வருவது கண்டறியப்பட்டது.
- பறவைகள் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன – 101 பறவைகள் உயர் கவலைக்குரியனவாகவும், 319 பறவைகள் நடுத்தர கவலைக்குரியனவாகவும், மற்றும் 442 பறவைகள் குறைந்த கவலைக்குரியனவாகவும் வகைப்படுத்தப்பட்டன.
- உயர் பாதுகாப்புக் கவலைக்குரியனவாக வகைப்படுத்தப்பட்ட 101 சிற்றினங்களில், 59 பறவைகள் அவற்றின் ரேஞ்ச அளவு மற்றும் அபண்டன்ஸ் போக்குகள் அடிப்படையிலும், மேலும் 42 பறவைகள் ஐயுசிஎன் சிவப்புப் பட்டியல் நிலை அடிப்படையிலும் பிரிக்கப்பட்டன.
- இந்த அறிக்கையின்படி, இந்திய மயில்களின் எண்ணிக்கையில் நல்ல வளர்ச்சி காணப்பட்டது.
- ஐயுசிஎன் பட்டியலிலும் இந்திய மயில்கள் ‘குறைந்த கவலைக்குரிய’ பட்டியலில் வைக்கப்பட்டுள்ளன.
- உள்நாட்டு மற்றும் வீட்டு சிட்டுக் குருவிகளின் எண்ணிக்கை பெரு நகரங்களில் குறைந்துள்ளன. ஆனால், ஒட்டுமொத்தமாக நிலையாக உள்ளது.

## US PRESIDENT'S VISIT TO INDIA – A PICTORIAL REPORT




- முதல் முறையாக, இந்திய தொழில்நுட்ப நிறுவனங்கள் - பாட அடிப்படையில் கியூஎஸ் உலக பல்கலைக் கழக தரவரிசையில் முதல் 50 இடங்களைப் பிடித்துள்ளன.
    - ஐஐடி, பாம்பே மற்றும் ஐஐடி, டெல்லி ஆகியவை இந்த ஆண்டுக்கான பொறியியல்மற்றும் தொழில்நுட்ப பிரிவில் முறையே 44வது மற்றும்47வது இடத்தைப் பிடித்துள்ளன.

- உத்தரப் பிரதேசம் - கடந்த ஆண்டு நடைபெற்ற சாலை விபத்துகளில், 22,655 உயிரிழப்புகளுடன் (இவற்றில் 15 விழுக்காடு இறப்புகள் சாலையில் நிகழ்ந்துள்ளன) முதலிடத்தில் உள்ளது.
    - 2015ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில், 17,218 உயிரிழப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டில், 10,525 ஆக குறைந்துள்ளது.
    - 2019ஆம் ஆண்டில் நேரிட்ட மொத்த விபத்துகளின் எண்ணிக்கை 57,228 ஆகும்.

- மார்ச் 20, 2020 அன்று ஐக்கிய நாடுகள் - சர்வதேச மகிழ்ச்சி நாள், 2020 ஐ ஒட்டி, உலக மகிழ்ச்சி அறிக்கையின் 8வது பதிப்பை வெளியிட்டுள்ளது.




    - இந்த அறிக்கையில் பின்லாந்து முதலிடத்தைப் பிடித்துள்ளது. 156 நாடுகள் இடம் பெற்றுள்ள இந்த பட்டியலில் இந்தியா 144வது இடத்தில் உள்ளது.

- உலகத்தில் சுதந்திரம் 2020 அறிக்கை
    - உலகத்தில் சுதந்திரம் 2020 என்ற அறிக்கையானது, இந்தியாவை தைமர்-லெஸ்டி மற்றும் செனகலுடன், 83வது இடத்தில் வைத்துள்ளது.
    - அதே சமயம், சுதந்திரமான குடியரசு நாடாக பின்லாந்து இந்தப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது.

- இந்தியா – உலக விலங்குகள் பாதுகாப்பு என்ற ஒரு சர்வதேச விலங்குகள் நல தொண்டு நிறுவனத்தினால், வெளியிடப்பட்ட விலங்குகள் பாதுகாப்பு அட்டவணை 2020ல், 'C'தரத்தைப் பெற்றுள்ளது.


- இந்த அட்டவணையானது நாடுகளை அவற்றின் கொள்கை மற்றும் சட்டத்தின் அடிப்படையில் ஏ (மிக அதிக மதிப்பீடு) முதல் ஜி (மிகக் குறைந்த மதிப்பீடு) வரை வரிசைப்படுத்துகிறது.
- இந்த அட்டவணையில் இந்தியா சி தரத்தைப் பிடித்துள்ளது.
- இந்தியா ஸ்பெயின். மெக்சிகோ, பிரான்ஸ் மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு இணையாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- ஸ்வீடன், இங்கிலாந்து, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் மிக அதிக மதிப்பீடுகளைப் பெற்றுள்ளன.
- குறைந்த மதிப்பீடுகளைப் பெற்ற நாடுகள் ஈரான், மொராக்கோ, அல்ஜீரியா மற்றும் பெலாரஸ் ஆகும்.


- **இந்தியா – ஏப்ரல் 21 அன்று வெளியிடப்பட்ட, 'எல்லைகள் இல்லாத நிருபர்கள்' என்ற ஒரு ஆண்டு அறிக்கையில், வெளியிடப்பட்ட உலகளாவிய சுதந்திர அட்டவணையில் மொத்தம் உள்ள 180 நாடுகளில் 142வது இடத்தைப் பிடித்துள்ளது.**
  - ✓ இந்த அறிக்கையில் நார்வே நாடு தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக முதலிடம் பிடித்துள்ளது.
  - ✓ 'எல்லைகள் இல்லாத நிருபர்கள்' என்பது 1985ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஒரு இலாப நோக்கம் இல்லாத நிறுவனம் ஆகும்.
  - ✓ இந்த நிறுவனத்தின் நோக்கம் சுதந்திரமான மற்றும் தன்னிச்சையான பத்திரிகையியலை மேம்படுத்துவதும், ஊடக பணியாளர்களைப் பாதுகாப்பதும் ஆகும்.


❖ உலகளாவிய பத்திரிகை அட்டவணை – நார்வே 1, இந்தியா 142.

## <u>கொரோனா வைரஸ் சிகிச்சைக்காக பிளாஸ்மா தெரபி – ஒரு அறிக்கை</u>

- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் (**The Indian Council of Medical Research) –** ஏப்ரல் 10, 2020 அன்று மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள கோவிட்-19 நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக, கொன்வேலசெனட் பிளாஸ்மா சிகிச்சைக்கான நடைமுறைகளை இறுதிசெய்துள்ளது.
- கோவிட் 19 நோயாளிகளிடையே டிஜிசிஐ வின் அனுமதி கிடைக்கப் பெற்றதும். இந்த சிகிச்சை முறையைத் தொடங்க உள்ள முதல் மாநிலமாக இருக்கப் போகிறது.
- வெண்டிலேட்டர் உதவியுடன் இருக்கும் மிகவும் மோசமான நிலையில் உள்ள நோயாளிகளுக்கு மட்டுமே சிகிச்சை அளிக்க இந்த சிகிச்சை முறை பயன்படுத்தப்படும்.
- இந்த சிகிச்சை முறையில், இந்த வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டு மீண்டு வந்த நபரிடமிருந்து உயிர் எதிரிகளை (ஆன்டிபாடிகள்) எடுத்து, உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெறும் நபருக்குச் செலுத்தி, அவருடைய நோய் எதிர்ப்பு அமைப்பை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
- இந்த பிளாஸ்மா சிகிச்சை முறையானது, எபோலா, சார்ஸ் மற்றும் மெர்ஸ் போன்ற நோய்க்கிளர்ச்சியினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க ஏற்கனவே பயன்படுத்தப்பட்டது.


THE PROCESS
1
Whole blood
WHAT'S PLASMA?
Plasma is a pale-yellow liquid component constituting 55% of human blood. It helps in clotting, maintaining blood pressure. It has antibodies, a blood protein produced by immune cells called B lumphocytes to fight infections
The blood is placed in centrifuge
2
Blood after double Centrifugation


HOW IT WORKS?
A Covid-19 patient develops antibodies against the virus. This person's blood is collected and plasma separated and transfused into a seriously ill Covid-19 person. The antibodies in the plasma binds to specific antigens, recognised by the body as alien, in the infected person and destroys it
WHO CAN DONATE?
Anyone who has recovered from the infection can donate. Unlike blood transfusion, a match is not required for plasma transfusion of plasma
3
55%
Plasma
White blood cells
4%
41%
Red blood cells
PRP injection into affected area
4


WHAT IS PLASMA THERAPY
THE THERAPY
Entails giving patients a transfusion with plasma (or serum) from those who have developed antibodies to a virus or bacteria
This process grants the patient some passive immunity. Convalescent blood is an option if there are no medicines or vaccines to treat an infectious disease
The first valid trial was done in 1892 for diphtheria, using serum from animals
SIDE-EFFECTS
No definitive studies exist showing effectiveness. In case of dengue, convalescent serum was found to make patients worse, as it led the virus to replicate
There could be transfusion-associated reactions. Unknown pathogens could be transferred into a patient during transfusion
RISKS FOR COVID-19 PATIENTS
Potential risks of therapy remain unknown. US FDA rules say suitable donors are those whose infection began 28 days prior
A study from Wuhan published in March showed that 10 adults who were severely ill with Covid-19 tolerated the transfusion well and started developing antibodies that helped reduce the viral load within seven days
PLASMA
RBCs
COUNTRIES THAT HAVE TRIED PLASMA THERAPY FOR COVID-19
China
South Korea
Canada
US
Italy

# கோவிட் - 19 பற்றிய தகவல்கள்

- டிசம்பர் 8 அன்று சீனாவில் கோவிட்-19 நோய்க்கிளர்ச்சி ஏற்பட்ட பிறகு, பிப்ரவரி 26 அன்று முதன் முறையாக, சீன நாட்டிற்குள் ஏற்பட்ட நோய்த் தொற்றுகளை விட வெளியிடங்களில் கண்டறியப்பட்ட நோவல் கொரோனா வைரஸ் (**SARS-CoV-2**) தொற்றுகளின் எண்ணிக்கை மிகவும் அதிகம் ஆகும்.
- கொரோனா வைரஸ்கள் என்பவை ஒரு பெரிய வைரஸ் குடும்ப வகையைச் சேர்ந்ததாகும். இதில் சில வைரஸ்கள் சாதாரண சளியை ஏற்படுத்துவன. சில வைரஸ்கள் மிகக் கடுமையான சுவாச நோய்க்குறியையும் (**Severe Acute Respiratory Syndrome-SARS**) மத்திய கிழக்கு சுவாச நோய்க்குறியையும் (**Middle East Respiratory Syndrome -MERS**) ஏற்படுத்துவன ஆகும்.
- ஹுபேய் மாகாணத்தில் உள்ள வூஹான் நகரத்தில் மூல காரணமே தெரியாமல், நிமோனியா காய்ச்சல் ஒரு தொகுப்பாக ஏற்பட்டிருப்பதை 31.12.2019 அன்று சீனா, உலக சுகாதார நிறுவனத்திற்குத் தெரிவித்ததைத் தொடர்ந்தே இது வெளி உலகத்திற்குத் தெரிய வந்தது.
- இந்த நோவல் கொரோனாவைரஸ் வியட்நாம் மற்றும் ஜெர்மனியில் மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்குப் பரவுவதாகக் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, இது மனிதர்களிடையே பரவும் திறனைப் பெற்றுள்ளது தெரிய வந்தது.
- கொரோனாவைரஸ் அறிகுறிகள் காய்ச்சல், இருமல் மற்றும் மூச்சுவிட சிரமப்படுதல் ஆகும்.
- இந்த சுகவீனத்தின் காரணமாக நுரையீரல் புண்கள் மற்றும் நிமோனியா ஏற்படும்.
- இலேசான அறிகுறிகள் உள்ள நேர்வுகள், ஃபுளு அல்லது ஒரு அதிக சளியைப் போன்று தோன்றுவதால், இதைக் கண்டுபிடிப்பது கடினமாக உள்ளது.

**பெருந்தொற்று என்ற அறிவிப்பு: உலக சுகாதார நிறுவனம்**

- ஒரு பெருந்தொற்று என்பது ஒரு புதிய நோய் உலக அளவில் பரவுவதைக் குறிக்கும்.
- கடைசியாகக் கண்டறியப்பட்ட பெருந்தொற்று 2009ஆம் ஆண்டில் பரவிய எச்1என்1 காய்ச்சல் பெருந்தொற்று ஆகும். இது உலக அளவில் ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றது.
- நிமோனியா அல்லாத நோய்களாக இருந்தால், அவற்றை பெருந்தொற்று நோய்கள் என்று அறிவிப்பதை உலக சுகாதார நிறுவனம் தவிர்த்து வருகிறது.
- 2009 எச்1என்1 அனுபவத்திற்குப் பிறகு இந்த மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.
- 2017 பெருந்தொற்று காய்ச்சல் இடர் மேலாண்மை வழிகாட்டுதல்களின்படி, உலக சுகாதார நிறுவனம் பெருந்தொற்று காய்ச்சல் கட்டங்களைப் பயன்படுத்துகிறது - இடைச்செருகல், எச்சரிக்கை, பெருந்தொற்று மற்றும் மாற்றம் - முதல் - மனிதர்களைப் பாதிக்கும் பெருந்தொற்றுடன் ஒவ்வொரு இன்ஃப்ளுயன்சா வைரஸ் தொடர்பான உலகளாவிய நிலைமையின் அபாய மதிப்பீட்டை மறுபரிசீலனை செய்வது வரை.

| |
|---|
| உலக சுகாதார நிறுவனம் கோவிட்-19ஐ பெருந்தொற்று என்று மார்ச் 11, 2020 என்று அறிவித்தது. |

**முன்னேற்றப் பாதை: இந்த வைரஸ் பரவாமல் தடுப்பதற்கு நாடுகள் என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்?**

- நோய்களை முதலில் கண்டறிந்து, இந்த வைரஸ் நேர்மறை உள்ளவர்களை மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும்.
- ஒரு நோயாளி கண்டறியப்பட்டால், அவருடன் தொடர்பிலிருந்தவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு ஏற்கனவே தொற்று பாதிப்பு இருந்தால் அவர்களுக்கும் சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும்.
- மூலக்கூறு பரிசோதனை உயரிய உணர்திறனை கொண்டிராததாலும், தவறான எதிர்மறைகளைக் காட்டக்கூடும் என்பதாலும், இந்தியாவிற்குத் திரும்பியவர்கள் அல்லது நேர்மறையைக் கண்டறிந்த நபர்களிடம் தொடர்பில் இருந்த நபர்கள் அறிகுறிகள் தெரிந்தால் உடனடியாக மருத்துவ சிகிச்சையை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
- சராசரி அடைகாக்கும் காலம் சுமார் ஐந்து-ஏழு நாட்கள் என்றபோதிலும், ஒரு சில அறிகுறிகள் 24 நாட்கள் கழிந்த பிறகே தெரிந்துள்ளன.
- மருத்துவமனைகளில் நோய்க்கிளர்ச்சிகள் ஏற்படுவதையும், சமுதாயத்தில் பரவுவதையும் தடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.
- இந்தத் தொற்று சமூகத்தில் பரவுவதைத் தடுப்பதற்கான ஒரு வழி, மூடப்பட்டுள்ள பகுதிகளில் மக்கள் அதிகமாகக் கூடுவதைத் தடுப்பதே ஆகும்.

**எது சரி?**

## ARS-CoV-2? Covid-19?

- உலக சுகாதார நிறுவனம் புதிய கொரோனா வைரசுக்கு கோவிட்-19 என்று பெயரிட்டுள்ளது.
- இந்தப் புதிய பெயர் 'கொரோனா' 'வைரஸ்' மற்றும் 'டிசீஸ்' (நோய்) என்ற வார்த்தைகளில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. அதனுடன் 2019 என்ற, நோய் தோன்றிய ஆண்டைக் குறிக்கும் எண் சேர்க்கப்பட்டுள்ளது. (இந்த நோய்த் தொற்று குறித்து உலக சுகாதார மையத்திடம் 31.12.2019 அன்று அறிக்கை வழங்கப்பட்டுள்ளது).
- உலக சுகாதார நிறுவனம் எந்த ஒரு நாட்டையோ அல்லது ஒரு குழுவையோ களங்கப்படுத்த விரும்பவில்லை. எனவே, ஒரு புவியியல் அமைவிடம், ஒரு விலங்கு, ஒரு தனிநபர் அல்லது ஒரு மக்கள் குழுவைக் குறிப்பிடாத ஒரு பெயரைத் தேர்ந்தெடுத்தது.
- மேலும், கொரோனா வைரஸ் என்ற சொல், அதைச் சார்ந்த ஒரு வைரஸ் குழுவைக் குறிப்பிடுகிறது, மாறாக அதன் சமீபத்திய ஸ்டிரெயினைக் குறிப்பிடவில்லை. புதிய ஸ்டிரெயின், வைரஸ்களை வகைப்படுத்துவதற்கான சர்வதேச குழுமத்தால் கடுமையான மோசமான சுவாச நோய்க்குறி கொரோனா வைரஸ் 2 (**Severe Acute Respiratory Syndrome Coronavirus 2 -SARS-CoV-2**) என்று பெயரிடப்பட்டுள்ளது.

**சார்ஸ் - கோவ்-2 பிறழ்கிறது (THE SARS-COV-2 IS MUTATING)**

- ஆஸ்திரேலியாவின் தேசிய அறிவியல் முகமையின் மூத்த விஞ்ஞானிகள். காமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி அமைப்பு (**Commonwealth Scientific and Industrial Research Organisation - CSIRO**), சார்ஸ்-கோவ் 2 என்று பெயரிடப்பட்டுள்ள வைரஸ் பிறழ்கிறது என்று தெரிவித்துள்ளார்கள். தற்போதைய கோவிட்-19 நோய்க்கிளர்ச்சியின் 115

வெளியிடப்பட்ட ஜீனோம் வரிசைகளை பகுப்பாய்வு செய்தபின் அவர்கள் இந்த முடிவைத் தெரிவித்துள்ளார்கள்.

- ❖ பிறழ்வுகள் என்று அழைக்கப்படும், இந்த வைரஸ்களின் காணப்படும் தவறுகள். புதிய நோய் கண்டுபிடிப்புகள், மருந்துகள் மற்றும் மருந்துப் பிறழ்வுகளைத் தயாரிப்பதிலும் மதிப்பிடுதலிலும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன.
- ❖ ஒரு டிஎன்ஏ மரபணு சேதமடைந்தால் அல்லது அந்த மரபணுவால் எடுத்துச் செல்லப்படும் மரபணுசெய்தியை மாற்றும் வகையில் மாற்றமடைந்தால், ஒரு பிறழ்வு ஏற்படுகிறது.
- ❖ ஒரு மியூட்டாஜென் என்பது மரபணு செய்தியை மாற்றக்கூடிய வகையில், டிஎன்ஏ மரபணுவின் இயற்பியல் கலவையில் ஒரு நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு பொருளின் பிரதிநிதி ஆகும்.

**கொரோனா வைரசுக்கு என்ன பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது?**

- ❖ சந்தேகிக்கப்படும் அனைத்து நோயாளிகளின் மாதிரிகள் அனுப்பப்படும் முதல் சோதனை பாலிமரேஸ் சங்கிலி எதிர்வினை (**polymerase chain reaction**) சோதனை ஆகும். அந்தப் பரிசோதனை முடிவு நேர்மறையாக இருந்தால், மாதிரியானது புனேயில் உள்ள தேசிய வைராலஜி நிறுவனத்திற்கு அனுப்பப்படுகிறது. இறுதி உறுதிப்படுத்தலுக்காக, தற்போது மரபணு வரிசைமுறை செய்யும் (**genome sequencing**) ஒரே அரசு ஆய்வகம் இதுவே ஆகும். நாவல் கொரோனா வைரசுக்கே உரித்தான இந்த இறுதி உறுதி செய்யும் பரிசோதனையானது, இந்த நோய் தோன்றிய ஒரே இரவில் உருவாக்கப்பட்டது.

**முகக் கவசங்கள் கொரோனாவைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துமா?**

- ❖ நோய்த் தொற்றுகளைக் கட்டுப்படுத்துவதில் முகக் கவசங்கள் முக்கிய பங்கு ஆற்றுகின்றன. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் பயணம் செய்த எந்த ஒரு நபரும், அல்லது பாதிக்கப்பட்ட நபரோடு தொடர்பு கொண்டிருந்த எந்த ஒரு நபரும், இந்த நோயின் அறி'குறிகளைக் கொண்டிருந்தால், ஒரு முகக் கவசத்தைக் கட்டாயம் பயன்படுத்த வேண்டும். மருத்துவப் பணியாளர்களும் அவசியம் முகக் கவசம் பயன்படுத்த வேண்டும்.
- ❖ பொதுமக்கள், தற்போதைய நிலையில் முகக்கவசங்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. உண்மையில், முகக் கவசங்கள் தங்களுக்கே உரிய அபாயங்களைக் கொண்டுள்ளன. ஏற்கனவே மருத்துவ நிலையில் உள்ள ஒரு நபர், ஒரு முகக் கவசத்தை அணிவது கவனக்குறைவாக நிலைமையை சிக்கலானதாக ஆக்கும். மக்கள் முகக் கவசத்தைத் தவறாக அணிவதாகவும், அவர்கள் தங்கள் முகத்தை அடிக்கடி தொடுவதால், நோய் தொற்று ஏற்படும் ஆபத்து அதிகரிக்கிறது என்றும், பல வல்லுநர்கள் குறிப்பிடுகிறார்கள்.

**இந்தியாவில் கொரோனாவைரஸ்: கை சானிடைசர்கள் பயனுள்ளவையா?**

- ❖ அவை ஆல்கஹால் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தாலும், அவற்றின் ஆல்கஹால் அளவு 60 விழுக்காட்டிற்கும் அதிகமாக இருந்தாலும் அவை பயனுள்ளவை ஆகும். அமெரிக்க நோய் கட்டுப்பாட்டு மையம் - கைகளை தண்ணீர் மற்றும் சோப்பு கொண்டு இயன்றவரை அடிக்கடி கழுவ பரிந்துரைக்கிறது. அவ்வாறு. கைகழுவும்போதுதான். கைகளில் உள்ள கிருமிகள் மற்றும் வேதிப்பொருட்களின் அளவு குறைகின்றது. சோப்பு மற்றும் தண்ணீர் இல்லையென்றால், குறைந்தபட்சம் 60 விழுக்காடு ஆல்கஹாலைக்

கொண்ட ஒரு கை கிருமிநாசினியைப் பயன்படுத்தினால், நோய் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பு குறையும் என்பதோடு, மற்றவர்களுக்கு நோய் பரவுவதும் தடுக்கப்படுகிறது. கை கழுவுதல் என்பது முதலாவது மற்றும் சிறந்த வழி என்றபோதிலும், அதை வெதுவெதுப்பான வெண்ணீரில் செய்வது நல்லது.

**கொரோனா வைரஸ் நோய்க்கிளர்ச்சி: கை குலுக்குவது பாதுகாப்பானதா?**

❖ கைகள் தொடர்பு மூலமாக கொரோனாவைரஸ் பரவக்கூடும். குறிப்பாக, நோய்த் தொற்று உள்ள நபர் தன் கைகளில் இருமியிருந்தாலோ அல்லது தும்மியிருந்தாலோ, இதற்கான அபாயம் அதிகம் ஆகும். பாதிக்கப்படுபவரின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு வரும் இந்த நேரத்தில், 14 நாட்கள் அடைகாக்கும் காலத்தில், ஒரு நபர் எந்த அறிகுறிகளுடனும் இருக்க மாட்டார் என்பதாலும், ஆனால் நோயைப் பரப்பக்வுடும் என்பதாலும், வாழ்த்து அல்லது வணக்கம் சொல்லும்போது கைகளை குலுக்காமல் இருப்பது நல்லது.

**நாவல் கொரோனா வைரஸ் எவ்வாறு பரவுகிறது?**

இந்த வைரஸ் பின்வரும் வழிகளில் பரவுகிறது

1. பாதிக்கப்பட்ட நபரின் சுவாசத் துளிகளுடன் நேரடித் தொடர்பு ஏற்படுவதால் (இருமல் மற்றும் தும்மலால் ஏற்படுகிறது)
2. வைரஸ் தொற்று உள்ள மேற்பரப்புகளைத் தொடுவதால். இந்த வைரஸ் மேற்பரப்புகளில் பல மணி நேரங்கள் உயிரோடு இருக்கக் கூடும். ஆனால் சாதாரண கிருமிநாசினிகள்கூட அதைக் கொல்ல முடியும்.

**கொரோனா வைரஸ் அறிகுறிகள் யாவை?**

❖ கொரோனா நோய்த் தொற்றுக்கு தன்னை வெளிப்படுத்தியிருந்தால், கோவிட்-19 அறிகுறிகள் மற்றும் அடையாளங்கள் தோன்றுவதற்கு இரண்டு முதல் 14 நாட்கள் வரை ஆகலாம். அவை பின்வருமாறு:
   1. காய்ச்சல்
   2. இருமல்
   3. மூச்சுவிடுவதில் சிரமம்

❖ கோவிட் -19 அறிகுறிகளின் கடுமை, மிகவும் மென்மையிலிருந்து கடுமையானதுவரை இருக்கலாம்.
❖ மிகவும் வயதானவர்கள், இதய நோய் போன்ற மருத்துவ நிலை உள்ளவர்கள் கடுமையான நோய் தாக்குதலுக்கு உள்ளாகும் அபாயத்தில் உள்ளனர்.
❖ இது இன்ஃப்ளுயன்ஸா போன்ற பிற சுவாச நோய்களுடன் காணப்படுவதைப் போன்றது.

எண்டமிக் (நோய்ப் பரவல்), எபிடமிக் (தொற்று) மற்றும் பாண்டமிக் (பெருந்தொற்று) என்றால் என்ன?

1. நோய்ப் பரவல்: ஒரு குறிப்பிட்ட பகுதியில் அல்லது மக்களிடத்தில் நிலையாக பரவியிருக்கும் ஒரு நோய். மலேரியா என்பது ஆப்பிரிக்காவின் சில பகுதிகளில் காணப்படும் ஒரு நிலையான கவலை ஆகும்.

2. தொற்று: ஒரு குறிப்பிட்ட சமயத்தில் பரவும் நோய்க்கிளர்ச்சியானது ஒரே சமயத்தில் பலரைத் தாக்கி, ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட மக்களிடையே பரவும் நிலை.
3. பெருந்தொற்று: ஒரு தொற்று, உலகம் முழுவதும் பரவுவது பெருந்தொற்று ஆகும்.
4. சிதறுண்டது: ஒரு நோய் பரவலாக, ஒழுங்கற்ற வகையில் தோன்றுமானால் அது சிதறலானது ஆகும்.

**கொரோனாவைரஸ் ஸ்டிரெயினை தனிமைப்படுத்துதல்**

- ❖ உலக அளவில் கோவிட்-19 வைரஸ் ஸ்டிரெயினை வெற்றிகரமாக தனிமைப்படுத்திய ஐந்தாவது நாடு இந்தியா ஆகும் - மற்ற நாடுகள் ஜப்பான். தாய்லாந்து. அமெரிக்கா மற்றும் சீனா - இதன் காரணமாக நாட்டில் மருந்துகள் தயாரிப்பு, தடுப்பூசி தயாரிப்பு மற்றும் அதிவிரைவு நோய் கண்டறியும் கருவிகள் ஆகியவற்றை நோக்கி முதல் அடி எடுத்து வைக்க ஏதுவாகியது.

**கொரோனா வைரஸ் ஸ்டிரெயினை இந்தியா தனிமைப்படுத்தியது பற்றி**

- ❖ ஒரு சிறிய தொகுதி கொரோனாவைரஸ் நேர்மறை நேர்வுகளில் இருந்து, அதனுடைய ஸ்டிரெயினை தனிமைப்படுத்த இந்தியாவால் முடிந்தள்ளது என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் (**Indian Council of Medical Research**) இயக்குநர் தெரிவித்துள்ளார். இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனை ஆகும்.
- ❖ நம்மிடம் தற்போது உள்ள ஸ்டிரெயின் 99.99 விழுக்காடு வூஹான் ஸ்டிரெயினைப் போன்றதே ஆகும்.
- ❖ இந்த நடவடிக்கைகள் வைரசை விரைவாகக் கண்டுபிடிப்பதிலும், அதைத் திறமையாக மேலாண்மை செய்வதிலும் இந்தியாவுக்கு பெரிதும் உதவி செய்யும்.

**இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் பற்றி**

- ❖ இந்தியாவில் உயிர்மருத்துவ ஆராய்ச்சியை உருவாக்குதல், ஒருங்கிணைத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான இந்தியாவின் உச்சபட்ச அமைப்பு, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் ஆகும். இது உலக அளவில் மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய மருத்துவ ஆராய்ச்சி அமைப்புகளில் ஒன்றாகும்.

**இது எவ்வாறு செயல்படுகிறது?**

- ❖ ஒரு நுரையீரல் செல்லைப் பாதிப்பதற்கு, அந்த செல்லின் சொந்த மரபணு பொருட்களைக் கொண்டே கொரோனாவைரஸ் அதன் ஜீன்களை உட்செலுத்த வேண்டும்.
- ❖ அந்த செல் வைரல் புரதத்தை உற்பத்தி செய்யத் தொடங்குகிறது. அவை மில்லியன் கணக்கான புதிய வைரஸ்களை உற்பத்தி செய்கின்றன.
- ❖ அந்த ஒவ்வொரு வைரல் புரதமும், வேலை செய்வதற்காக. தேவையான மனித புரதங்களில் சேர்ந்து கொள்கின்றன.

- ❖ சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், விஞ்ஞானிகள், வைரல் புரதங்களை உற்பத்தி செய்யும், மொத்தம் உள்ள 29 கொரோனா வைரஸ் ஜீன்களை ஆய்வு செய்தனர். அந்த ஆய்வாளர்கள் 332 மனித புரதங்களில் கொரோனா வைரசின் தாக்கத்தைக் கண்டறிந்தனர்.
- ❖ சில வைரல் பரதங்கள் வெறும் ஒரே ஒரு மனித பரதத்தை தாக்கின. இதர வைரல் புரதங்கள் ஒரு டஜன் மனித செல்லுலார் புரதங்களைத் தாக்கியதைக் கண்டறிந்தனர்.

## ஹைட்ராக்சி குளோரோகுயின் (Hydroxy Chloroquine):

- ❖ கடந்த வாரங்களில் குளோரோகுயின் என்ற பெயர் செய்திகளில் இடம் பிடித்திருந்தது. கொரோனாவைரசுக்கு எதிராக அதைப் பயன்படுத்துவது பற்றிய அனுமானங்கள் காரணமாகவே அது செய்திகளில் இடம் பிடித்திருந்தது.
- ❖ குளோரோகுயின் மலேரியாவை உண்டாக்கும் ஒற்றை செல் ஒட்டுண்ணியை அழிக்க வல்லது.
- ❖ சிக்மா-1 ஏற்பி எனப்படும் மனித செல்லுலார் புரதத்துடன் இது இணைய முடியும் என்பதை விஞ்ஞானிகள் நீண்ட காலமாக அறிந்து வைத்திருக்கிறார்கள். அந்த ஏற்பியும் இந்த வைரசின் இலக்காகும்.


### ஆன்டிபாடிகள் என்றால் என்ன?

- ❖ ஆன்டிபாடிகள், இம்யூனோகுளோபுலின்ஸ் என்றும் அழைக்கப்படுகின்றன. வெளியிலிருந்து மனித உடலுக்குள் அண்ணிய பொருட்கள் நுழைவதைத் தடுப்பதற்காகவே, நோயெதிர்ப்பு மண்டலத்தால் உற்பத்தி செய்யப்படும் ஒய்-வடிவ புரதங்கள் ஆகும்.
- ❖ ஒரு அண்ணிய பொருள் உடலுக்குள் நுழைந்தால், இந்த நோயெதிர்ப்பு அமைப்பு உடனடியாக செயலில் இறங்குகிறது.
- ❖ உள்ளே நுழையும் பொருட்கள் ஆன்டிஜென்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவை வைரஸ்களாகவோ, பாக்டீரியாக்களாகவோ அல்லது வேறு ஏதேனும் வேதிப்பொருட்களாகவோ இருக்கலாம்.
- ❖ ஒரு உடலில் ஒரு ஆன்டிஜென் கண்டுபிடிக்கப்பட்டால், அந்த ஆன்டிஜென்னை அழிப்பதற்காக, நோயெதிர்ப்பு மண்டலம் ஆன்டிபாடிகளை உருவாக்குகின்றன.

### ஆன்டிபாடிக்களின் வேலைகள்

- ❖ ஆன்டிபாடிகள் நோயெதிர்ப்பு மண்டலத்தில் காவலர்களைப் போலவே செயல்படுகின்றன.
- ❖ அவை ஆன்டிஜென்களைக் கண்டுபிடித்து அவற்றுடன் ஒட்டிக் கொள்கின்றன. மேலும், நோயெதிர்ப்பு மண்டலத்திற்கு சரியான வகை ஆன்டிஜெனின்அடையாளம் காணப்படுவதால் அவை அழிக்கப்படுகின்றன.
- ❖ ஒவ்வொரு ஆன்டிபாடியும் ஒரே ஒரு ஆன்டிஜென்னுக்காகவே உற்பத்தி செய்யப்படுகிறது. அது சிறப்பு ஏற்பிகளுடன் பொருத்தப்பட்டிருக்கிறது, அவை அந்த ஆன்டிஜென்னுடன் மட்டும் பிணைக்கும்.
- ❖ உதாரணமாக சிக்கன்பாக்ஸ் வைரஸை அழிக்க உதவுவதற்காக ஒரு குறிப்பிட்ட ஆன்டிபாடி உருவாக்கப்படுவதாக இருந்தால், அந்தக் குறிப்பிட்ட ஆன்டிபாடி மட்டுமே ஒரு சிக்கன்பாக்சை தாக்க முடியும்.

# COVID-19 TESTS – A REPORT



**ந்தை நோய் எதிர்ப்பு சக்தி (Herd Immunity) என்றால் என்ன? ஒரு அறிக்கை**

- ✓ இந்தக் கோட்பாட்டின்படி, போதுமான எண்ணிக்கையிலான மக்கள் நோய்வாய்ப்பட செய்யப்படுகிறது, இதன்மூலம், அந்தத் தொகுப்பு நோயெதிர்ப்பு தன்மை உள்ளதாக ஆகிவிடும், எனவே, வைரசால் ஒரு புதிய நோயாளியைக் கண்டுபிடிக்க இயலாமல் போய்விடும்.
- ✓ 'மந்தை' என்ற சொல் ஒட்டு மொத்த சமுதாயத்தைக் குறிக்கும், அதாவது ஒட்டுமொத்த சமுதாயமும் பாதிக்கப்பட்டால், அவர்கள் இந்த நோய்க்கு எதிராக 'நோயெதிர்ப்புத் தன்மையை' பெற்றுவிடுவார்கள்.

